Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

பக்கம் – 16

நாதம்—14 | வெள்ளி—10 | 02–08 மே 2003

## எம்மை வளர்த்து விட்ட காரணிகளை இனியும் ஆக்கிரமிப்பாளர்கள் புரிந்து கொள்வார்களா?!



வெற்றிப்பெருவிழாவில்...

## மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 02.05.2003

# கடலாதிக்கத்திற்கான உரிமையும் மேலாதிக்க சக்திகளின் பார்வையும்

இந்து சமுத்திரப் பிராந்தியம் இப்போது உலக வல்லாதிக்க சக்திகள் அனைத்தினதும் கழுகுப்பார்வைக்கு இலக்காகியுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் மீதான கடலாதிக்கம் என்பது தென்னாசியப் பிராந்தியத்தை மட்டுமல்லாது உலகின் கடல்வழி விநியோகப்பாதையின் பிரதான கேந்திர முக்கியத்துவமிக்க பிராந்தியங்கள் அனைத்தையுமே தமது கட்டுப்பாட்டுக்குள் அல்லது கண்காணிப்புக்குள் வைத்திருக்கும் மூலோபாயத்திட்டங்களுக்கு மிகமிக அவசியம் என்பதை இந்த வல்லாதிக்க சக்திகள் அனைத்தும் தொலைநோக்குடன் உணர்ந்தே உள்ளன.

ஆசியப் பிராந்திய நாடுகளான சீனாவும், இந்தியாவும் தத்தமது ஆதிக்க வலுவை, இந்து சமுத்திரம் மற்றும் அதனோடு தொடர்புடைய கடற்பிராந்தியங்களில், அப்பகுதிகளில் உள்ள தமது நட்புநாடுகளின் அனுசரணையுடன், தொலை நோக்கு சிந்தனையுடன் கூடிய அணுகு முறைகள் மூலம் வெகு காலத்திற்கு முன்பிருந்தே வலுப்படுத்தத் தொடங்கிவிட்டன.

எந்த வித ஆர்ப்பாட்டமுமின்றி 'சீனா' இதில் கணிசமான அளவுக்கு வெற்றியீட்டியுள்ளமையானது, இந்தியாவின் எதிர்கால புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நலன்களுக்கு அச்சுறுத்தல் என்றே அது உணர்ந்து வருதல் இப்பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தை மேலும் விஸ்தரித்து, வலுவூட்டி ஸ்திரப்படுத்த இந்தியா விழிப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

சீனாவின் கடலாதிக்க விஸ்தரிப்பின் வலுத்தன்மையானது அதன் ஆசிய நாடுகள் மீதான ஆளுமையை மேலும் அதிகரிக்கச் செய்துவிடும் என்ற அச்சம் இந்தியாவுக்கு மட்டுமல்ல, 'அமெரிக்காவுக்கும் மிகமிக அதிகம்.

ஆகவே அமெரிக்கா, முரண்பாடுகள் பல இருந்தாலும் சீனா மற்றும் இந்தியாவுடனான ராஜீக உறவுகளில் சிக்கல்கள் ஏற்படாது நட்புறவைப் பேணும் உத்திகளைக் கையாண்டு வர்த்தகம், அபிவிருத்தி, மற்றும் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் நெருக்கமான உறவு களைப் பேணும்வகையில் உடன் படிக்கைகளையும் மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இவையாவும் ராஜதந்திர, இராணுவ தந்திர, மூலோபாயங்களின் அடிப்படையிலானதாகும்.

ஆளுக்காள் பொறி வைப்பதை இந்த நாடுகள் யாவும் ஒருவருக்கொருவர் உணர்ந்து கொண்டுதான் செயற்படுகின்றன என்பதும் இதில் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தநிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப்புலிகளின் கடற்புலிஅணியை ஒரு கடற்படைப் பிரிவாக இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும் என தெரிவித்த ஆலோசனை பெரும் வாதப்பிரதி வாதங்களை ஏற்படுத்திய சர்ச்சைக்குரிய விடயமாகிவிட்டது.

இந்த ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் கூட, இது ஏற்படுத்திய எதிரொலிகள் ஆழமானவையாகும். இதற்கு மாற்றாக முன்வைத்துள்ள 'கடற் கண்காணிப்புக்குழு' தொடர்பான யோசனையும் பல அதிர்வலைகளைப் பலதரப்பிலும் ஏற்படுத்தியுள்ளது.

முதலில் முன்வைத்த ஆலோசனைகள் கடற்படை, எதிர்க்கட்சிகள் போன்றவற்றால் கடுமையாக எதிர்த்து நிராகரிக்கப்பட்ட வேளையில் அயல் நாடான இந்தியா இது தொடர்பான பின்னணியை முழுமையாக ஆராய்வதில் தீவிர அவசரம் காட்டியதாகத் தெரிய வந்துள்ளது.

நோர்வே கண்காணிப்பாளர்களின் இந்த ஆலோசனைகளின் தேசிய, சர்வதேசிய அரசியல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உள்நோக்கங்கள் பற்றி இந்தியா ஆய்வு செய்ததாகவும் இது தொடர்பாக இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகள் இந்தியாவுக்கு விளக்கியதாகவும் தெரிகிறது.

கடற்புலிகளின் கடலாதிக்க உரிமையை அங்கீகரிக்க கண்காணிப்புக்குழு யோசனைகளை முன்வைக்க காரணமான அவசியம் என்ன என்ற கேள்விக்கான விடையை ஆராய்வது இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியமானது என்றும் ஆலோசனை கூறப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இந்தியா, இலங்கையில் அமெரிக்காவின் தலையீட்டை முறியடிக்க, இலங்கை விவகாரத்தில் தலையிடவேண்டும் என்று ஜே.வி.பி கோரியதை இங்கு நினைவுபடுத்துதல் அவசியமாகும்.

இப்போது கடற்கண்காணிப்புக் குழுவில் இந்தியாவையும் சேர்க்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் ஆலோசனை தெரிவித்ததையும் இப்பின்னணியில் பார்த்தல் அவசியமாகும். இந்தியாவிலுள்ள சில குறிப்பிட்ட தரப்பினரின் ஆசீர்வாதத்துடனேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக ரெலோ இயக்கப்பிரமுகர் சிறிகாந்தா கூறியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆக கடற்புலிகளின் கடலாதிக்க உரிமை தொடர்பான விவகாரம் ஒரு சர்வதேச ஆய்வுக்குரிய பிரச்சினையாக ஆகியுள்ளமை தவிர்க்க இயலாத ஒன்றேயாகும் எது எப்படியானாலும் எமது கடற்பகுதிகளில் நாம் சுதந்திரமாக நடமாடும், எமது மக்கள் சுதந்திரமாக தொழில் செய்யும் உரிமையை எவருக்கும் மறுப்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.



## தூரனின் பார்வை

# பேச்சுக்கள் அர்த்தமுள்ளதாகத் தொடர செயல்முறைப்படுத்தல்களே அவசியம்...

சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் இருந்து விடுதலைப்புலிகள் தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்தமையானது சிறிலங்காவில் தேசிய மட்டத்திலும் சர்வதேசிய அளவிலும் ஏற்படுத்திய எதிரொலிகள், சமாதானத்தையும் அதன் தொடர்பான அமைதிநிலையையும் கடந்த ஓராண்டிற்கும் அதிகமான காலப்பகுதிக்குள் சகல தரப்பினரும் எவ்வாறு அனுபவித்து வந்துள்ளார்கள் என்பதை மிகவும் துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளன.

போர் என்பது, ஒரு இனத்தின் இருப்பை, அந்த இனத்தை ஆட்சிசெய்வோர் சிதைத்து அழித்து, அதற்கேயான தனித்துவ அடையாளங்களை, கலாசார மேன்மையை, மொழிவழி உரிமைகளை, பாரம்பரிய வாழ்நில உடைமைகளை நிராகரித்து நிர்மூலமாக்க முனைப்புக் கொள்ளும்போது, அந்த இனம் தனது சுயத்தன்மையைப் பாதுகாக்க எடுக்கும் தவிர்க்க முடியாத இறுதிமுயற்சியேயாகும்.

அழிவுகளையும், அவலங்களையும் சந்திக்கநேரிடும் எனத்தெரிந்தும் கூட, முழுமையான அழிவினின்றும் நிரந்தரமான அவலத்தினின்றும் தமது தலைமுறையைப் பாதுகாக்க, தமது வாழ்வியல் அரசியல் உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்ள, விடுதலை - சுதந்திரம் என்ற சொற்களின் மகோன்நத அர்த்தத்தை தமது வாரிசுகளுக்கும், வரலாற்றிற்கும் உணர்த்த ஓர் இனம் இறுதியாக எடுக்கும் முடிவின் ஆத்மார்த்தமான உறுதியே போரின் இலக்கைத் தீர்மானிக்கின்றது.

கடந்த இரு தசாப்தகாலத்திற்கும் அதிகமான தமிழ் மக்களின் வரலாறு, இத்தகையதோர் உன்னத இலட்சிய இலக்குடன் கூடிய போரின் வீரவரிகளாலேயே எழுதப்பட்டு வந்துள்ளது.

இந்த வீர வரலாற்றுவரிகளின் உயிர்த்துடிப்பாக, நிரந்தரமாய் நிலைபெற்றுள்ள அளப்பரிய தியாகங்களின் அர்ப்பணிப்பின் பெறுமதி விடுதலை, சுதந்திரம் என்ற வார்த்தைகளுக்குரிய அர்த்தத்தை எம்மக்களுக்கு உரிமையாக்கிக் கொடுப்பதிலேயே அடங்கியுள்ளது.

இதில் மாறுபட்ட கருத்தினை அடுத்தவரை அண்டிப்பிழைப்பு நடத்தும் கருங்காலித் தனங்கொண்ட கைக்கூலிகளான அடிமைச் சிறுமதி கொண்ட மானிடப் பாதகர்கள் மட்டுமே கொண்டிருக்கமுடியும்.

ஒரு நியாயமான போர், நியாயமான தீர்வொன்றை இலக்காகவைத்து, அத்தீர்வு குறித்து அழிக்கப்படும் நம்பிக்கையின் அடிப்படையிலான உத்தரவாதத்தின் பெயரில், பரஸ்பர விசுவாசத்துடன் கூடிய புரிந்துணர்வுத்தளத்தில் உறுதியாக நின்றுகொண்டே நிறுத்தப்படுவதுதான் போரியல் மரபாகும்.

இன்றைய போர்நிறுத்தச் சூழலும், புரிந்துணர்வு உடன்பாடும் இத்தகைய தன்மைகளைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதை தமிழ் மக்களதும் விடுதலைப் புலிகளதும் எதிர்பார்ப்புடன்கூடியவிருப்பாகும்.

தீர்வைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்புக்குரியவர்கள் 'போரினை' ஓர் இனத்தின் மீது திணித்து அவர்களும் அதைஎதிர்கொள்ள வேண்டிய தவிர்க்கமுடியாத சூழலை உருவாக்கிவிட்ட பேரினவாத ஆக்கிரமிப்பு சக்திகளேயாவர்.

அத்தகையதோர் தீர்வை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும், பாதிப்புக்குள்ளான மக்களின் முடிவேயாகும்.

அந்தமுடிவு தீர்வின் நியாயத்தன்மையுடனும் அதற்கான உத்தரவாதத்தின் அடிப்படையிலுமே அமைவதாக இருக்கும்.

போர் நிறுத்தத்தின் அடிப்படையிலான புரிந்துணர்வு உடன்பாடென்பது வெறுமனே தற்காலிக நிம்மதிப் பெருமூச்சை விடுவதற்கான குறிக்கோளைக் கொண்டதல்ல....

வெறுமனே பேச்சுவார்த்தை மேசைகளைச் சுற்றி உக்கார்ந்து காலத்தைக் கடத்தி திட்டவரைபுகளைப் போட்டுக் கொண்டே காய்களைச் சாதுரியமாக நகர்த்தும் சதுரங்க விளையாட்டுமல்ல. தற்காலிக சலுகைகளை எதிர்பார்த்து, தமிழ் மக்கள் இந்த இரு தசாப்தகால போராட்டத்தை நடத்தவில்லை என்பதை சமாதானத்தையும், பேச்சுவார்த்தையையும் வலியுறுத்தும் சர்வதேச சக்திகள் அனைத்தும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

பேச்சுவார்த்தைகள் பாதிப்புக்குள்ளான உரிமைகள் மறுக்கப்பட்ட, அகதிகளாக்கப்பட்ட, ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் விடிவு குறித்ததாக அமைந்தால் மட்டுமே அதில் அர்த்தமேதும் இருக்க முடியும்.

ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும் அடக்கு முறையை கைக்கொள்ளும் ஆட்சியாளர்களினதும் அபிலாசைகளைப் பாதுகாக்கவும் அவர்களது அபிப்பிராயங்களை நியாயப் படுத்தவும் முனையும் எவரும் பாதிக்கப் பட்டவர்களுக்கான நியாயத்தைப் பேசுவார்கள் என நம்புதல் சாத்தியமேயில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டுமென விடுதலைப்புலிகளைக் கேட்டுக் கொள்வோரும், நிர்ப்பந்திப்பது போன்ற தொனியில் அறிக்கைவிடுவோரும், புரிந்துணர்வு உடன்பாட்டின் சரத்துக்களில் ஒப்புக் கொண்ட பல விடயங்களை இன்னமும் அமுல் செய்யாது இழுத்தடித்து காலங்கடத்திவரும் அரசாங்கத்தை, அவற்றை நடைமுறைப்படி, ஒப்பந்த விதி முறைகளின் படி அமுல் செய்ய நிற்பந்திக்க பின்னடிப்பது தான் வேதனைக்குரிய விடயம். சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையை தமிழ் மக்கள் இழக்கவைப்பதும். பேச்சுவார்த்தையை ஒருகாலம்கடத்தும் கைங்கரியமாக உணரவைப்பதும், இவ்வாறான பக்கச்சார்வு அணுகுமுறைகளேயாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக சமாதான நகர்வுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக உலகநாடுகளை நம்பவைக்க ஓடோடி பிரச்சாரங்களை மேற்கொண்டு உதவிவழங்கும் நாடுகளிடம் 'கோடிக்கணக்கில்' 'தருமம்' கேட்டு கையேந்திவரும் அமைச்சர் G.L. பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட போன்றவர்கள் நாடு திரும்பும் போதெல்லாம், விடுதலைப்புலிகள் மீண்டும் போரை ஆரம்பித்தால் இந்தியாவும் அமெரிக்காவும் எமக்கு உதவும் என்றும், அமெரிக்க கடற்படையும் விமானப்படையும் சிறிலங்காப் படையினருக்கு நவீன பயிற்சிகளை வழங்கவுள்ளது என்றும். 'எந்தச் சவாலையும் சந்திக்க படைகள் தயாராக இருக்க வேண்டும்.' என்றும் சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளார்கள் என்றும் வீரவசனங்களைப் பேசி வருவதுதான் சகிக்கமுடியாத உளறல்களாக இருக்கின்றது.

இவர்களின் இத்தகைய அர்த்தமற்ற பிதற்றல்கள் மூலம் அப்பாவித்தென்னிலங்கை மக்களை திருப்திப்படுத்தவோ, ஏமாற்றவோ அல்லது உற்சாகப்படுத்தவோ முனையலாம்.ஆனால் தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் இதன்மூலம் அச்சுறுத்த முயல்வதுதான் வெறுப்பூட்டும் அபத்தமான விடயங்களாகும்.

பேசுவது ஒருபுறம் இருக்கட்டும்.... அவர்களின் மூன்றாந்தர அரசியல்பண்பு அதுவென்று விட்டுவிட்டாலும், புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிகளுக்கமைய வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற இழுத்தடிப்பதும், அலட்சியம் காட்டுவதும் தான் சிறிலங்காவின் கடந்தகால அரசுகள் சமாதான காலங்களில் கையாண்ட ஏமாற்று மூலோபாயங்களை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகின்றது.

தமிழ்மக்கள். தொடர்ந்தும் சலுகையடிப்படையில் 'பேக்காட்டி'

காலத்தைக் கடத்திவிடலாம் என அரசு கருதினால் சமாதானம் என்பதற்கான அர்த்தத்தை அது சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே கருதவேண்டும்.

புரிந்துணர்வு உடன்பாட்டு விதிகள் அறிக்கைகளில் எழுதப்படுவதற்காக மட்டும் தான் என அரசு கருதுகின்றதா?

சர்வதேசசமூகமும் அதனை அங்கீகரிக்கின்றதா? பேச்சுவார்த்தைக் கதிரைகளில் அமர்ந்து பேசுவதற்காக மட்டும் உலகம் சுற்றிவந்து புன்னகைத்து கைகுலுக்கி வெறுமனே நம்பிக்கை வார்த்தைகளைக் கூறி காலம் கடத்துவதன் மூலம் அரசுதனது பதவிக் காலத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றின் மூலம் தமிழ் மக்களின் இயல்புவாழ்க்கைக்குக் கூட எந்தவிதமான விடிவும் கிடைக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

சமாதான கால சலுகை வரவுகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் இயல்புவாழ்வு இன்னமும் நிமிரவேயில்லை. மேலும் தெளிவாகக் கூறுவதானால் அது மேலும் கூனிக் குறுகவே செய்துள்ளது.

தமது சொந்த மண்ணில், சொந்த வீடுகளில்,அன்னிய ஆக்கிரமிப்பின் ஆதிக்கப் பார்வைகளின் முன்னால்அவற்றை எதிர் கொள்ளமுடியாது கூனிக் குறுகிப் போகிறார்கள்.

மீள்குடியேற துடிக்கும் மக்கள் தங்கள் சொந்தவீட்டின் படிகளில் காலடிவைக்க முடியாத நிலையில் மீண்டும் வன்னியில் தமது தற்காலிக 'வனவாசத்திற்கு' திரும்பும் அவலத்தை இந்த புரிந்துணர்வு உடன்பாட்டின் சரத்துக்களால் தீர்க்க முடியவில்லையாயின் அதனால் என்னபயன்?

தொடர்ந்து பேசுவதற்குமுன், ஏற்கனவே பேசப்பட்டவை வெறும் பேச்சாக இருந்து விடக்கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் உணர்த் தப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

சர்வதேச சமூகமும், அரசும் இணைந்து இதனைப் புரிந்து கொண்டு ஏற்கனவே பேசப்பட்ட விடயங்களை நடை முறைப் படுத்தப்படவேண்டிய அவசியத்தைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது.

செயலாக்கத்திற்கு உட்படாத விடயங்களைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை விட, பேசப்பட்ட விடயங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதன் மூலமே பேச்சுவார்த்தைகளை அர்த்தமுள்ளதாக்க முடியும். சர்வதேச நாடுகளே... இந்த விடயத்தில் உங்களுக்கு முரண்பாடான கருத்துக்கள் ஏதும் இருக்கிறதா?

தனிமைபோல், பழகுவதற்கு இனிய தோழர் எவரையும் நான் கண்டதில்லை. - ஹென்றி டேவிட் தோரோ

# ஏழாங்கட்டப் பேச்சுக்களைப் பலியிட்ட வொஷிங்ரன் மாநாடு

நிலாந்தன்

ஆறாங்கட்டப்பேச்சுக்களின் போது யப்பானில் நோர்வேயின் அனுசரணையாளர் ஒருவர் தமிழ் ஊடகவியலாளருடன் ரிலாக்ஸ் ஆக இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்... அப்போது ஒரு ஊடகவியலாளர் கேட்டார். "வொஷிங்ரன் மாநாட்டுக்கு புலிகள் அழைக்கப்படுவார்களா?" என்று. அதற்கு அந்த நோர்வீஜியர் சிரித்துக்கொண்டே சொன்னாராம். "ஏன் நான் கலந்து கொள்கிறேன் தானே புலிகளின் பிரதிநிதி போல ...." என்று.

பகிடி பகிடியாகச் சொல்லப்பட்ட அந்தப்பதில் மூலம் ஒரு சீரியஸான கேள்வியை மிகவும் ராஜதந்திரமாக எதிர்கொண்டு விட்டார் அந்த நோர்வீஜியர்.

நான் உங்களுடைய ஆள் என்று அவர் சொன்ன பிறகு மறுகேள்விக்கு இடமில்லைத் தானே?

இது சமாதானம் செய்வதில் அவர்கள் எத்துணை தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதாக இருக்கலாம்.

ஆனால் வொஷிங்ரன் மாநாட்டின் எதிர்வினைகள் புலிகளிடம் இருந்து இத்துணை காரமாக வருமென்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லைப்போற் தெரிகிறது.

வொஷிங்ரன் மாநாட்டைக் குறித்து படித்த சிங்களவரில் ஒரு பகுதியினர் மிகவும் சந்தோசமாக இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 14 மாதகால சமாதான முயற்சிகளில் புலிகளின் மீது பிரயோகிக்கப்பட்ட ஆகப்பெரிய சர்வதேச அழுத்தம் இதுவென்று அவர்கள் நம்புகிறார்கள்.

சமீபகாலங்களில் சிங்களவருக்குச் சாதகமாக அமெரிக்கா காட்டிய மிகப்பிரகாசமான ஒரு சமிக்ஞை இதுவென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

96இல் அமெரிக்காவிடம் இருந்து ஒரு நைட் விஷனைக்கூட வாங்கமுடியாத அளவுக்கு சிறிலங்கா தனிமைப்பட்டிருந்தது என்றும் ஆனால் இன்று அதுவும் சமாதானம் செய்யும் காலத்தில் ஹெலிகொப்ரர் தாங்கிக்கப்பல் ஒன்றை அமெரிக்கா தந்திருக்கிறது என்றும் ஒரு சிங்கள விமர்சகர் கூறுகிறார்.

வொஷிங்ரன் மாநாடு சிங்களவருக்கு தரப்பட்ட ஒரு புத்தாண்டு பரிசு என்று சில கொழும்பு மீடியாக்கள் கருதுவதாகத் தெரிகிறது.

ஜே.ஆர் ஜெயவர்த்தனவுக்கு பின் அமெரிக்காவுடன் உறவுகளை நெருக்கமாக்குவதற்கு என்று மிகத் தோதான ஒரு நபர் - மிலிந்த மொறகொட - கிடைத்திருப்பதாகவும் அவரைப்போன்ற ஒரு அமெரிக்க விசுவாசி அண்மைக்காலங்களில் கொழும்பு மைய அரசியலில் தோன்றவில்லை என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

மொறகொடவின் மனைவி ஒரு அமெரிக்கப்பெண் என்பது மேலதிக பிளஸ் பொயின்ற்.

வொஷிங்ரன் மாநாட்டில் பேசிய ஆர்மிரேஜ் மொறகொடவை "எனது நண்பர்" என்று அழைத்தாராம்...


இதெல்லாம் சேர்த்து படித்த சிங்களவரை அமெரிக்கா எங்களுடைய பக்கம் தான் என்று நம்பவைத்து விட்டனபோலும்.

இதை அண்மையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் கூறிய கருத்துக்களும் உறுதிப்படுத்துவது போல இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

குறிப்பாக, ஈராக்கின் வீழ்ச்சிக்குப் பிந்திய உலகில் அமெரிக்கா போராடும் இனங்களின் மீது தன்னிச்சையாக அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும் என்ற ஒரு முடிவுக்கு பலர் வந்து விட்டது போலத் தெரிகிறது.

ஈராக்கில் ஏற்கனவே போராடிக்கொண்டிருந்த குர்திஷ்களுக்கு அமெரிக்கா எத்தகைய ஒரு தீர்வைத் தரப்போகிறது என்று காத்திருந்து பார்த்து முடிவெடுக்கக்கூட அவர்கள் தயாரில்லை.

அமெரிக்கா புலிகளின் மீது



அழுத்தத்தை பிரயோகிக்கிறது என்பதே அவர்களுக்குப் போதுமானதாயிருக்கிறது; சந்தோசமாயிருக்கிறது.

இது ஒன்றைக்காட்டுகிறது. ஈழப்போரில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு எனப்படுவது தமிழர்களை எதுவிதத்திலாவது பணிய வைப்பதாகவே இருக்க வேண்டும் என்ற அவர்களுடைய விருப்பத்தையே.

அதாவது யுத்தமோ சமாதானமோ எதுவோ அது தமிழர்களை தோற்கடிப்பதைத் தான் அதன் இறுதி இலக்காகக் கொண்டிருக்கிறது என்பது.

முன்பு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னால் இருந்த மனோநிலையும் இத்தகையதே.

முன்பு இந்தியாவையும் புலிகளையும் மோதவிட்டவர்கள் இப்பொழுது அமெரிக்காவும் புலிகளும் முரண்படவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களா?

உண்மையில் வொஷிங்ரன் மாநாடு சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை ஒரு சறுக்கலே.

சமாதானம் என்றால் என்ன என்ற அதன் மெய்யான அர்த்தத்தில் பார்த்தால் வொஷிங்ரன் மாநாடு ஒரு தோல்வியே.

அதில் சிங்களவர்கள் மகிழ்ச்சியடைவதற்கு எந்தவொரு வெற்றியும் கிடையாது.

ஏனெனில் மெய்யான சமாதானத்தில் ஒரு தரப்பு மட்டும் வெற்றிபெறமுடியாது. அங்கே வெற்றியெனப்படுவது இரு சமபங்காளிகளுக்கிடையில் பங்கிடப்படுவதாய் இருக்கும். ஏதாவது ஒரு தரப்பு தான் தோற்றுப்போனதாகவோ அல்லது தனிமைப்படுத்தப்பட்டதாகவோ கருதும் ஒரு நிலைக்கு மெய்யான சமாதானத்தில் இடமில்லை.

யுத்தத்தில் தான் ஒரு தரப்புக்கு மட்டும் வெற்றி கிடைப்பதுண்டு. அதில் வென்றவர்கள் தோற்றவர்களை ஒன்றில் அழித்து விடுகிறார்கள் அல்லது முறியடித்துவிடுகிறார்கள்.

எனவே ஒரு தரப்பு மட்டும் வெற்றிபெற்று விட்டதாகத் திருப்திப்படும் வொஷிங்ரன் மாநாடு சமாதானத்தைப்பற்றிய மிகச் சரியான வரைவிலக்கணத்தின் படி ஒரு தோல்வியே. அதாவது புலிகளை அந்நியப்படுத்திவிட்டு அதை ஒரு வெற்றி என்று கூறித்திரிய முடியாது.

விசுவாசமாகச் சமாதானம் செய்யும் எவரும் இதைக்குறித்து சந்தோசப்படமுடியாது.

அந்த மாநாடு அதன் நேரடி விளைவாக ஏழாவது கட்டப் பேச்சுக்களைப் பாதித்து விட்டது.

அதை ஒரு புத்தாண்டுப் பரிசு என்று யாராவது கொண்டாடுவார்களாய் இருந்தால் அவர்கள் இந்த ஆண்டு ஒரு யுத்த ஆண்டாக மாறவேண்டும் என்று பிரார்த்திப்பவர்களாய்த் தான் இருக்க முடியும்.

அண்மையில் ரைம்ஸ் ஏசியா சஞ்சிகை 2003 ஆம் ஆண்டின் ஆசிய நாயகர்களில் ஒருவராக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்துள்ளது. ஆசியாவில் இருந்து மொத்தம் 29 பேர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

"புலிகளுடனான சமாதானத்துக்கான தனது குறிக்கோளில் ஜனாதிபதிக்கும் ஏனைய பலமான சக்திகளுக்கும் எதிராக நின்று பிடித்தமைக்காக..." அவர் இப்படி ஆசிய நாயகராகத் தெரிவு செய்யப்பட்டதாக ரைம்ஸ் ஏசியா சஞ்சிகை கூறியுள்ளது.

ரைம்ஸ் ஏசியாவின் தெரிவு சரியா அல்லது பிழையா அல்லது அந்தத்தெரிவின் பின்னால் இருந்த உள்நோக்கங்கள் பக்கச்சாய்வுகள் எவையெவை என்பது பற்றி விவாதிப்பது இப்பத்தியின் நோக்கமல்ல. கடந்த பல ஆண்டுகளில் வேறெந்தச்சிங்களத் தலைவருக்கும் இப்படியொரு ஆசிய நாயகர் அந்தஸ்து தரப்படவில்லை என்பதே இங்கு முக்கியம்.

இம்முறை ரணிலுக்கு அப்படித் தரப்பட்டிருப்பது என்பது நிலவும் சமாதானத்தின் பேறாகவே கிடைத்தது என்பது அதைவிட முக்கியம்.

ஆனால் சமாதானம் என்று வரும் போது தனிய ரணில் மட்டும் அதைச் சாதித்துவிட முடியாது; புலிகளும் வேண்டும்.

புலிகளைத்தவிர்த்துவிட்டு இச்சிறு தீவுக்கு சமாதானமும் இல்லை. யுத்தமும் இல்லை. அபிவிருத்தியும் இல்லை. மீட்சியும் இல்லை.

ரணில் இப்படி 2003 இன் ஆசிய நாயகராக தெரிவாகியது குறித்த சந்தோசம் அதிக நேரம் நீடிக்கவில்லையாம். பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்குவது என்று புலிகள் அறிவித்தபின் அந்தச் சந்தோசத்தை அவரால் கொண்டாட முடியவில்லையாம்.

இதனால் தான் அவர் அவசரஅவசரமாக அமைச்சர் சந்திரசேகரனை கிளிநொச்சிக்கும் பிரட்மன் வீரக்கோனை யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பினவராம்.

ஆனால் எது எவ்வாறாயினும் வொஷிங்ரன் மாநாடு ஏழாங்கட்டப்பேச்சுக்களை பலியிட்டு விட்டது. இதற்கு ரணிலும் பொறுப்பு; இடையில் நின்ற நோர்வேயும் பொறுப்பு; அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் பொறுப்பு.

பிந்திக்கிடைத்த சில தகவல்களின்படி இனி இது போல புலிகளைத் தவிர்த்து விட்டு எந்தவொரு சந்திப்பும் நடக்காது என்ற உறுதிமொழியை புலிகளுக்குத் தர ரணில் தயாராக



இருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகவல் உண்மையாய் இருந்தால் சுமார் 16 ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய மாமன் ஜெயவர்த்தன செய்த தவறை அவர் செய்யத் தயாரில்லை என்று எடுக்கலாமா?

ஜெயவர்த்தன முன்பு இலங்கை -இந்திய உடன்படிக்கையின் கீழ் சமாதானத்தின் பேரால் புலிகளையும் இந்தியாவையும் மோதவிட்டார்.

இந்த மோதலின் அதிர்வலைகள் இப்பொழுதும் இந்தப்பிராந்தியத்தில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன.

வொஷிங்ரன் மாநாடு கூட அதன் தொடர்ச்சி தான்.

இலங்கைத் தீவுக்கு வெளியே புலிகளைத் தடைசெய்யும் ஒரு போக்கு முதலில் இந்தியாவிலிருந்தே தொடங்கியது.

புலிகள் வர முடியாத வொஷிங்ரனில் மாநாடு நடந்தால் இந்தியா கலந்து கொள்ளும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்தபடியால் தான் மாநாட்டை வேறொரு நாட்டில் நடத்துவதற்கு சமாதானம் செய்யும் நாடுகள் விரும்பவில்லை என்று எடுக்கலாமா?

அதாவது இந்தியா சமாதான முயற்சிகளில் அந்நியப்பட்டுப் போவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக.

ஆனால் இதன் எதிர்வினைகளோ வேறு விதமாக அமைந்து விட்டன.

இப்பொழுது ரணிலின் முறை

அவரும் அவரது மாமனைப்போல வெளிச் சக்திகளின் உதவியோடு சமாதானத்தை ஒரு பொறியாகப் பாவிப்பாரா இல்லையா என்பதே இப்போதுள்ள கேள்வி.

அவர் பதவிக்கு வந்த போது கூறினார் - அரசியலில் புதிய சிந்தனைகள் வேண்டும் என்று. அவ்வாறாயின் தீவிர அமெரிக்க விசுவாசியான அவரது மாமனைப் போலன்றி அவர் வேறுவிதமாகச் சிந்திக்க வேண்டி யிருக்கும்.


சில சமயம் அவர் அப்படிச் சிந்திப்பாராயிருந்தால் ஆசி யாவின் நாயகராய் மட்டுமல்ல உலகின் நாயகராயும் வர முடியும்.

முன்பு ஆதர். சி. கிளார்க் ஒரு தீர்க்க தரிசனம் கூறியிருந்தார். அதன்படி சமாதானத்துக்கான நோபல் பரிசு சந்திரிகாவுக்கு கிடைக்கும் என்று.

ரணில் விக்கிரமசிங்க சமாதானத்துக்காகவே சமாதானம் செய்யவேண்டும் என்று விசுவாசமாக உழைப்பாராயிருந்தால் சில சமயம் ஆதர்.சி. கிளார்க் கூறிய நோபல் பரிசு அவருக்கே கிடைக்கக்கூடும்.

# நறுக்கென...

## விஜேவீரவை கேலிசெய்யும் வீரவன்சவின் இந்தியப்பற்று



**இலங்கையின்** உள்விவகாரங்களில் அந்நிய சக்திகள் அளவுக்கு அதிகமாகவே ஊடுருவிச் செயற்பட்டு வருகின்ற தென்றும், ரணில் விக்கிரமசிங்கவின் அரசு அமெரிக்காவினதும், விடுதலைப் புலிகளதும் அபிலாசைகளை நிறைவேற்றிவைப்பதிலேயே அதிக அக்கறை காட்டுவதாகவும் இது சிறிலங்காவின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் சிதைக்கும் செயல் என்றும் புலம்பியிருகிறார் விமல்வீரவன்ச என்ற ஜே.வி.பிக் காரர்.

ஜே.வி.பியினருக்கு அமெரிக்காவையும் பிடிக்காது, விடுதலைப்புலிகளையும் பிடிக்காது... என்பது அதிசயமான செய்திகளல்ல. ஆனால் இங்கு மற்றொரு அதிசயமான செய்தியையும் வீரவன்ச உளறியுள்ளார்.

அதாவது இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீட்டை இந்தியா முறியடிக்க வேண்டும் என இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் விமல் வீரவன்ச.

ஜே.வி.பியின் ஆரம்பகாலம் முதலே அதனுடைய உறுப்பினர்களுக்கான அரசியல் வகுப்புக்களில் முக்கியமான ஒரு பாடம் இந்தியவிஸ்தரிப்பு வாதம் பற்றியதாகும்.

சீனசார்பு கொள்கைளை கொண்டிருந்த இடதுசாரித்தோழராக தன்னை இனம் காட்டிய ஜே.வி.பியின் கொல்லப்பட்ட தலைவரான ரோகணவீஜேவீர தென்கிழக்கு ஆசிய நாடுகள் மீதான இந்தியாவின் மேலாதிக்க அணுகுமுறையை மிகவும் கடுமையாக எதிர்த்தவர். அதனால் சிறிலங்கா எதிர் கொள்ளக்கூடிய ஆபத்துக்குறித்தும் எச்சரித்தவர் என்பது வெளிப்படையான விடயமேயாகும்.

1987இல் இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் வடக்கு கிழக்கில் ஆக்கிரமித்து நிலை கொண்டிருந்த காலத்தில் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தை தீவிரமாக எதிர்த்த ரோகணவிஜேவீர அதற்கு எதிராக இந்திய இறக்குமதிப் பொருட்கள் அனைத்தையும் ப்கிஷ்கரிக்க வேண்டும் எனப் பெரும் கிளர்ச்சியையும் மேற்கொண்டார்.

ஆனால் அப்போது ஆட்சியில் இருந்த பிரேமதாச அரசு ஜே.வி.பிக்கு எதிராக மேற்கொண்ட கொடூரமான நடவடிக்கைகளின் போது விஜேவீர கைது செய்ய்ப்பட்டு கொல்லப்பட்டார்.

1971 இன்போது ஜே.வி. பியின் முதல் கிளர்ச்சி நடவடிக்கையை சிறிமாவோபண்டார நாயக்கா இந்திய இராணுவத்தின் உதவியுடன் மிருகத்தனமாக ஒடுக்கியது வரலாறு. அந்த நடவடிக்கையின் போது 25000 க்கும் அதிகமான சிங்கள இளைஞர், யுவதிகள் மிலேச்சத்தனமான வகையில் கொல்லப்பட்டார்கள்.

எந்த இந்தியாவால் நசுக்கப்பட்டார்களோ, எந்த இந்தியாவின் பிரசன்னத்தை நிராகரித்து எதிர்த்தார்களோ, அதே இந்தியாவை அமெரிக்கத் தலையீட்டை முறியடிக்க உதவவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார் விமல் வீரவன்ச. இலங்கையை இரண்டாகப் பிரிக்க இந்தியா முயல்கிறது எனக்குற்றம் சாட்டிய வாய் அமெரிக்கா இலங்கையை பிரிக்க முயல்கின்றது அதனை இந்தியா வந்து தடுக்க வேண்டும் என்கிறது..

ஜே.வி.பியின் கொள்கை யற்ற சுயநல அரசியலைப் பார்த்து வரலாற்றின் இரத்தக்கறை படிந்த அத்தியாயங்கள் சிரிக்கின்றன...

## வெலிக்கடைச் சிறையில் சனாதிபதி... ரத்வத்தையைச் சந்தித்து என்ன பேசினார்?



**தண்ணீரை** விட இரத்தம் தடிப்பானதுதான். கடைசியில் அந்த அதிகார மருமகள் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் அந்த கொலைக்குற்றவாளிச் சந்தேக நபரான முன்னாள் அகங்கார அமைச்சரும், அரசியல் ஜெனரலுமான மாமாவை வெலிக்கடைச் சிறைக்குச் சென்று பார்வை யிட்டுவிட்டார்.

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, கூடாத கூட்ட மெல்லாம் கூடி, தேடாத தேட்டமெல்லாம் தேடி... இப்போது வாடாத வாட்டத்தில் வாடிச்சிறையில் பிணை விடுதலை நிராகரிக் கப்பட்டுக்கிடக்கும் அநுருத்தரத்வத்தையை சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா சென்று பார்வையிட்டதைத்தான் கூறுகிறோம்.

சில காலங்களுக்கு முன்னர் வங்கிகளின் பாதுகாப்பு பெட்டகங்களில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ரத்வத்தை குடும்பத்தின் பலகோடிரூபாய் சேமிப்புப் பத்திரங்கள் தொடர்பான மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் சந்திரிகா ரத்வத்தையுடனான பகிரங்க சந்திப்புக்களைத் தவிர்த்தே வந்துள்ளார்.

ரத்வத்தை மற்றும் அவரின் புத்திரபாக்கியங்களான லோகான், சானுக்க, மஹேன் போன்றோரின் அடாவடித்தனங்கள், அவமானத்தைத் தரும் வகையில், பகிரங்கமானதை அடுத்து சந்திரிகாவின் அரசியல் சகாக்களின் ஊழல்கள், மோசடிகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் இருக்கின்றவேளையில் சந்திரிகா ரத்வத்தை சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இது உத்தியோக பூர்வ சந்திப்பா, கட்சிரீதியிலான சந்திப்பா, உறவுவகையிலான சந்திப்பா என்பது தெரியவில்லை.

உத்தியோக பூர்வமாக சனாதிபதியென்றவகையில் தற்போது கொலைக்குற்றம் சாட்டப்பட்ட நிலையில் உள்ள ஒருவரை சந்திரிகா சந்திக்கச் செல்வது கௌரவக் குறைவான ஒன்றாகும்.

கட்சி ரீதியில் சி.ல.சு.கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் தற்போது ரத்வத்தையை சந்திக்க வேண்டிய அவசியம் எதுவும் சந்திரிகாவுக்கு இல்லை. உறவு அடிப்படையில் பார்த்தாலும், இருவருக்கும் இடையிலான மாமா மருமகள் பாசம் அண்மைக் காலங்களில் அவ்வளவு திருப்திகரமாக இல்லை... தனது ஆட்சிக் காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து கொண்டு கோடிக்கணக்கில் ஆயுதக்கொள்வனவு உட்பட இராணுவக் கொள்வனவுகளில் ஊழல் செய்துதன்னை ஏமாற்றிவிட்டார் ரத்வத்தை என்பதை பல தடவைகளில் பகிரங்கமாகவே குறிப்பிட்டுள்ளார் சந்திரிகா ஆக... எந்தவகையில் என்ன நோக்கத்துடன் சந்திரிகா ரத்வத்தையைச் சிறையில் சென்று பார்வையிட்டார்...?

நிறைவேற்று அதிகாரத்தை கையில் வைத்துள்ள சனாதிபதி அதனைப் பயன்படுத்தித் தன்னை பிணையில் விடுதலை செய்ய உதவவில்லை என ரத்வத்தையின் பக்கத்தில் இருந்து கடுமையாக கவலை தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இச்சந்திப்பு நடந்ததாகக் கூறப்படுகிறது.

ரத்வத்தையின் விடு தலைக்கான தனது தனிப்பட்ட எந்த முயற்சியும் முஸ்லிம் காங்கிரஸுடனான எதிர்கால அரசியல் கூட்டுக்கான அவசியத்தன்மை அநுகூலமாவதை தடுத்துவிடும். ஆகவே இப்போதைக்கு தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதே சந்திரிகாவின் நிலைப்பாடு எனத்தெரிகிறது....

ஆக... முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் பாதுகாப்பை அதிகப்படுத்தி இன்னுமதிக பாதுகாப்புடன் சிறைக்குள் இருக்கவிடுவதே நல்லது என சந்திரிகா நினைக்கிறாரோ....?

## பேரினவாதக் கோமாளிகளின், இந்தியா மீதான நம்பிக்கை.



**சிறிலங்காவின்** பிரச்சினைகளில் அமெரிக்க மற்றும் அமெரிக்க சார்பு நாடுகளின் தலையீட்டை தடுக்க இந்தியா முன்வர வேண்டும். இத்தகைய தலையீடுகள் இலங்கையின் ஒருமைப்பாட்டை மட்டுமல்ல இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறைமை ஆகியவற்றையும் பாதிக்கும் என்று எச்சரித்துள்ளவர்... ஜே.வி.பியின் டில்வின் சில்வா அவர்கள்.

இந்தியாவின் உதவியுடன் சனாதிபதி உடனடியாக சிறிலங்காவின் படைகளை அதிகளவில் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது, இதனை உடனடியாக கவனத்தில் கொண்டு சனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறியிருப்பவர் சிகல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்ன.

இலங்கைக் கடற்பிராந்தியத்தில் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு இந்தியக் கடற்படையை அழைக்க வேண்டும் எனக் கருத்தை மொழிந்திருப்பவர் சிறிலங்கா சனாதிபதியின் விசுவாசமான ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரேதான்....

ஆக.... இராணுவத்தைப் பலப்படுத்த இந்தியாதேவை, அமெரிக்கத் தலையீட்டை முறியடிக்க இந்தியாதேவை, கடற்பிராந்தியப் பாதுகாப்புக்கும் இந்தியா வேண்டும்.

இவற்றைச் சொல்லியிருப்பவர்கள் அனைவரும் பேரினவாத கருத்தியலா ளர்கள்.... விசுவாசிகள் ஆவர்.

எல்லாவற்றையும் விட சமாதான நடவடிக்கைகளை முழுமையாகவும் பகிரங்க மாகவும் எதிர்ப்பவர்கள்.

இவர்களின் இந்தியப் பற்று, அல்லது இந்தியா மீதான நம்பிக்கையென்பது தேசிய நலன்கருதிய விடயமல்ல... முற்றிலும் சுய அரசியல் அபிலாசைகளைக் கொண்ட இலக்கினை உடையதாகும்.

இவர்கள் இந்தியாவை மீண்டும் ஒரு சிக்கலுக்குள் மாட்டி அமெரிக்காவுடனும் விடுதலைப் புலிகளுடனும் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தி, அதன் மூலம் சமாதான நகர்வுகளை குழப்பவே முயல்கிறார்கள் என்பது வெளிப் படையானது.

தேசிய நலனில் அக்கறை கொண்ட, பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்ற விருப்பினைக் கொண்ட பேர்வழிகளாக இவர்கள் இருந்திருப்பின், சமாதான முயற்சிகளில் இந்தியாவின் ஆதரவை கோரியிருப்பார்கள்...

ஆனால் அவர்கள் கோரிக்கைகளின் தன்மை 'போர்' நிலைமையை மீள உருவாக்கும் இலக்கினையே கொண்டதாகும்.

இதில் அதிக எச்சரிக்கையாக இருக்கவேண்டியது இந்தியாவேதான்....

கோமாளிகளின் கூத்துக்களை நம்பி இந்தியா ஏமாளியாகி விடக்கூடாது என்பதே அதற்கு நாம் சொல்லிப் புரியவைக்கவேண்டிய அவசியமேயில்லை. ஜே.ஆர் கால அழைப்பும், தலையீடும், இந்தியா செய்ததவறுகளின் வரலாற்றுப்பதிவாக மட்டுமல்ல ஒரு வரலாற்றுப்பாடமாகவும் அதற்கு இருக்கும்.

**செங்குட்டுவன்**


# அரசு+புலிகள் = பங்குடமை
# புலிகள் = தமிழர்

**சிறி. இந்திரகுமார்**

இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் ஏறத்தாள எழுபத்தையாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கு கடன்காரனாக உள்ளான்.

அதாவது இலங்கையில் ஒவ்வொருபிரசையின் பெயரிலும் அவர்களின் ஒப்புதல்கள் ஏதுமின்றியே இலங்கையின் ஆட்சிபீடமேறிய இரண்டு பிரதான கட்சிகளுமே கடன் வாங்கியுள்ளன..

இப்படிப்பார்த்தால் ஆட்சியிலிருந்த அரசுகள் யாவும் இலங்கையின் பிரசைகளை கடன்காரர்களாக்கிவிட்டுள்ளன.



இதில் வேடிக்கையும் அதேநேரம் வேதனையும் தரக்கூடிய செய்தி என்னவென்றால் இந்த எழுபத்தையாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கான கடன்கள் தமிழ் மக்களின் தலையிலும் உண்டு.

அதாவது தமிழர்களை அழிப்பதற்காக தென்னிலங்கை அரசுகள் வாங்கிய கடன் 75,500 ரூபாவை தமிழர்களின் பெயரிலும் உலகிடம் பெற்றுள்ளது.

அத்தோடு சிங்களவர்களின் மமதையால் இழந்து போனவற்றை மீளப் பெற்றுக்கொள்ளவும் தமிழர்களைப் பகடைக்காயாக பயன்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

இதனைத் தமிழர்கள் இப்போது எப்படி விளங்கிக்கொள்வது. அதுவும் புலிகள் சமாதான பேச்சுக்களிலிருந்து தற்காலிக விலகலை மேற்கொண்டிருக்கும் புறச்சூழலில் இதனை எப்படி விளங்கிக் கொள்வது.

இதனை இரண்டு விதமாக அணுகுவது பொருத்தமாக இருக்கும்.

ஒன்று தமிழ் மக்களின் அரசியல்பிரச்சினையை இதில் கலக்காமல உடனடிப் பிரச்சினையாக புலிகளும் அரசும் செயற்பட இணங்கிய புனர்வாழ்வு புனரமைப்பிற்கான சர்வதேச நிதியினைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு மூலம்.

> **அரசும் புலிகளும் இணைந்து உருவாக்கியிருக்கும் இந்த பங்குடமைக்குள் தனியுடமைக்கொள்கைகளை கலைதல் அவசியமாகும்.**
>
> **இதனால் புலிகள் சமாதான பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்துவது தவிர்க்க முடியாது.**

இரண்டாவது வொஷிங்ரன் முன்னோடி உதவி வழங்கும் மாநாட்டில் அரசு சமர்ப்பித்திருக்கும் திட்டவரைபுகள் மூலம் இலங்கையை மீளுருவாக்கும் ஆவணத்தின் அடிப்படையில்.

முதலாவதாக அரசிற்கும் புலிகளிற்கும் ஒரு அடிப்படை புரிந்துணர்வு ஒன்று உள்ளது.

இருபதுவருட போரினால் சீரழிந்து போன இலங்கையை மீண்டும் புனரமைப்பதற்காக தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான புலிகளும் அரசும் இணைந்து முதலில் நன்கொடைகளைப் பெற்று மக்களின் உடனடிப் பிரச்சினையைத் தீர்ப்பது என்பதே அது.

அதாவது இரண்டு வர்த்தகர்கள் இலாப நோக்கில் இணைந்து ஒரு முயற்சியை ஆம்பிக்கின்ற போது எப்படி பங்குடமை நிறுவனம் தோற்றுவிக்கப் படுகின்றதோ அதேபோல.

அரசும் புலிகளும் இணைந்து பெற்றுக் கொள்கின்ற எல்லாச் செயற்பாடுகளும் பங்குடமை போன்றதே. ஆனால் ஒரு பங்குடமை நிறுவனத்தில் பங்கு இலாபங்கள் பங்காளர்களிற்கு இடையில் இலாப நோக்கில் பகிரப்பட்டுக் கொள்ளும்.

ஆனால் இங்கே உள்ள பங்காளர் என்கின்ற புலிகள் ஒரு தரப்பு பங்காளர் என்பது புலிகளின் பெயரில் தமிழ் மக்களையே குறிக்கிறது.

புலிகள் கேட்கும் புனர்வாழ்வு புனரமைப்பு நிதி என்கின்ற பங்கு இலாபவிகிதம் என்பது தமிழ் மக்களிற்கான புனர்வாழ்வு புனரமைப்பு நிதி என்பதாகவே அர்த்தப்படும்.

இந்தப் பங்குடமை நிறுவனம் இலாபத்தோடு வளர்ச்சியையும் காண வேண்டுமாயின் பங்காளர்களுக்கிடையில் சரியான விகிதத்தில் பங்கு இலாபங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். நம்பிக்கையும் கட்டியெழுப்பப்படவேண்டும்.

அதுவும் ஒரு பங்காளர் இன்னொரு பங்காளர் மீது ஐயமும் கரவும் கொள்ளக்கூடாது. அதற்கு பங்காளர்கள் தங்களிற்கிடையில் பரஸ்பரம் நம்பிக்கையையும் உறுதியையும் கட்டியெழுப்புதல் அவசியம்.

அதிலும் இருபது வருடங்களாக பகைவர்களாக இருந்தவர்கள் நண்பர்களாகி பங்குடமையை ஆரம்பித்திருக்கும் நிலையில் மிகவும் அவதானமாக நம்பிக்கையைப் பேண வேண்டும்.



ஆனால் வொஷிங்ரன் முன்னோடி மாநாடு மூலம் என்ன நடந்திருக்கிறது. ஒரு பங்காளரின் ஒப்புதலின்றி தனது விருப்பத்திற்கமைய இலாப நட்டக்கணக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியமானது என்ன வென்றால் இந்த பங்குடமையில் அதிக முதல்களைப்போட்டுள்ள தமிழர்களைப் புறந்தள்ளிவிட்டு கணக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் முதலீடு என்பது உயிராலும், உடமையாலும், உணர்வாலும் என்று அதன் பெறுமதி மிக அதிகமானது.

இதனால் தமிழ் மக்களிற்கான இலாப விகிதத்தை சரியான நம்பிக்கையை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பு புலிகளிற்கு உண்டு.

இதனையே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழ் நெற் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியில்.... "தமிழ் மக்களின் அதிர்ப்தியை தெரிவிக்கும் பூரண உரிமை எங்களுக்குண்டு" எனத் தெரிவித்தார்.

இந்த பங்குடமையில் தனித்து சிங்களவர்களின் அபிலாசைகளை மட்டும் கருத்தில் எடுத்து தமிழ் மக்களின் அபிலாசைகளை அங்கலாய்ப்புக்களாக கருதிவிடக்கூடாது.

ஏனெனில் தமிழ் மக்கள் தமது அபிலாசைகளுக்காக செலுத்திய முதலீடும் அதிகம். அவர்களின் உழைப்பும் அளப்பரியது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை அங்கலாய்ப்புக்களாக கருதியதன் விளைவாகவே இந்த விடாக்கண்டான் நிலையும் கொடாக்கண்டான் நிலையும்.

> **தமிழ் மக்களின் முதலீடு என்பது உயிராலும், உடமையாலும், உணர்வாலும் என்று அதன் பெறுமதி மிக அதிகமானது.**
>
> **இதனால் தமிழ் மக்களிற்கான இலாப விகிதத்தை சரியான நம்பிக்கையை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு புலிகளிற்கு உண்டு.**

தனித்து தமிழர்களை புறக்கணித்துச் செயற்பட முனைந்ததன் விளைவுகள் ஏற்கனவே தெரியும்..

1956 இல் தனிச்சிங்களச் சட்டமும், கல்வித்தரப்படுத்தலும் எதற்காக கொண்டுவரப்பட்டதோ அதுவே இப்போதும் நடக்கலாம்.

அதாவது தனிச்சிங்களச் சட்டமூலமும் கல்வித்தரப்படுத்தல் இலங்கையை ஒரு தனியுடமையாக்க முயற்சிக்கப்பட்டதே. அதுவே இப்போதும் நடக்கலாம்.

ஆகவே அரசும் புலிகளும் இணைந்து உருவாக்கியிருக்கும் இந்த பங்குடமைக்குள் தனியுடமைக் கொள்கைகளை கலைதல் அவசியமாகும்.

இதனால் புலிகள் சமாதான பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்துவது தவிர்க்க முடியாது.

ஆனால் தென்னிலங்கையிலிருந்து கூக்குரலிடப்படுவது போல இது ஒரு பங்காளர் கலைதல் அல்ல. இது ஒரு பங்காளர் விலகல். அதுவும் தற்காலிக இடைவிலகல்.

இதனைச் சரியாக விளங்கிக் கொள்வது மிகவும் முக்கியமானது. அதாவது பங்காளர் கலைதலிற்கும் பங்காளர் தற்காலிக இடைவிலகலிற்கும் உள்ள வித்தியாசத்தை

அதுவும் இந்த பங்குடமையின் ஐந்தொகை சரியான விதத்தில் சமப்படுத்தல் முக்கியம்.

இதில் தனித்துப் பொறுப்புக்களை புலிகளின் தலையிலும் சொத்துக்களை அரசும் சுமந்து கொண்டால் இந்த ஐந்தொகை சமப்படாது சமப்படவும் முடியாது.

புலிகளிற்கு நீண்டகால பொறுப்புக்கள் என்ற வகையில் தமிழ் மக்களிற்கான உரிய அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டிய கடப்பாடு உண்டு.

அதே நேரம் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினையைத்தீர்ப்பதேயாகும்.

இந்த உடனடிப் பொறுப்பைத் தீர்ப்பதிலேயே அரசு ஓர வஞ்சனை புரியத் தொடங்கிவிட்டது.

அப்படியாயின் நீண்ட காலப் பொறுப்பாக உள்ள அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்தளவிற்கு அரசு இணங்கிச் செயற்படப் போகிறது.

இரண்டாவதாக அரசு வொஷிங்ரன் உதவி வழங்கும் முன்னோடி மாநாட்டில் சமர்ப்பித்திருக்கும் இலங்கையை மீள உருவாக்கும் ஆவணத்தின் அடிப்படையில் நோக்குவது.

அரசு சமர்ப்பித்த இந்த ஆவணத்தில் பிரதானமாக தென்னிலங்கையையே மையப்படுத்தப்பட்டுள்ளது.

வறுமையை பொதுவான தோற்றப்பாடாகக்காட்டப்பட்டு தமிழ் மக்களை மிகவும் பாதித்த போரின் தாக்கங்களைப் பூசிமெழுக முயற்சிக்கப்பட்டுள்ளது..

அதாவது வறுமையைக் காட்டி பொது அணுகுமுறையில் தீர்வுகாண முயற்சி. இது எந்தளவிற்கு சாத்தியம்.

இதில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை பிரதானப் படுதியதும் தென்னிலங்கையை மையப் படுத்தியதும் அப்பட்டமாக ரணில் விக்கிரமசிங்கவின் சனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் வாக்கு வங்கிக்கான தூண்டில்.

இதில் வடக்கு கிழக்கு இணைக்காது விடப்பட்டுள்ளது.

அரசின் கடந்த இராணுவ முஸ்தீவுகளில் செலவழிந்து போன நிதியையும் தென்னிலங்கையின் வாழ்க்கை நிலையையும் தமிழ் மக்களின் பெயரால் பெற்றுக்கொள்ள ஒரு முயற்சி.

சர்வதேச நிதியைப்பெற்றுக் கொள்ள தமிழ்மக்களும் அனுபவிக்க சிங்கள மக்களும் என்கின்ற நிலை.

முதலில் அரசு தன்னைத் தானே சுய பரிசோதனை செய்யவேண்டும். காரணம் அரசு இன்னும் பழைய நிலையிலிருந்து விடுபடவில்லை.

# இயல்பு வாழ்வு என்பது கனவாகிவிடுமா....?

'இயல்பு வாழ்க்கை' என்பது நல்லதொரு வார்த்தை. இனிய கவிதை போன்றதோர் சொற்றொடர். போருள் வாழ்ந்த மனிதர் இயல்பு வாழ்விற்கு மீளல் என்பது, மீண்டும் புதிதாய் பிறத்தல் போன்றது.

போர் நிறுத்தப்பட்டு - புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு - அது இப்போது இரண்டாவது ஆண்டிற்குள் பிரவேசம் செய்கிறது. இயல்பு வாழ்வினை ஏற்படுத்துதல் என்பதே இப்போர் நிறுத்தத் தினதும் புரிந்துணர்வு ஒப்பந்தத் தினதும் பிரதான நோக்கமாகக் கூறப்பட்டபோதும், இயல்பு வாழ்க்கை என்பது ஒரு கனவாகி விடுமோ என்கிற கேள்வி தமிழ் மக்களின் மனங்களில் தோன்றியுள்ளது.

இலங்கைத்தீவின் இன்றைய சூழ்நிலையில், சிங்கள வர்களுக்கே இயல்புவாழ்க்கை கைகூடியுள்ளது. கணிசமான அளவிற்கு - அல்லது, பூரணமாக அதனை சிங்களவர்களே அனுபவிக்கின்றனர் எனலாம்.

சிங்களப்பிரதேசங்களில் தாக்குதற் சம்பவங்களும், குண்டு வெடிப்புகளும் தற்போது நடைபெறுவதில்லை. சிங்கள இராணுவத்தினரது வீடுகளில் மரண ஓலங்கள் இப்போது கேட்பதில்லை, இவை அவர்களுக்குக் கிட்டிய குறிப்பிடத்தக்க இயல்பு வாழ்வின் அம்சங்கள். அதற்கும் அப்பால். சிங்களமக்கள் பயமின்றி தமிழ்பிரதேசங்களுக்குள் பயணம் செய்யமுடிகிறது. தெற்கு வர்த்தகர்கள் தமிழ் மண்ணில் தங்கள் வர்த்தகத்தைவிரிபுபடுத்த முடிந்துள்ளது செப்பனிடப்படு கின்ற ஏ-9 பாதையும் தென்னிலங்கை மக்களுக்கே அதிக பயன்தருவதாய் உள்ளது.

விடுதலைப்புலிகளின் வணிகக்கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்றச் சூழ்நிலையில், மீண்டும் போர் மூண்டுவிடுமோ வென அதிகம் கவலைப்பட்டவர்கள் தென்னிலங்கை வர்த்தகர்களே. கொழும்பிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குச் செல்கையில் அதனை நேரடியாகவே அவதானிக்க முடிந்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி கொழும்பு நகரில் மூடப்பட்டிருந்த பாதைகள் இப்போது திறந்து விடப்பட்டுள்ளன. 'கோல்பேஸி'ற்கு செல்ல வழிதிறந்து விடப்பட்டமையே கொழும்பு வாழ் மேட்டுக் குடியினருக்கு சமாதானம் தந்த பரிசு போன்றது. காலி முகத்திடலில் கூடும் காதலர்கள் ரணிலுக்கு மானசீகமாக நன்றி தெரிவித்துக் கொள்வார்கள்!

இவையெல்லாம் சிங்கள வர்களுக்கு தற்போது கிட்டியுள்ள இயல்பு வாழ்வின் மேலதிக அம்சங்கள்.

தமிழ்மக்களுக்கோ இயல்பு வாழ்விற்கான அடிப்படைகள் கூட இன்னும் கிட்டவில்லை. தங்கள் சொந்த வாழ்விடங்களுக்கே திரும்பிச் செல்ல முடியாமல் தடைபோட்டு நிற்கிறது 'உயர்பாதுகாப்பு வலயங்கள்' மீளக்குடியமர்ந்தோரும் அழிந்து போன தங்கள் பொருளாதார வாழ்வைக்கட்டியெழுப்ப முடி வைக்கவில்லை. ஓரளவு வசதியுள்ளவர் கூட சாதாரண மக்களைப் போன்றே தற்காலிக கொட்டில்களில் வாழ்ந்த காலம் அது. கூலிக்காரனும், உத்தியோகத்தரும், அதிகாரியும் ஒரே மாதிரியாகவே வாழநேரிட்டது. ஆயிரம் தடைகள், தட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதும், அரிசிக்கும் மீனுக்கும் தட்டுப்பாடு வரவில்லை. பிரச்சினைகள் யாவும் அனைவருக்கும் ஒரே மாதிரியான வையாகவே இருந்தன. இங்குள்ளவரின் வறுமையினையும், வசதிக்குறைவுகளையும் வெளியார் வந்து பார்க்கவோ, ஏளனம் செய்யவே வழியிருக்கவில்லை.

வணங்குவோம் என அப்பிள்ளைகள் கூறினராம். இங்கிருந்தவர் உடனே சென்று மின்பிறப்பாக்கி ஒன்றை வாடகைக்குப் பெற்று வந்து சில தினங்கள் சமாளித்தாராம். இதனை நகைச்சுவையும், ஏக்கமுமான குரலில் அவர் சொன்னார்.

அமைதி நிலை ஏற்படுத் தப்பட்ட பின்பு இயல்பு வாழ்வை நோக்கி ஏனையோருடன் இணைந்து கொள்ள வன்னிவாழ் மக்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு தடமும் ஏமாற்றம் தருவதாகவே உள்ளது

வெளியே இருந்து வசதிகளுடன் வருவோர் தமது பழைய வாழ்விடங்களை புனர்நிர்மாணம்

அனைவருக்கும் தெரியும்.

சமாதானமும் பேசிக் கொண்டு, அதேநேரத்தில், தமது படைகளையும் பலப்படுத்திக் கொண்டு வருகிறது சிறிலங்கா. அரசு. நவீன ஆயுதங்கள், போர்க் கப்பல், விமானங்களென தேவையான அனைத்தையும் கொள்வனவு செய்கிறது.

தமிழர் படையான விடுதலைப்புலிகளும் தமது கட்டமைப்புகளை பலப்படுத்திக் கொள்ளல் யதார்த்தமானதும், இன்றியமையாததுமாகும்.

களத்தில் வாழும் மக்களும் அடுத்தகட்டத்திற்கேற்றவாறு தம்மைத்தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதும், கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். அழிந்துபோன தமது பொருளாதாரத்தை மீளமைத்துக் கொள்வதின் மூலமாகவே, அடுத்த கட்டத்திற்கு முகம் கொடுக்க மக்கள் தயாராக முடியும்.

சமாதானம் முறிவடையும் கட்டம் ஏற்பட்டால் மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களெல்லாம் கைவிடப்பட்டுவிடும். பழையபடி தடைகளும் நெருக்கடிகளுமே



யாமல் தவிக்கின்றனர். இங்கே நிறுவனங்களின் உயர்ரக வாகனங்கள் அங்குமிங்கும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றனவே தவிர பாதிப்புற்ற மக்களுக்கான உதவிகள் ஆமைவேகத்திலேயே நகர்கின்றன.

கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக புத்தவிக்கிரகங்களை வடக்கிற்கு கொண்டு செல்ல சாதாரணமாக முடிகிறது. போருக்குள் மண்ணை உழுத வன்னிவாழ் உழவன் ஒருவன் தனது தேய்ந்த கலப்பைக்குப்பதிலாக புதிய கலப்பையொன்றை கொண்டு வர இராணுவச் சாவடியை கடக்க வேண்டிய நிலையேயுள்ளது.

தமிழ் மண்ணில் ஊடறுக்கப்பட்ட ஊர்கள் பாதை திறப்பினால் இணைந்து கொண்டமையும், வருடக்கணக்காக பிரிந்திருந்த உறவுகள் சந்தித்துக் கொள்ள முடிந்தமையும், பாஸ் நடைமுறைகள் தளர்த்தப்பட்டமையுமே தமிழ் மக்களுக்கு கிடைத்த சலுகை எனக்குறிப்பிடலாம். வேறு எதனையும் குறிப்பிட்டுக் கூறமுடியாது.

போர்க்கள நிகழ்வுகளோடு இசைவாக்கமடைந்த முன்பிருந்த வர்ழ்வு இயல்பாக இருந்ததைப்போல், வன்னி மக்கள் தற்போது உணர்கின்றனர். ஏற்றத்தாழ்வுற்ற ஒரு வாழ்வாக அது இருந்தது. இடம்பெயர்வுகள் ஏழைபணக்காரன் என விட்டு

போரொழிந்த விடுதலையுடன் கூடிய வெளிச்ச வாழ்வொன்றினை கற்பனை செய்தவாறே அந்தக் காலம் கழிந்தது.

இன்று ஏ-9 வீதியில் தவழும் 'டொல்பின்' களே வன்னி வாழ் சாதாரணன் ஒருவனின் உளவியலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அநேக வருடங்களின் பின் வெளியிடங்க ளிலிருந்து வருகை தரும்

**வேனிலன்**

உறவினர்களை உபசரிக்க முடியாமல் பலர் உடைந்து போகின்றனர்.

அண்மையில் வெளி நாட்டிலிருந்து இங்குள்ள ஒருவரின் சகோதரன் தன் குடும்பத்தோடு வருகைதந்தார். வெளி நாட்டில் பிறந்த பிள்ளைகளுக்கு கிளிநொச்சிக் கிராமங்கள் கைவிடப்பட்ட புராதன ஊராகத் தோன்றியது. மின்சாரமில்லாதது அவர்களுக்கு ஆச்சரியம் தந்தது. இரவில் அந்த சிறு பிள்ளைகள் வீட்டில் விளக்குக் கொழுத்தப் பட்டிருந்த இடங்களுக்கு முன்பாக கும்பிட்டவண்ணமிருந்தனராம். ஏனென்று கேட்டதற்கு வெளி நாட்டிலுள்ள தங்களது வீட்டின் சாமி அறையில் இவ்வாறு தான் விளக்கிற்கு முன்பாக நாம்

செய்யும் போது, போரில் மண்ணை விட்டகலாது வாழ்ந்த மண்ணின் மைந்தன் உளவியல் ரீதியாக தலை குனிகிறான்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிறிலங்கா அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் படாமலுள்ளதோடு, படையினரால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இவ்வாறிருக்கையில், தீர்வு எவ்வாறு சாத்தியப்பட்ப் போகின்றது என்கிற கேள்வி அனைவரது மனங்களிலும் தோன்றுவது தவிர்க்க முடியாததாகின்றது.

உறுதியான சமாதானம் என்பது தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றின் மூலமாகவே நிலைபெறமுடியும்.

சமாதானம் முறிவடைந் தால் அடுத்தது என்ன என்பது


அவர்கள் மீது திணிக்கப்படும்.

போர் வேண்டாம் சமாதானமே நிலைபெறட்டும் என அனைவரும் பிரார்த்திப்போம்.!

இன்றைய சூழ்நிலையில் -போருள் வாழ்ந்த வன்னி மக்களது உணர்வுகள் புரிந்து கொள்ளப்படல் வேண்டும். அந்த மக்களது இழப்புகள். வாழ்வுநிலை யாவும் துல்லியமாக ஆராயப்பட வேண்டும். அவர்களது பொருளாதார வாழ்வு மேம்பட எடுக்கப்படும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் படல் வேண்டும். சகலபுனரமைப்புத் திட்டங்களின் போதும், மக்களின் புனர்வாழ்விற்கே முதலிடம் கொடுக்கப்படல் வேண்டும்.

இவை நடைமுறைக்கு வராத வரை இயல்பு வாழ்வு என்பது ஒரு கனவாகவே மறைந்து விடும்.

## மதவடி மயிலர்



செய்தி : **"விடுதலைப்புலிகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சில குழுக்கள் இயங்குகின்றன" கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு.**

**மயிலர்** : குழுவறுகளாகத் திரியும் குழுக்களுக்கு வேறென்ன வேலையாம்... கால்பிடிக்கிற குழு, வால்பிடிக்கிறகுழு, காட்டிக் கொடுக்கிற குழு, கைக்கூலியாய் பிழைக்கிற குழு, கருங்காலிக்குழு... என எத்தனை குழுக்கள் தமிழினத்தை கூழாக்கி வைச்சிருக்கினம்... ஒண்டு சொல்லுறன் பாருங்கோ, விடுதலைப்புலிகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சில குழுக்கள் இயங்கினாலும் கன குழுக்களை அந்த 'அலுக்கோசு' வேலைக்கெண்டே சில சக்திகள் இயக்கிக் கொண்டுமெல்லே இருக்கினம் பாருங்கோ... இந்த இயக்கமில்லாத குழுக்களை இயங்கவைக்கிற 'புழுக்'களும் இருக்கவே செய்கின்றது...

செய்தி : **அரசியல்வாதிகள் நாட்டின் நலனுக்காக அன்றி தங்கள் சுயநலன்களுக்காகவே செயற்படுகின்றனர் என்கிறார் சனாதிபதி.**

**மயிலர்** : பரம்பரை அனுபவம் பேசுகிறது பாருங்கோ... நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கத் தலைவர்கள் தேவை எண்டுமெல்லே அம்மணி சொல்லியிருக்கிறா... அதிலை பாருங்கோ இப்ப இருக்கிற தலைவர்கள் எவரும் நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கத் தகுதியற்றவர்கள் என்பதை இதன் மூலம் ஒப்புக்கொண்டிருக்கிறார் கவனிச்சீங்களே... பிறகேன் பதவியிலை இருக்கவேண்டும்.. விட்டிட்டு போக வேண்டியதுதானே... நாட்டையும் குழப்பி... உலகையும் குழப்பி கூத்தடிக்காமல்....

செய்தி : **சிறிலங்கா இராணுவத்திற்கென 30,000 உடற்கவச அங்கிகள் கொள்வனவு...**

**மயிலர்** : சமாதான காலத்திலை தான் உடற்பாதுகாப்புக் கவசங்கள் அவசியம் தேவைபாருங்கோ... ஆமிக்காரர் தங்களுக்குள்ளேயே ஆளுக்காள் சுட்டுக் கொள்ளுற சூழல் வளர்ந்து வரேக்கை இது அவசியம் தான் பாருங்கோ... அதுசரி உந்தக் கவசக் கொள்வனவிலையும் ஊழல் நடந்திருக்கு எண்டெல்லே கதை அடிபடுகுது... ஆரெண்டாலும் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்கிறார்கள் என்ன நான் சொல்லுறது சரிதானே...!


செய்தி : **இலங்கைக்கு மூன்று ஆண்டுகளுக்கு வருடத்திற்கு 100 கோடி டொலர் தேவை என வாஷிங்டன் கூட்டத்தில் மொறகொட தெரிவிப்பு...**

**மயிலர்** : ஆரியக் கூத்தாடினாலும் மொறகொட ஐயா காரியத்திலை கண்ணாத்தான் இருக்கிறார்பாருங்கோ இருபது வருஷம் சண்டைக்கு செலவழித்த காசை இரண்டு வருட சமாதான காலத்திலை சேர்த்திடலாமெண்டு பார்க்கிறார்.. சமாதானத்திற்கும் பிரச்சினைக்கான தீர்வுக்கும் காலத்தை கடத்திக்கொண்டே... அதைகாட்டி காசு சேர்த்துப் போடலாமெண்டு ஆலாய்ப்பறக்கிறார் அமைச்சர்... நிதிக்கு கைநீட்டு, நீதிக்கு கால்கட்டு.... இது தான் இப்போதைய நிலைபாருங்கோ...



## தொடர்கதை

### அத்தியாயம்-7



# இடம் பெயர்ந்தவன்

ஆங்கில மூலம் பிளானறி ஓ கொணரின்

தமிழில் சு. மகேந்திரன்

அஸ்ரரும் சல்க்கும், அன்று மத்தியானம் பசுக்கூட்டத்திடையே இருந்து கொண்டு, எருவை அள்ளி அது போடும் இடத்தில் நிரப்பிக் கொண்டிருந்தனர்.

பக்கத்திலிருந்த உப்புக் குவியல்கள் வைக்கப்பட்டிருந்த சிறிய கொட்டிலுக்கு அண்மையாக இருந்து கொண்டு அவர்களுக்கு வரப்போகும் இன்னல்பற்றி, திருமதி. சோட்லி விளக்கிக் கொண்டிருந்தாள். அவளது வயிறு தொடையில்ப்பட கைகள் அதன் மேல் இருந்தன 'ஒரு கோவேறு கழுதைக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என உங்களுக்குத் தெரியுமா?'

'அதுபற்றி எதுவும் நிச்சயமாகத் தெரியாது ஒருவிசயம் பற்றியும் எமகுத் தெரியாது.' என்றான் கிழவன்.

'கோவேறுகழுதைக்குப் பதிலாக உழவு இயந்திரம் நீகிரோக்களுக்குப் பதிலாக இடம் பெயர்ந்தவன். நீகிரோக்களைப்பற்றி கதைப்பதற்கு வகையே இல்லாத காலம் ஒன்று வரப்போகிறது' என அவள் சோதிடம் கூறுவது போல் கூறினாள். கிழவன் விநயமாகச் சிரித்தான். 'உண்மைதான்' என்றான். 'கா கா'.

இளைஞன் ஒன்றும் கூறவில்லை. அவனில் துன்பத்தின் சாயல் தெரிந்தது. அவள்வீட்டுக்குள் போனதும். 'இந்தப் பெரிய வயிற்றுக்காரி எப்போதும் தனக்கு எல்லாம் தெரிந்தது போல் பாவனைபண்ணுவாள்.' என்றான்.

'இவற்றைக்கருத்தில் எடுத்துக் கொள்ளாது உனது பதவி எவராவது உன்னுடன் போட்டியிடுவதற்கு பெரியதல்ல' என்றான் கிழவன்.

தனக்குத் தோன்றிய அச்சம் பற்றி திருமதி. சோட்லி, சோட்லிக்கு அவன் வேலைக்குப் போகும்வரை எதுவும் சொல்லவில்லை. ஒருநாள்படுக்கைக்குச் செல்லும் போது 'அந்தமனிதன் எதிலும் தலையிடுபவனாகவே இருக்கிறார்' என திருமதி. சோட்லி கூறினாள்.

'திரும்பவும் தலையிடுபவர்கள்' எனக் கூறிக் கொண்டே வலுவான உதை ஒன்றை சோட்லியின் விலாவில் கொடுத்தாள். யாராலும் அவர்களுக்கு என்னதெரியும் எது தெரியாது எனக் கூறமுடியாது இருக்கிறது. அவனுக்கு அது தெரிந்தால் நேரேஅவளிடம் சென்று அதுபற்றிக் கூறாமல் இருப்பான் என எப்படிச் சொல்ல முடியும். ஐரோப்பாவில் அவர்கள் மதுபானம் தயாரிக்காமல் இருப்பார்களா? அவர்கள் ரக்ரரும் ஓடுகின்ற னர் அவர்களுக்கு எல்லாவிதமான இயந்திரங்களையும் பாவிக்கத் தெரிந்திருக்கிறது. நீ இதற்கு மறுமொழி சொல்?'

'இப்போது என்னைத் தொந்தரவு செய்யாதே நான் உயிரற்ற மனிதன் ஒருவன் போலிருக்கிறேன்.' என்றான் சோட்லி.

'அவர்களின் கண்கள் இந்த மண்ணிற்குத் தொடர்பற்ற அன்னியமானவை. அவன் தோளை குலுக்கும் விதம்!' எனக் கூறி தனது தோளை உயர்த்தி குலுக்கினாள். 'எப்படித்தான் தோளை அப்படிக்குலுக்குகிறார்களோ' 'எல்லோரும் என்னைப்போல் சடலத்தின் நிலையிலிருந்தால் எவருக்கும் எந்தத் தொல்லையும் இல்லை' என்றான் சோட்லி.

'அந்தப் பாதிரி' எனமுணுமுணுத்த திருமதி. சோட்லி ஒரு நிமிடம் பேசாமல் இருந்தாள்;' ஐரோப்பாவில் மதுபானம் வடிக்க அவர்கள் வேறு முறைகளை வைத்திருந்தாலும் வைத்திருக்கலாம்' ஆயினும் அவர்களுக்கு எல்லாமுறைகளும் தெரியும் என்றே நான் நினைக்கின்றேன் அவர்கள் ஒருபோதும் திருந்திய உயரிய முறைகளை பின்பற்றவே மாட்டார்கள். ஆயிரம்வருடங்களுக்கு முன்பிருந்த மதத்தை மாற்றாமல் அப்படியே பின்பற்றுகிறார்கள். அவற்றுக்கெல்லாம் பிசாசுதான் காரணம். எப்போதும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டும் முரண்பட்டுக் கொண்டும் இருந்து விட்டு எங்களை அதற்குள் இழுத்து விடுகிறார்கள். நாங்களும் புத்தி கெட்டுப்போய், அங்கே சென்று அவற்றை அவர்களுக்குத் தீர்த்து வைக்க, பின்பு அவர்கள் இங்கே வந்து விடுகிறார்கள். முன்பே இப்படி இரண்டு முறை நடந்திருக்கிறது. திட்டமிட்டுக் கள்ளத்தனமாகப் பழகியபடி நாங்கள் விறைத்துப் போய் நிற்க, அவளிடம் நேராகச் சென்று ஏதோ அவள் தங்களுக்கு கடமைப்பட்டவள்போல் அவளின் கையை எந்தநேரத்திலும் முத்தமிட முயல்கிறான். நான் சொல்வது உனக்குத் தெரிகிறதா?'

'இல்லை' என்றான் சோட்லி

'நான் உனக்கு இன்னுமொன்று சொல்லவேண்டும். நீ ஆங்கிலத்திலோ அல்லது வேறு எந்த மொழியிலோ பேசினாலும் கூட என்ன சொல்கிறாய் என்பது முழுமையாக அவனுக்கு விளங்கும் என்றே நினைக்கிறேன். இதையிட்டு நான் மிகப்பெரிதாக ஆச்சரியமடையப் போவதுமில்லை.'

'நான்வேறொரு மொழியும் பேசுபவன் அல்ல' என சோட்லி கூறினான்.

'நான் ஐயுறுகிறேன் இன்னும் சிறிது காலத்தின் பின் இங்கு எந்த நீகிரோக்களும் இருக்க மாட்டார்கள் நான் போலிஸ்காரர்களைவிட நீகிரோக்கள் இருப்பதையே விரும்புகின்றேன். மேலும் தருனம் வரும் போது நீகிரோக்கள் பக்கம் நின்று வாதிடுவேன் கொபிள் சுக்கள் இங்கு முதன்முதலாக வந்ததை ஞாபகப்படுத்திப்பார். தானும் ஒரு கறுப்பினத்தவன் போன்ற உணர்வுடன் எந்தவித வேறுபாடும் காட்டாமல் அவர்களுக்கு கைகுலுக்கினான். பின்னு சல்க் வான்கோழியைக் களவெடுத்த போது கௌசக் அவளிடம் சென்றுமுறையிட்டானே. எனக்கும் கூட சல்க் வான்கோழிகளைத் திருடுவது தெரியும் அவளுக்கு சொல்லியிருக்கலாம்.

(தொடரும)

---

# பன்முகம் 18

## தெற்கு ஊடகவியற் பார்வை ஒன்று...

தென் பகுதியில் இருந்து வன்னிக்கு வருகை தந்திருந்த ஊடகவியலாளர் ஒருவரைத் தற்செயலாகச் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. பொய்மையில்லாத அவரது பேச்சு எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

வயது நாற்பத்தைந்து தான்,



புகைத்தல், குடித்தல், போதைப் பொருள், மச்சம் போன்ற எந்தவித பழக்கங்களும் இல்லாதவர். ஆக முட்டை மட்டும் தவிர்க்க முடியாத காரணத்தால் தான் உண்பதாகக் கூறினார்.

சமயம் அவருக்குப் பௌத்தம் தான். ஆனால் பௌத்தத்தை தான் ஒரு தத்துவமாக கொள்கின்றேனே தவிர சமயமாகக் கொள்ளவில்லை, தான் விகார வழிபாடுகளுக்குப்போவது கூட இல்லை என்று கூறினார்.

சர்வதேச ஊடகங்களுடன் தொடர்புடைய சிங்களவராக இருந்தும் கூட வன்னியின் ஊடகவியலாளர்கள் குறைவான சாதனங்களை வைத்துக்கொண்டு இயற்றும் சாதனைகளை மனந்திறந்து வியந்து பாராட்டவும் செய்தார். அதேவேளையில் ஏனைய சிங்கள மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில். அறிவியல் தொழில்நுட்ப பொருளாதார கல்வி வளர்ச்சியில் சுமார் இருபது ஆண்டுகள் பின்தள்ளப்பட்டு விட்டார்கள் என்ற கவலையும் தெரிந்தது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் சிறுவர் பராமரிப்பு இல்லத்தால் ஈர்க்கப்பட்டிருந்ததையும், அக்குழந்தைகளின் எதிர்காலம் வளமாக அமய வேண்டும் என்ற ஆதங்கமும் அவர் குரலில் தொனித்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.

இன்னுமொரு முக்கியமான கருத்தை அவர் முன்வைக்கவும் தவறவில்லை. பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டதும் இன்று வெளிநாடுகளில் வாழ்பவர்கள் பலர்மீளவும் இங்கே வந்து குடியேறுகின்றார்கள். இங்கே வருபவர்கள் பொருளாதாரத்தில், கல்வியில் மிகவளமுடையவர்களாகவே வருவார்கள். வெளிநாட்டுச் சூழ்நிலையில் வாழ்ந்து, படித்து, பழக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் பல்துறைகளிலும் உயர்ச்சி பெற்றவர்களாகவே வருவர். அப்படி வருவோரின் இளம் தலைமுறைகளுக்கு இந்த நாட்டின் பண்பாடும் வாழ்க்கைமுறையும் எந்தளவுக்கு ஒவ்வக்கூடியதாக இருக்கும் என்பது வேறு பிரச்சினை.

எண்ணிப்பார்க்க முடியாத அளவு துன்பதுயரங்களுக்குள் இந்நாட்டில் வாழும் எமது சிறுவர்கள், இளைஞர்கள் அனைவரும் அனைத்துத்துறைகளிலும் அவர்களுக்குப் பல ஆண்டுகள் பின் தங்கியவர்களாகவே இருக்கப்போகின்றார்கள். ஆனால் அந்த அளவுக்கு எமது இளையசமுதாயம் நலிவடைந்ததாக வளர இடமளிக்கவிடக்கூடாது.

அவர் கூறிய அனைத்தையும் மௌனமாகக்கேட்டுக்கொண்டிருந்த எனக்கு இந்த நேரத்தில் பேசவேண்டும் போலிருந்தது.

"இன்றைய இந்தத் தலைமை இருக்கும் வரை, அவரோடு போராட்ட வாழ்வில் இணைந்து இங்கேயே வாழ்ந்து தம்மை அனைத்து விதத்திலும் அர்ப்பணித்த எமது இளந்தலைமுறைக்கு அப்படியொரு நிலைமை ஏற்படாது. இதுவரை நடந்த அத்தனை அனர்த்தங்களுக்குள்ளும். எம்மவர்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கான காரணமே அதுதான். சமாதான சூழ்நிலை ஏற்படுமானால் இந் நிலையில் மேலும் வளர்ச்சிகாணுமே ஒழிய தளர்ச்சி ஏற்படாது" என்றேன்.

அதனை ஏற்றுக்கொண்ட அவர் "நீங்கள் கூறுவதிலும் உண்மையுண்டுதான். இராணுவ ஆதிக்கத்தில் இருந்த பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் இன்றைய இந்த சுமுகமான நிலை நிலவவேண்டும் என்பதிலும் அதற்காக சிங்கள அரசுகளுடன் ஒத்துப்போனால் என்ன என்று நினைக்கும் அளவுக்கு மனப்பக்குவம் அடைந்துள்ளனர்.


அதேபோன்று இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை விடவும் கல்வி, தொழில் நுட்பம், பொருள்வளம் என பல்வேறுதுறைகளிலும் முன்னேற்றமடைந்திருக்கின்றோம் என்ற மன நிலையுடனும். நாட்டை மீளவும் கட்டியெழுப்பப்போகின்ற சக்திகள் தாமே என்ற நம்பிக்கையுடனும் வெளிநாடுகளில் இருந்து மீளக் குடியேற வரும் அவர்கள். புலிகள் இவ்வளவு காலமும் மக்களை நெறிப்படுத்தி வழிநடத்திய கட்டுப்பாடுகளுக்கு தாமும் கட்டுப்படுவதை ஜீரணித்துக்கொள்ள முடியாதவர்களாக புலிகளுக்கு எதிராக திரும்பக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஒரு பெரும் சிக்கலாக எழும். ஆகவே போராட்டம் நடந்து கொண்டிருந்தாலென்ன. அமைதியான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலென்ன அறிவியல் ரீதியாக இங்கு வாழும் இளந்தலைமுறையினர் வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கு இணையாக வளர்த்தெடுக்கப் படுதல் வேண்டும் என்ற தனது கருத்தை வலியுறுத்திக்கூறினார்.

அவரது கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இங்குவாழும் இளையவர்கள் மட்டுமல்ல முதியவர்களும் போராளிகளாக மட்டுமல்ல அழிக்கப்பட்ட நாட்டை கட்டிஎழுப்பும் சக்திகளாகவும் விளங்குகின்றனர். இதுவரைகாலமும் எம்மை இறுக்கி அழுத்திக்கொண்டிருந்த பொருளாதார, மருந்துத்தடை, கல்வி உபகரணத் தடைகளுக்குள் அனைத்திற்கும் ஈடுகொடுத்து ஏனைய மாவட்டங்களுக்கு நிகராக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் தலை நிமிர்ந்தது எப்படி? இங்குள்ளவர்களின் மூளைவளத்தினால் தானே. அதிகம் கூறுவானேன். நாடெங்கிலும் விதைக்கப் பட்டிருக்கும் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை எந்த வெளிநாட்டு தொழில் நுட்பவியலாளரின் துணை கொண்டு ஆரம்பித்தனர்? மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் சேவையைக் கண்டு வெளிநாட்டில் இருந்து வந்த கண்ணிவெடி அகற்றும் தொழில்நுட்பவியலாளரே வியந்தனர் என்ற செய்தியைத்தான் அறிகின்றோம்.

ஆயினும் புலம் பெயர்ந்து சென்று வாழும் ஈழத்தமிழ் மக்களின், நன் மனதும், கொடைகளும் உள்நாட்டில் இருந்துகொண்டு இன்னல்படும் மக்களுக்கு அட்சய பாத்திரமாக வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் மீளவரும் போது இன்னுமொரு ஆக்கிரமிப்புச் சக்தியாக வரமாட்டார்கள். எம்மோடு இணைந்து ஆக்கும் சக்தியாகவும், ஆளும் சக்தியாகவுமே வருவார்கள். என்ற நம்பிக்கை நூறு வீதம் உண்டு.

நாவண்ணன்

நியாயமான தவறு, இரக்கத்திற்கு உரியது; நிபந்தனைக்கல்ல. – செஸ்ட்டர்ஃபீல்ட்பிரபு



சிறுகதை

# வணக்கத்துக்குரியவன்



பேருந்து பிரதான சாலையிலிருந்து பிரிந்து மண் வீதிக்குத் திரும்பியது. சாருமதி மடியில் துவண்டு கிடந்த பானுமதியை உசுப்பினாள். பயணம் ஆரம்பித்து அரைமணியிலேயே தூங்கி விட்டாள், இந்தப்பயண அனுபவம் குழந்தைக்குப்புதியது.

"மம்மி...ஹவ் வீ கம் அவ பிளேஸ்?" என்று தூக்கக் கலக்கத் திலும் ஆங்கிலத்தை அழகாக உச்சரித்தாள், ஐந்துவயது பானுமதி அவள் பேச்சு, செய்கைகள் எல்லாம் அப்படியே ராகவனை உரித்துவைத்தது போல்...

சாருமதி பெருமூச்செறிந்தாள். "வந்துட்டோம் பானும்மா" "சாரு பயணப்பையை இப்பிடித் தந்துவிட்டு குழந்தையோட இறங்கம்மா..." என்று முன்னிருக்கையிலிருந்து மாமி கூறிவிட்டு திரும்பி இவளைப்பார்த்தாள்; துணுக்குற்றாள்.

"சாரு அழுறியாம்மா"

"இ...ல்.....லே மாமி நீண்ட நாள் கழிச்சு ஊர்திரும்பியிருக்கிறோமே....! அதனால..."

"எனக்குப் புரியுதம்மா உன்வேதனை. வெறுமையாக இருக்கிற உன் நெற்றி, மூழியாயிருக்கிற கழுத்து, கூடவே அப்பாவைப்பாக் கணும் என்று துடிக்கிற குழந்தை பானுவையும் பார்க்கிற போது மனசு கனத்துப் போகிறது தாயே!"

"எனக்கும் குழந்தைக்கும் தைரியம் கொடுக்க வேண்டிய நீங்களே இப்படி மனமொடிஞ்சு போகலாமா? உங்கள் மகன் கூட ஆயுளுக்கும் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்கவில்லையென்றாலும் அவர் வாரிசான இவள் இருக்கிறாளே...! தாய்க்கு மேலாக பாசத்தைக் கொட்ட என் பக்கத்தில நீங்கள் இருக்கிறீங்களே...! நீங்கள் இருவரும் பக்கத்தில இருக்கிற போது எனக்கென்ன குறைச்சல்?"

"என்ன இருந்தாலும் உன் வாழ்க்கையில் நானும் ராகவனும் குறுக்கே வந்திருக்கக்கூடாது என்று தோணுதம்மா. கட்டில்லாத பறவையாக கல்லூரி வாழ்க்கையில சிறகடிச்சிருந்த உன் மண வாழ்க்கை இப்பிடி அற்ப ஆயுளில முடிஞ்சிட்டதைப் பார்க்கிறப்போது தினம் குற்ற உணர்வு என்னைத் தின்னுதம்மா..."

"பத்து ஆண்டுகளுக்கு முந்தின கதையெல்லாம் இப்போது எதுக்கு மாமி?"

"நானும் ஒரு பெண்ணாக இருக்கிறதால உன் ஆழ்மன வேதனைகளை மானசீகமாக என்னாலும் புரிந்துகொள்ள முடியும், சாரு! என்னோட வற்புறுத்தலுக்கு வளைஞ்சுகொடுத்து ராகவனை மணந்து நோர்வேக்கு வந்திருக்கல்லையென்றால், ஒரு வேளை பூவும் பொட்டோட நீ விரும்பியிருந்த அந்தப்பையன் கூட சுமங்கலியாக வாழ்ந்திருப்பாய் தானே..." மாமி அரற்றினாள்.

"நீங்கள் இப்படிப் பேசுறது நியாயமா மாமி...? ராகவனை நான் விருப்பத்தோடுதானே கணவனாக ஏத்துக்கொண்டேன்"

"உன் பெற்றாரோட வற்புறுத்தலுக்கு இணங்கியே ராகவனை மணக்கச் சம்மதிச்சனி என்று எனக்கு நல்லாவே தெரியுதம்மா. அதுவும் இரத்தப்புற்றுநோயால தாக்கப்பட்டு மிஞ்சிப்போனால் ஒன்பதோ பத்து ஆண்டுகளுள் இறந்துடுவானென்று தெரிஞ்சு கொண்டே அவனை மனதார ஏத்துக்கொண்டாய்பாரு, பெரிய மனசம்மா உனக்கு...!" சாருமதியின் கரங்களை தன் நடுங்கும் கைகளால் பற்றினாள்.

"பழசெல்லாம் இப்போது எதுக்கு மாமி...? என்மனசிலிருந்து கடந்த கால நினைவுகளை அடியோட அகற்றிவிட்டேன். இனி என்கணவரோட பெருமைகளுக்கெல்லாம் உண்மையான மனைவியென்ற சிறப்போடு வாழ்வதும், பானுவிற்கு அன்பான தாயாக இருப்பதுமே எனக்குச் சிறப்பளிக்கும். அதற்காகவே நான் ஊர் திரும்புவதில்லையென்ற முடிவோடு ஒஸ்லோவில் தங்கிவிட்டேன்.... நீங்கள் தான் பிறந்த ஊரை ஒரு தடவை பார்த்துவரவேண்டுமென்று வற்புறுத்தி என்னையும்..." மாமி எதுவும் சொல்லவில்லை. சாரு சொல்வது உண்மைதான். ஊருக்கு வரவிருப்பமின்றியிருந்தவளை ஒரு மாற்றமாக இருக்குமேயென்று கூறி மாமிதான் அழைத்துவந்திருந்தாள். குழந்தை பானுவின் பாடசாலை தமிழ் நண்பர்கள் தாயகம் சென்று வந்து கதைகளாக அங்குள்ள நடப்புகளைச் சொல்லும் போது குழந்தையினுள் எழுந்த கனவுகளும் இன்னொரு காரணம்.

அவர்கள் அவசரத்துக்கு ஆட்டோவொன்று அருகில் கிடைத்தது.

"மம்மி, கொஞ்சம் பூப்பறிச்சுக்கொடு" அருகில்நின்ற செவ்வரளி மரங்களைக் காட்டிக் கேட்டாள், குழந்தை.

"எதுக்கம்மா பானு...?"

எங்கட வீட்டுக்கு அருகில துயிலுமில்லம் இருக்கிறதா சொன்னாயேம்மா... திரும்பிவரும் போது அங்கேயிருக்கிற மாமாக்களுக்கு வைத்து வணக்கம் செய்யணும் அதுக்குத்தான்...."

'ஓ...இந்தப் பிஞ்சின் எண்ணத்திலும்.....!' சாருமதி உள்ளம் நெகிழ்ந்து போனாள். கை நிறைய பூக்கள் பறித்துக்கொடுத்தாள்.

புழுதி பறக்கும் வீதியில் பயணம் ஆரம்பமானது.

ஏன் மாமி எங்கட வீடு தான் மூணுவருடங்கள் முன்னாடி விமானக்குண்டு வீச்சில் அழிஞ்சிட்டதாக உறவுக்காறங்கள் எழுதியிருந்தாங்களே! இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்...?"

"சொன்னால் கோவிச்சுக் கொள்ளாதேயம்மா....நம்மட காணியைப்பார்த்துக்கொண்டு அருகில கனகபுரத்தில் இருக்கிற

**கோணாவில் கிருபா**

முரளி வீட்டுக்கும்...."

"மாமி,என்ன சொல்லுறீங்கள்....?" சாரு அதிர்ச்சியில் அலறினாள். குழந்தை எதுவுமே புரியாமல் விழித்தாள், அம்மாவையும் பாட்டியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"ராகவன் நம்மைப் பிரிஞ்சதுக்கப்புறம் எனக்குள்ள ஓர் உறுத்தல் தினம் என்னைக் கொல்லுது! என்பையனின் மகிழ்ச்சிக்காக - நிம்மதிக்காக முரளியை பலிக்கடா ஆக்கிட்ட குற்ற உணர்ச்சி என்னை வாட்டுது... அந்தப் பையனையும் அவனோட அம்மா செண்பகம் அத்தையையும் நேரில காணத்துடிக்கிறேன், நடந்ததைச் சொல்லி இருவர்கிட்டேயும் மனம் விட்டுப் பேசினால்தான் எனக்குள்ள அமைதி ஏற்படும் சாரு!" மாமி மனந்திறந்து கொட்டினாள்.

"மாமி இதனால ஏற்படப் போகின்ற விளைவுகளைப் பற்றி நீங்கள் நினைச்சுப்பார்க்கல்லையா...." சாருவின் மனதுள் குறுகுறுப்பு! அவள் வாழ்க்கையில் இனி மீட்டுப் பார்க்கக் கூடாதென மூடிவைத்த பக்கங்களை திறந்து பார்க்கின்ற சஞ்சலத்தில் அவள்....

"ஏன் பதில் பேசமாட்டேங்கிறீங்கள் மாமி?"

"சாரு,நான் ஏற்கனவே செய்த பாவத்துக்கு பிராயச்சித்தம் தேடப் போறேனம்மா...என்னை அதற்கு அனுமதிப்பியா...?"

வாகனச் சாரதி திரும்பி இவர்களையே பார்த்தபடிவர சாருமதிக்கு நிலமை தர்மசங்கடமாகியது.

"சரி மாமி வர்றேன் - உங்கள் திருப்திக்காக கூடவர்றேன்..." அவள் சொன்ன பதில் மாமிக்கு ஆறுதலாயிருந்தது. மாமி நினைத்து வந்திருப்பது போல் வேரிழந்து போன அவள் வாழ்விற்கு ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துவைக்க முடிந்தால்... எப்படியும் முரளியுடன் கதைத்துவிடுவதென்று மாமி உள்ளுக்குள் நினைத்தாள்.'எல்லாம் நல்லபடியாக நடக்க இனி புளியம் பொக்கணை நாகதம்பிரான்தான் வழி காட்டவேணும்' மனசார வேண்டினாள்.



****

கனகபுர கிராமத்து ஒழுங்கையில் அந்தக் கடைசி வீட்டின் படலையைத் திறந்து கொண்டு நுழைந்தபோது இனம் புரியாத பரபரப்பொன்று சாருமதிக்கு ஏற்பட்டது. கால்கள் ஒன்றுடன் மற்றையது பின்னிக்கொள்ள மகளின் தோளைப பற்றியவாறு நடந்தாள்.

கல்லூரி நாட்களில் பாடக் குறிப்புக்கள் வாங்கும் சாக்கில் அடிக்கடி அவள் வந்துபோன முரளியின் வீடு. முற்றத்து மா,பலா, முழுநெல்லி மரங்கள் அனைத்தும் முன்னர் நின்ற அதே இடங்களில்... ஓங்கிவளர்ந்து... அவள் மட்டும் இப்போது அந்த வீட்டுக்கு முற்றிலும் அன்னியமாகிவிட்ட உணர்வு அவளுள் தலை தூக்கியது.

'முரளி இப்போது வீட்டில் நிற்பானோ....'

'அவனுக்கும் திருமணமாகி குழந்தைகளேதும்.... இல்லாது போனால் இன்னும் கடந்தகால நினைவுகளை மறக்க முடியாது வாழ்விலும் ஒட்ட முடியாது உருக்குலைந்து போயிருப்பானோ...?' அவளுள் துக்கம் திரண்டுவந்து நெஞ்சையடைத்தது.

"யாரு படலையைத் திறக்கிறது?" ஒருக்களித்திருந்த கதவைத்திறந்து கொண்டு வெளிப்பட்ட மூதாட்டி கண்களை இடுக்கிக் கொண்டு ஏறிட்டாள். அது செண்பகம் அத்தைதான்!

"அத்தை....நான் சாரு... சாருமதி வந்திருக்கிறேன்" தொண்டைக்குள்ளிருந்து வார்த்தைகள் விம்மலாக வெளிப்பட்டது.

"அப்படியா நல்லாய் இருக்கிறாயா சாரு...! இத்தனை ஆண்டுகள் இந்த அத்தையைப் பார்க்க வராம இருந்திட்டாயேயம்மா...!"

சாரு பதில் கூறாது அத்தையின் கைகளுள்முகம் புதைத்து விம்மினாள்.

அழாதேயம்மா...ம்... பொழுதாயிட்டதால பார்வையும் மங்கீற்றுது நல்லா பார்க்கமுடியல்லையம்மா! படிக்கிற நாளில இரட்டைப் பின்னலை வீசிட்டு தினம் ஒரு தடவையாச்சும் என்னைப் பார்த்துவிட்டுப் போக வருவியே! இடையில இவ்வளவு ஆண்டுகள் உருண்டோடி விட்டது. மருமகனை அழைச்சுவரல்லையா...?"

"இல்லை செண்பகம் அத்தை.... அவன் இந்த உலகத்திலயிருந்து நிரந்தரமாகவே பிரிந்துபோயிட்டான்." பார்வதி மாமி துயரத்தோடு சொன்னாள்.

"என்ன சொல்லுறாய் பார்வதி...?"

"ஆமாம் அத்தை, சாரு இந்த வீட்டு மருமகளா வந்திடக் கூடாதென்று ராகவனுக்கு கட்டிவைத்து நோர்வே அழைச்சுப்போனேன். அதை ஆண்டவனால கூடபொறுத்துக்க முடியல்லை, குழந்தை பிறந்து மறுவருடமே புற்றுநோய்க் கொடுமையால நம்மைவிட்டே போயிட்டான்."

"கேட்கவே பெரிய வேதனையா இருக்கு பார்வதி"

"உங்களிட்ட மன்னிப்புக் கேட்கணும் என்கிறதுக்காகத்தான் ஓடோடி வந்திருக்கிறன்....முரளி எங்கே அத்தை? அவன் என்னை மன்னிச்சிட்டேன் என்று ஒரு வார்த்தை சொன்னாற்தான் என் மனசு ஆறும்!" என்ற பார்வதி மாமிக்கு அத்தை பதிலேதும் சொல்லவில்லை. அனைவரையும் திண்ணையில் அமரவைத்துவிட்டு இருளைத்துழாவியபடி உள்ளே சென்றாள். வீட்டினுள் தகரப் பெட்டி திறந்து மூடும் ஓசை.

காலம்போய் விளிம்புகள் நைந்துபோயிருந்த தாளொன்றை எடுத்து வந்தாள், அத்தை. சாருமதி நான்காக மடித்திருந்த கடதாசியைத் திறந்தாள்.

"விளக்கு எடுத்துவர்றேன் சாரு" அத்தை தடுமாறியபடி உள்ளே போனாள். சாரு பொறுமையின்றி கையடக்க ரோச்சை உயிர்ப்பித்தாள். அதன் ஒளியில் பார்த்தவள் அதிர்ந்தாள். முரளியின் மடல், அவளுக்கென்று எப்போதோ எழுதியது. இவ்வளவு காலங்கடந்து இப்போது....

'....அன்பின் சாரு, இதை எழுதும் போது யதார்த்த வாழ்வைப் புரிந்துகொண்ட தெளிவோடுதான் எழுதுகிறேன். இதைப்புரிந்து கொண்டுநீயும் ஏற்றுக்கொள்வாய் என உறுதியாக நம்புகிறேன்!

கல்வியொன்றைத்தவிர எதுவுமேயற்ற என் மீது நீ கொண்ட தூய அன்பிற்கு என்றும் தலை வணங்குகின்றேன். பெற்றோர், உறவுகளைத் துறந்து என்னுடன் வந்து வாழக்கூட தயாராகிவிட்ட உன் அன்பின் ஆழத்தை அளவிட என்னிடம் அளவுகோல் இல்லை... ஆனால் எனது தற்போதைய நிலையை விளங்கிக்கொள்ள முயற்சி செய், சாரு. நான் தனிமனித வாழ்வு, ஆசாபாசங்களிலிருந்து விடுபட்டு எம் இனத்தின் தலைநிமிர்விற்காய் - சுபீட்சமான வாழ்விற்காக என்னை அர்ப்பணித்து விட்டேன். புரிகிறதா...? நாட்டின் ஒளிமயமான எதிர்காலமொன்றே எனது குறி!

நான் செல்லும்பாதை நேரானது; கரடுமுரடானது. இதில் உன்னையும் அழைத்துச்செல்ல எனக்கு உரிமைகிடையாது. அதற்காக எனது கடமைகள் முடிந்து திரும்பி வரும்வரை உன்னைக் காத்திருக்கச்சொல்லவும் இயலாது. இடையில் என்வாழ்க்கைப் பயணம் முற்றுப்பெற்றும் போகலாம்.

எனவே உன்னைத்தேற்றிக் கொண்டு புதிய வாழ்வொன்றிற்கு உன்னைத் தயார்படுத்திக்கொள்! உன் பெற்றோர் ஏற்கனவே பார்த்திருக்கின்ற ராகவன் சகல விதத் திலும் உனக்குப் பொருத்தமான வன், அவன் நிச்சயம் உன்னைப் புரிந்துகொண்டு நல்ல கணவனாக, தோழனாக ஆயுளுக்கும் துணைவருவான்....

என்னுடைய ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் என்றும் உனக்கு உண்டு.

அன்புடன் விடைபெறும்.
முரளி.

எழுத்துக்களை விழுங்கிக் கொண்டுபோன விழிகளாலே அவள் ஆழ்மனவேதனையைத் தாங்க முடியவில்லை, கண்ணீர் பொலபொலவென உதிர்ந்து காகிதத்தை நனைத்தது.

அப்படியென்றால்....

வாசலில் விளக்கொளி நிழலாட நிமிர்ந்தாள். அறைபூராகவும் பரவிய வெளிச்சத்தில் எதிரே மாடத்தில் பூச்சரம் கோர்த்த முரளியின் படம் இருவருடங்களின் முன்னர் அவன் விதையாகிவிட்டதை உணர்த்த... "முரளி..."யென வீறிட்டாள்.

"முரளி கூட நம்மைப் பிரிந்துபோய் இரு வருடங்களாகிறது சாரு...." அத்தையின் குரலில் சோகம் இழையோடியது.

"மம்மி இங்கே கூட ஒரு மாவீரர் மாமாவோட போட்டோ இருக்குதும்மா" குழந்தை பூங்கொத்துடன் எழுந்து நடந்தாள், அவை இனி அவன் காலடியில் சேரவேண்டியவையே.

ஆம், அவன் எல்லோரதும் வணக்கத்துக்குரியவன்!

# சமூக மாற்றங்களும் இலக்கியப் போக்கும் முருகானந்தனின் கதைகளினூடே ஒரு கண்ணோட்டம்

சமூக மாற்றங்கள் இலக்கியப் போக்கைப் பாதிக்கும் அதேவேளையில் இலக்கியங்களும் சமூகத்தைப் பிரதிபலிக்கின்றன. அனுபவமும், ஆய்வுநாணும், தெளிந்த சிந்தனையும் கொண்டு படைக்கப்படும் சிறுகதைகள் சமூகத்தின் போக்கைச் சரியான திசையில் நெறிப்படுத்த தமது பங்களிப்பைச் செய்கின்றன. ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்ச்சியானது சுய அனுபவச் சிந்தனையோடு உந்தப்பட்டு எழுதும் போது ஒரு இலக்கியமானது தூண்டியாகச் செயற்படுகின்றது. எனவே எத்தகைய பிரச்சினையிலும் சரி இலக்கியமானது சமூக விழிப்புணர்விற்கு உறுதுணையாக நிற்கிறது. நிற்க வேண்டும் என்பதை டாக்டர்.ச.முருகானந்தன் அவர்களின் கதைகளில் கருதுகோளாக இருந்துள்ளது.

இவர் எழுத்துலகில் காலடி எடுத்துவைத்த காலம் 1977 ஆம் ஆண்டிற்குப்பின் இனப்பிரச்சினைகள், வர்க்க முரண்பாடுகள் மலிந்து காணப்பட்ட ஒரு காலச்சூழல். அதாவது 1960 களில் ஏற்படுத்தப்பட்ட தனிச் சிங்கள ஆட்சிமொழிச் சட்டம், அதைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட"ஸ்ரீ" போராட்டம், இனக்கலவரம், சத்தியாக்கிரகம் என்பனவும், கண்டிபாதயாத்திரை என்பனவும் இனப்பிரச்சினை பற்றிய சிந்தனைகளைப் பலரிடையே ஏற்படுத்தின. தொடர்ந்து 1974ல் ஏற்பட்ட தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலைகள் என்பன தமிழ் மக்களிடையே போராட்டச் சிந்தனைகளைத் தூண்டின. தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைகளும் அதற்கு எதிரான அரச நடவடிக்கைகளும். தொடர்ந்து வந்த 1977ன் இனப்படுகொலைகள், பாரளுமன்ற அரசியலில் ஏற்பட்ட விரக்தி, 1983ம் ஆண்டில் ஏற்பட்ட இனப் படுகொலைக்கொடுமைகளைத் தொடர்ந்து இளையதலை முறையினர் ஆயுதப் போராட்டம் ஒன்றே விடுதலைக்கு வழி என்ற முனைப்புடன் போராட்டத்தில் குதித்த காலம். இத்தகைய ஒரு சூழலிலேதான் டாக்டர் ச. முருகானந்தன் பல கதைகளை எழுதியுள்ளார். இதனால் இவரது படைப்புக்களில் கூடுதலானவை வர்க்க முரண்பாடுகளையும், போராட்டங்களையும், இனப்பிரச்சினைகளையும் அதன் விளைவாய் ஏற்பட்ட கொடுமைகளையும், தாக்கங்களையும் சித்திரிப்பனவாக காணப்படுகின்றன. ஒரு சமூகத்தில் படைக்கப்படும் இலக்கியமானது சமகால சம்பவங்கள் நிறைந்ததாகவும். அது அப்படியே உள்ளத்தைத் தொடுவதாகவும் உள்ளதை உள்ளபடியே சித்திரித்துக் காட்டுவதாகவும் கருத்தளாம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். பிரச்சினை களை மட்டும் பேசுவதாக இல்லாது அதற்குத் தீர்வு சொல்லி வழி நடத்துவதாகவும் அமைதல் வேண்டும் என்ற கொள்கைகளுக்கு அமைய இலக்கிய உலகில் சஞ்சரித்தவர் டாக்டர் ச.முருகானந்தன்.

டாக்டர் ச. முருகானந்தன் அவர்கள் தமது படைப்புக்கள் மூலம் அவை படைக்கப்பட்ட காலகட்டத்தின் சமூக பிற்போக்குத் தனங்களையும் முரண்பாடு களையும் தகர்த்தெறிவதில் அரும்பணியாற்றியுள்ளார் என்பதற்கு அவரது சிறந்த சிறுகதைகளே ஆதாரமாக உள்ளது. மேலும் அதில் வெற்றியும் கண்டுள்ளார் என்பதற்கு அப்பிரச்சினைகளில் இருந்து ஓரளவிற்கு விடுபட்ட இன்றைய சமூகம் வெளிப்படுத்தி நிற்கின்றமையில் இருந்து உணரக்கூடியதாக உள்ளது. சமூகப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் ஒரு எழுத்தாளனின் படைப்புக்கள் எந்தளவிற்கு உதவியிருக்கின்றன என்பதை இவரது சிறந்த படைப்புகளினூடே நோக்கலாம்.

**ஜெயகவிதா தம்பித்துரை**

சமுதாயத்தில் பேரினவாத அடக்கு முறைகள், இதன் விளைவாய் ஏற்பட்ட வன்முறைகள், பாலியல் வன்முறைகள், கொடுமைகள், இனப்பிரச்சினைகள், போராட்டம் என்பன இவரது கதைக்கு கருவாகின.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இனக் குரோதம் மிளிர்ந்து காணப்பட்ட காலம். இக்கால கட்டத்தில் எழுத்துலகில் சஞ்சரித்த அனைத்துப் படைப்பாளிகளிலும் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தே இலக்கியம் அமைத்துள்ளனர். இத்தகைய கதைகளில் ஒன்றாகவே ச. முருகானந்தனின் 'அலியன் யானை' என்ற கதை (1984) இனப்பிரச்சினையை இலை மறை காயாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. வன்னிப் பிரதேச விவசாயிகளைச் சின்னா பின்னப்படுத்திய அவர்களின் வாழ்க்கையை நாசமாக்கும் ஒரு தனியன் யானை பேரினவாத அடக்கு முறைக்கும். அதைச் சுட்டு வீழ்த்த முயல்வோர்களை போராளிகளுக்குமாக ஒப்பிட்டு எழுதப்பட்ட இச்சிறுகதை இலக்கியத்தில் அந்நிய சக்திகளின் அபாயம் அப்படியே சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இலக்கியம் என்பது சமகால இயைபுடையனவாகவும் சமூகப் பிரச்சினைகள் பற்றியன வாகவும் அமையவேண்டும் என்பதற்கு ஆதாரமாக உள்ளது.

ச.முருகானந்தனின் படைப்புக்கள் பல சாதிப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவனவாக உள்ளன. 1970ல் சாதிப்பிரச்சினைகள் ஓரளவிற்கு அதிகமாகவே இருந்துள்ளன. 1956ம் ஆண்டுக்கு முன்னர் கிராமத்தின் சமூக பொருளாதார அரசியல் அம்சங்கள் யாவும் முழுக்க முழுக்கசாதி அமைப் பிலேயே தங்கியிருந்துள்ளன. இந்த நிலை 1975களில் ஓரளவு தளர்வுற்றிருந்த போதிலும் இந்தியாவின் சாதி அமைப்பில் பிராமணர் சக்தி வாய்ந்த குழுவாக இருந்ததுபோல இலங்கையில் அதிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் உயர் சாதி, தாழ்ந்த சாதி என்ற பிரிவினை இருந்துள்ளது. உயர்ந்த சாதியினர்களே சொத்துடமை உள்ளவர்களாகவும், பெரும் பணக்காரர்களாகவும், இருந்துள்ளனர். தாழ்ந்த சாதியினர் நில மற்றவர்களாகவும், உடல் உழைப்பைநம்பி வாழ்ந்தவர் களாகவும், நாளாந்த ஜீவனத்திற்கே போதாத கூலிபெற்று ஒடுக்கப்பட்ட அடிமைகளாகவும், பற்றாக்குறையுடன் ஜீவனம் நடாத்தி வந்துள்ளனர். சமூக பொருளாதார, ஆன்மீக வாழ்வில் திகழ்ந்த சாதியினர் உயர்ந்த சாதியினரை நம்பியும் எதிர்பார்த்தும் வாழ்ந்த நிலை. 1956ம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கங்களையும், 1960 களில் புதிய அலையாக வந்த எழுத்தாளர் தலைமுறையினரும், இத்தகைய சாதி அடக்கு முறைகளை ஓரளவு தளர்த்தியபோதும் தொடர்ந்து அரசியல் மாற்றங்களினாலும், அவற்றின் ஸ்திரமற்ற தன்மைகளாலும் இத்தகைய சாதி அடக்கு முறைகளும் தளர்வற்றன. டாக்டர் ச. முருகானந்தன் தனது கதைகளுக்கு கருவாக சாதிப்பிரச் சினைகளையும் அதன் கொடுமைகளையும் எடுத்துள்ளமை கூட சமூகத்தை இப்போது தலைவிரித்தாடிய சாதிப்பிரச் சினைகளே காரணம் என்பது புலனாகின்றது. சாதிப் பிரச்சினை இன்றும் நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகிறது. ஆயுதம் தாங்கிய இனவிடுதலைப் போராட்டத்துடன் இணைந்த இந்த நிலைப்பாடு- சாதி வெறி எமது சுதந்திரம் கிடைக்கும் போது முற்றுமுழுதாக இல்லாத நிலை உருவாக வேண்டும்.

சமூகத்தின் முற்போக்கு எண்ணம் கொண்ட நவயுகசிற்பிகள் ஆத்மசுத்தியுடன் செயற்பட்ட காலம் இவருக்குரியது. டாக்டர் ச. முருகானந்தன் அவர்கள் "மீன்குஞ்சுகள்" எனும் சிறுகதைத் தொகுதியில் தனது கருத்தினை வெளியிடுமிடத்து சிறுமைகளை கண்டு சீற்றம் கொள்ளும்எவரும் அதை எதிர்த்துப் போராடவே செய்வர். போராட்ட வழிகள் வெவ்வேறாக இருக்கும். இந்த வகையில் எமக்குக் கிடைத்த ஆயுதம் பேனாவகும் என்று கூறுகின்றார்.

"அநீதிகளையும், அடக்கு முறைகளையும் பிற்போக்கு வாதங்களையும் கண்டு சீற்றம் கொள்வது எனது சுபாவம். சமூகத்தை பல கோணங்களில் நோக்கும் வழக்கம் எனது சிறு பிராயத்திலேயே இருந்தது."என்று கூறும் இவர் தொடர்ந்து சமூக சீர்திருத்தத்தில் பேனா முனையின் பங்கு குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல என்ற உணர்வும் உள்ளத்தில் உள்வாங்கியவற்றை எனது நோக்கில் எடுத்துச் சொல்ல பல இலக்கியம் சிறந்த மார்க்கம் என்ற தெளிவும் என்னை எழுத்தாளனாக்கியது" என்றும் கூறுகின்றார்.

"ஒரு கதாசிரியனுக்கு சமுதாயப் பொறுப்புக்களும், அழகியல் உணர்வை மேம்படுத்தும் கடமைகளும் உண்டு. தான் வாழ்கின்ற சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் பிற்போக்கு வாதங்களை முறியடித்து சமூகஅபிவிருத்தியில் சரியான பாதையை ஏற்படுத்தி மானுட வாழ்வை நெறிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் கலையிலக்கியவாதிகள் பேனா ஏந்தாவிட்டால் அவர்களது ஆக்கங்கள் காலத் தால் அழிந்து விடுவதுடன் அர்த்த மற்றவை யாகிவிடும்" என்கின்றார்.

தனது இருபத்தந்தாவது வயதில் மிகவும் இளமை பொருந்திய வேளையில் கதைஉலகில் பிரவேசித்த டாக்டர் ச. முருகானந்தன் அவர்கள் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை, நகைச் சுவை, பக்தி, வீரம் என்பன போன்ற உணர்வு நிலைகளின் கருப்பொருள்களில் நின்று சிறுகதையாத்துள்ளார்.

ஒரு சிறு கதையானது பல்வேறு வகைப் பட்ட மனித உணர்வுகளில் ஏதேனும் ஒரு உணர்வை ஒரு கண நேரத்திற்குள் தோன்றி மறையச் செய்யுமாயின் அது மிகவும் சிறந்த ஒரு சிறுகதையாக போற்றிப் பயன்படுகின்றது. இவ்வாறான எத்தனையோ சுண்டியிழுக்கும் படித்தவுடன் அப்படியே மனதில் பதிந்துவிடும் சிறுகதைகளை உருவாக்கித் தந்தவர் டாக்டர் ச. முருகானந்தன் அவர்கள். இருந்த போதிலும் அன்று எழுத்துலகில் நட்சத்திரமாக ஒளிர்ந்தவர் இன்று இலைமறை காயாக இருப்பதற்கு என்ன காரணம்? என்பது பற்றியும் 1977-1985இற்குள் அதாவது எட்டு வருடத்திற்குள் ஏராளமான சிறுகதைகளை எழுதிக் குவித்த இவருடைய பணியானது 85-95 வரையான பத்து வருடங்கள் ஆமைவேகத்திலேயே இடம் பெற்றுள்ளன. மிகவும் குறை வாகவே படைத்துள்ளார். இதன் காரணமாக ஆராயப்படவேண்டிய தொன்றாகும். யுத்தத்தினாலும், இடப்பெயர்வினாலும் அல்லல் பட்ட பலலட்சம் மக்களுக்கு வன்னியில் நிலைத்து நின்று இருபது வருடங்களாக சேவை யாற்றி வருவதும் வேலைப் பழுவும், சமூகப்பணிகளும் எழுதும் அவகாசத்தை அபச்சித்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

எழுத்துலகில் 25 வருடங்கள் கால்பதித்துநிற்கும் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதி 'தரைமீன்கள்' விரைவில் வெளிவரவுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

குறிப்பு:- (பி.ஏ (தமிழ்) சிறப்பு கற்கைநெறிக்காக யாழ் பல்கலைக்கழக மாணவி ஜெயகவிதா தம்பித்துரை அவர்களின் ஆய்வில் இருந்து சில பகுதிகள்)



## மூன்றாவது மனம் வியர்க்கிறது

பகைப்படையினனே,
உனது முகாமின் வாயில் அழகியது
சூழவிருக்கும் மலர்ச்சோலைகள் ரம்மியமானவை
அழகிய நீர்நிலை
அதனருகே விழிமூடிய புத்த பெருமான் சிலை.
புற்றரைகளின் பசுமை
புல்லினங்களின் சஞ்சாரங்கள்
விழிமலர்த்தியவுனது புன்னகை
யாவுமே ரசனைக்குரியவை.
என்னால் புரிய முடிகிறது...
நீயொரு இயற்கையின் ரசிகன்
உனது இரசனை அற்புதமானது.

உனது மனைவியின் மீதுள்ள காதலையும்
குழந்தையின் மீதுள்ள பிரியத்தையும்
விட்டுப்பிரிந்தவுனது அழகிய கிராமத்தின்,
உறவுகளின் பிரிவுத்துயரையும்
இராணுவ சஞ்சிகையொன்றில்
அற்புதமான கவிதையாய் படைத்திருந்தாய்.
நீயொரு மெல்லுணர்வுக் கவிஞன்
உனது கவி மனம்
மென்மையானது
அபூர்வமானது
வசீகரமானது
வண்ணத்துப் பூச்சியொன்றின் இறக்கையைப்
போல.

எனது மூன்றாவது மனம் வியர்க்கிறது
உன்னால் எப்படி முடிந்தது
அழகிய எனது கிராமத்தை,
எனது வீட்டை, முற்றத்து மல்லிகையை
இளவேனிற்காலத்துப் பாடல்களை
எனது குழந்தையின்
மழலைக் கனவுகளை
யாவற்றையுமே
சிதைத்திட, அழித்திட
எரித்திட
உன்னால் எப்படி முடிந்தது பகைப்படையினனே

அநாமிகன்

## அடையாளமழிப்பின் சாத்தியம்



என்னைத் தேடுகிறார்கள் என்று
சொல்லியிருந்தாய்,
எனது ஞாபகமாய் உன்னிடமிருந்த
ஒரு பழைய குறிப்புப் புத்தகத்தைக்கூட
பிடுங்கியெடுத்து நெருப்பில் போட்டதாய்
வெதும்பியிருந்தாய்.
எனது அடையாளச் சின்னங்கள்
ஒவ்வொன்றையும் படைத்தழிப்பதாகவும்
செருப்புக்கால்களால் மிதித்து
மிகக்கேவலமாக உதாசீனப்படுத்துவதாகவும்,
என்னைப் பறைசாற்றுகிற
ஒரு சிறு துரும்புகூட
எங்கும் இல்லையென்றும்
துயரியம்புகிற
உனது மொழிகளையும்
அவற்றின் தவிப்பையும்
கொழுந்து விட்டெரிகிற கோபத்தையும்
அவசியமில்லை என்று நான் சொல்லின்
நீ வியப்படைய வேண்டியதில்லை
நிச்சயமாய் வியப்படைய வேண்டியதில்லை
எனது அடையாளப் பொருட்களிலொன்றாய்
நீ கணிக்கப்படாதவரை,
அழிக்கப்பட வேண்டிய பொருட்களில் ஒன்றாக
நீயும் தீர்மானிக்கப் படாதவரை
நான் அழிவதும் சாத்தியமில்லை
நாம் தோற்கப் போவதுமில்லை.
நிச்சயமாய் இல்லை.

திருநகரூர் ஜெகா




சுதன் மிக வேதனையுடன் தந்தையிடம் சொன்னான் "எனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை, இப்படியே போனா நான் கூலி வேலை தான் செய்ய வேண்டிவரும்." இதைக்கேட்ட தந்தை மிகவும் வேதனைப்பட்டார்.

## அவதானம்

அவர் சிறிது நேரம் சிந்தித்து விட்டு "எனது நண்பர் ஒருவர்.. லண்டனில் கடை ஒன்றில் கணக்காளராகவுள்ளார். அங்கு சென்றால் உனக்கு அவர் எப்படியாவது வேலை வாங்கித் தருவார். உனக்கு ஆங்கிலம் தெரியும் தானே? பிறகென்ன? நாலு வீட்டில் கடன் வாங்கி எண்டாலும் நான் ஒழுங்கு செய்கிறன் " என்றார்.

சுதனின் தந்தை பல இடங்களிலும் கடன் வாங்கி சுதனை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். தந்தையின் நண்பர் வரவேற்று தனது மைத்துனரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இருவரும் கைகுலுக்கு கையில் அவருக்கு ஒரு விரல் இல்லை என்பதை சுதன் அவதானிப் பதைக் கண்டதும் மைத்துனர் தானே அதன் விபரம் சொல்லி விடை பெற்றுக் கொண்டார். மறுவாரமே தந்தை யின் நண்பர் தன் முதலாளியிடம் சொல்லி சுதனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தார். அம் முதலாளி சுதனுக்கு கடைக்கு வருபவர்களைக் கவனிக்கும் வேலையைக் கொடுத்தார்.

ஒரு நாள் இரண்டு கள்வர்கள் முகமூடி அணிந்தவாறு கடைக்குள் புகுந்தனர். அவர்கள் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டிப் பணத்தைப் பறித்தனர்.

அவர்களில் ஒரு வன் துப்பாக்கியை ஒரு விதமாகப் பிடிப்பதையும், அவனது கையில் ஒரு விரல் இல்லை, என்பதையும் கவனித்தான் சுதன். இது தந்தையின் மைத்துனராக இருக்கலாம் என்று தோன்றிற்று.

காவல் துறையினரிடம் சென்று சுதன் நடந்தவற்றையும். தன் ஊகத்தையும் சொன்னான்.

காவல் துறையால் கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீட்கப் பட்டது. மைத்துனரும், நண்பரும் கைது செய்யப்பட்டார்.

முதலாளி சுதனைப் பாராட்டி தன் உதவியாளனாக நியமித்தார். தன் கடன்களையடைத்து வாழ்வில் உயர்வு பெற்றான் சுதன்.

**கார் நட்சத்திரன்**

## வாரம் ஒரு குறள்



உலகத்திலே குற்றம் செய்யாதவர் என்று எவருமே இல்லை. குற்றம் செய்து பின் திருந்தி நடப்பவரே உயர்வை அடைகின்றார்.

ஆனால் நாம் நல்லவர்கள் என எண்ணிக்கொண்டு சிறுசிறு குற்றம் செய்தால்கூட ஏதோ பாரிய குற்றம் செய்ததாக எண்ணி ஒருவரை ஒதுக்குவது, ஓரங்கட்டுவது, தண்டிப்பது போன்ற செயல்களைச் செய்கின்றோம். நாம் அவ்வாறு செய்யாது குற்றத்தைத் திருத்தி, நல்லவராக்குவதே சிறந்தது.

எமக்கு ஒருவர் பகையாழியானால் நாம் அவரின் நன்மைகளைப் பாராது அவர் செய்யும் சிறுகுற்றத்தையே வைத்து பழிவாங்க எண்ணுகின்றோம். நாம் அவ்வாறெல்லாம் தீயவழிகளுக்குச்செல்லாமல் இருப்பதற்காக திருவள்ளுவர் 'குற்றம் கடிதல்' என்ற அதிகாரத்தில் பின்வரும் குறலினை மிக அழகாகத் தந்திருக்கிறார்.


**"தினைத் துணையாங் குற்றம்வரினும்**
**பனைத் துணையாக்கொள்வர் பழிநாணுவார்"**

## சிந்தனைத் துளிகள்.

01. பண்புள்ள நண்பன் வாழ்க்கையின் கண்போன்றவன்.
02. அன்பான வார்த்தைகளை உன்நா பேசட்டும்.
03. ஆசைக்கு அடிமையானால் ஆனந்தம் பறந்து போய்விடும்.

**சு.கௌரீஷன்.**

## கண்டு பிடியுங்கள்



**இவ் இருபடங்களில் '6' வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்ப்போம். முடியாவிட்டால் விடைகள் இதேபக்கத்தில் உள்ளன. பூ.றஞ்சன்.**

விடைகள்
01. நாயின் மூக்கு.
02. தாராவின் தலை.
03. தாராவின் சிறகு.
04. பூனையின் வாய்.
05. சிறிய மரம்.
06. பூனையின் வால்.

## நகைச்சுவை



**கண்ணில் பார்வைக்கோளாறு உள்ள ஒருவர் வைத்தியர் ஒருவரிடம் செல்கின்றார்.**

நோயாளி :- டொக்டர்! என் கண்ணுக்கு பாக்கிற எல்லாம் ரெண்டாத் தெரியுது.

டொக்டர் :- அதுக்கேன்.... நாலு பேரும் ஒண்டா வந்தீங்கள்.... தனித்தனியா வாங்க....

நோயாளி :- டொக்டர்! நான் மட்டும் தானே வந்திருக்கிறன்...!??

டொக்டர் :- ஓ...!!!....அப்படியா....!?

**எம்.எஸ்.வரன்**

## மழைமானி எவ்வாறு மழைவீழ்ச்சியை அளவிட்டுத் தரும்

**மழைமாணி ஒரு இலகுவான கருவி**

உருளை வடிவமான ஒரு கண்ணாடிப் பாத்திரத்தின் மேல் 7 முதல் 12 செ.மீ. விட்டமான ஒரு புனல் வைக்கப்பட்டிருக்கும். அது மழை நீரைப் பெற்றுப்பாத்திரத்தினுள் சேர்க்கும். பாத்திரத்தினுள் சேர்ந்த நீரை அளவு பாத்திரம் ஒன்றினுள் விட்டு அளப்பர். அளவு பாத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் அளவே அவ்விடத்தில் பெய்த மழைவீழ்ச்சியின் அளவு ஆகும்.

**கி.சுதாசினி, வள்ளிபுனம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 |
| 07 | | | 10 | | |
| | 14 | 15 | | | |
| | 20 | | | 23 | 24 |
| | | | | | |
| | | | | | |

**இடமிருந்து வலம்**
01. மன்னன்.
07. மீன் பிடிக்க உதவுவது.
10. சந்திரனைக் கண்டு மலர்வது.
14. மாதங்களில் ஒன்று.
20. கேட்பதற்கு இனிமையானவை குழம்பியுள்ளது.

**மேலிருந்து கீழ்**
01. மானத்திற்கு எதிரானவை.
06. வேங்கை.
10. புதுமை.
14. விலங்குகளின் அரசன்.
15. ஒலி குழம்பி உள்ளது.
23. பாம்பிற்கு பகை.
24. பற்று நீங்கிய நிலை.

## மொழியின் சிறப்பு

ஆங்கிலம் - வணிகத்தின் மொழி
இலத்தீன் - சட்டத்தின் மொழி
கிரேக்கம் - இசையின் மொழி
ஜேர்மன் - தத்துவத்தின் மொழி
பிரஞ்சு - தூதின் மொழி
இத்தாலி - காதலின் மொழி
ரஷ்யா - அரசியலின் மொழி
தமிழ் - இரக்கத்தின் மொழி

**மு.சதீஸ்குமார்,**
**தரம் -9**
**மு/மாங்குளம்.ம.வி.**

## சிறப்பு அம்சம்

காகத்திடம் ஒற்றுமையுண்டு கூடியுண்ணும் பழக்கம் உண்டு
புறாவிடம் சமாதானம் உண்டு.
மயிலிடம் மயக்கும் காதலாட்டம் உண்டு.
குயிலிடம் இனிமையான குரல் உண்டு.
கிளியிடம் பேசும் திறமை உண்டு.
ஆந்தையிடம் இரவில் நடமாடும் விழி உண்டு.
நாயிடம் நன்றி உண்டு.
நரியிடம் தந்திரம் உண்டு.
மானிடம் மயக்கும் விழி உண்டு.
யானையிடம் தந்தம் உண்டு.
பசுவிடம் சுவையான பால் உண்டு.
தேனீக்களிடம் இனிமையான தேன் உண்டு.
எறும்பிடம் சேமிக்கும் பழக்கம் உண்டு.
கறையானிடம் கூடிவாழும் பழக்கம் உண்டு.
மனிதனிடம் மற்ற எல்லா உயிர்களின் வாழ்வை குலைக்கும் பழக்கம் வல்லமை உண்டு.

**மு. ரகுபாலன்.**

## வளிமண்டலம் இல்லாதிருந்தால் வானத்தில் நிறம் என்னவாக இருக்கும்

வானம், பகலில் நீல நிறத்துடனும், காலையிலும் மாலையிலும் ஆரஞ்சு கலந்த செவ்வானமாகவும் காட்சியளிப்பதற்குக் காரணம், வளி மண்டலத்திலுள்ள காற்று,நீர்,ஆவி, தூசிகள் போன்றவற்றால் இந்த ஒளிக்கதிர்கள் சிதறுவதேயாகும். பூமியைச்சுற்றி வளி மண்டலம் இல்லாதிருந்தால், ஒளிக்கதிர்கள் முறிவுபடுவதோ, சிதறுவதோ ஏற்படாது. இதனால் வானம் (ஆழ்ந்த) கறுப்பாகத் தோன்றும்.

எனினும்,கருநிற வானத்தில் ஆங்காங்கே சில வண்ண ஒளிப்புள்ளிகள் காணப்படும், சிவப்பு, நீலம்,மஞ்சள், கருஞ்சிவப்பு நிறங்களில் காணப்படும் இந்த ஒளிப்புள்ளிகளுக்குக் காரணம், இவை விண்மீன்களிலிருந்து சிதறாமல் வருவதேயாகும் வளி மண்டலம் இல்லாததால் இவை சிதறடிக்கப்படுவதில்லை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.16 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
01. அம்பு.
05. கரி.
09. ஆலயம்.
13. சபதம்.
22. பரணி
31. பா.

**மேலிருந்து கீழ்**
01. அரசன்.
02. பம்பரம்.
06. பரிதாபம்.
15. தஞ்சம்.
16. உதிரம்.
29. பரி

**குறுக்கெழுத்துப்போட்டி இல.16 இன் பரிசுக்குரியவர்**
**ம.சுகந்தன்,**
**ஆரோபணம் இளைஞர் இல்லம், D/8 ,கிளிநொச்சி,**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.16 இன் பாராட்டுக்குரியவர்கள்.

தி.சங்கீதா, மானிப்பாய்.
விஜிதரன்,தரம்-10C, யா/ஹாட்லிக் கல்லூரி.
ஜெ.பிறேம்குமார், இலுப்பைக்கடவை,
ம.உஷாளினி, வவுனியா.
வி.நாகேஸ்வரன், சுழிபுரம்.

இளையவர்களே! மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.18
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

என் வழிகாட்டியும், குருவும், நண்பனும் (தலைவா) நீயே. - அலெக்சாண்டர் போப்

# ஈழத்தமிழர்களின் நிமிர்வை திருமலையில் பிரகடனம் செய்த தமிழ்க்கூடல்

திருகோணமலை மாவட்டம் புராதனதமிழர்வாழ்விடங்களில் ஒன்று. பாரம்பரியமாக நீண்டகாலம் தமிழர்கள் வாழ்ந்து வந்த ஒரு பிரதேசம் அது. ஆனால்,இன்று அது திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமும், தமிழர்களுக்கெதிரான தொடர்ச்சியான வன்முறைகளின் மூலமும் பெருமளவுக்குச் சிதைக்கப்பட்டுக் காணப்படுகிறது.தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த திருமலையில் இப்போது அவர்கள்சிறுபான்மையினராக்கப்பட்டுள்ளனர்.இன்று இங்கு வாழும்தமிழர்கள் அஞ்சி,ஒடுங்கி, ஒதுங்கி வாழும் அவலம் காணப்படுகிறது.



ஈழவிடுதலைப் போராட்டம் பேரெழுச்சி கண்டு விட்ட ஒரு காலகட்டத்தின்போதும்கூட திருமலை தலை நிமிர்ந்து நிற்க முடியாதளவுக்கு அது திட்டமிட்டு பேரினவாதத்தால் முற்றுகையிடப்பட்டிருக்கிறது.இது பேரினவாதத்தினது நீண்டகாலத் திட்டமிட்ட செயற்பாடு மூலமே சாதிக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களுடைய பாரம்பரிய வாழ்விடமாக வரையறுக்கப்பட்டுள்ள இலங்கையின் வடக்குப் பகுதியையும், கிழக்குப் பகுதியையும் இணைக்கின்ற ஒரு பிரதேசமாகக்காணப்படுவது திருகோணமலையாகும். இதன் காரணமாக தமிழர் தாயகத்தில் திருகோணமலைக்கு ஒரு முக்கியஇடமுண்டு. தமிழர் தாயகத்தின் இரண்டு எல்லைகளையும் இணைக்கின்ற நடுநாயகமாக விளங்குகின்ற ஒரு பிரதேசமாகையால் இதனையே தமிழர்கள் தமது தாயகத்தின் தலைநகர் என்றும் கருதிவந்துள்ளனர்.

இதன்காரணமாகவே மறுபுறம் சிங்களத்தின் கண்ணிலும் திருகோணமலை முக்கிய இடம் பெற்றது. வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகப் பிரதேசத்தைத் துண்டாடுவதற்கு இருக்கின்ற வழிகளில் ஒன்று திருகோணமலையைச் சிதைப்பது.அதாவது ,திருகோணமலையில் தமிழர்களின் வாழ்வைச் சிதைப்பது. இந்தத்திட்டத்தின் அடிப்படையிலேயே திருகோணமலையில் திட்டமிட்டசிங்கள, முஸ்லிம் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், தமிழர்கள் மீது தொடர்ச்சியாக் வன்முறைகளும்கட்டவிழ்த்து விடப்பட்டன.

இத்தகைய செயற்பாடுகளின் மூலம் திரு கோணமலையில் தற்போது தமிழர்கள் மூன்றாவது இனமாக்கப்பட்டுள்ளதுடன், மூன்றாந்தரப் பிரஜைகளாகவும் அவர்கள் அங்கு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டுமானால்,அங்கு மீண்டும் தமிழர்களிடையே ஒரு பேரெழுச்சி தூண்டப்படவேண்டும்.இது முக்கியமாக தமிழர்களுடைய பண்பாட்டு ரீதியானதாகவும் அமையவேண்டியது அவசியமாகும்.இதனைத் தமிழ்க்கூடல் சாதித்துள்ளது எனலாம்.

தற்போதைய இந்தச் சமாதானத்துக்கான காலகட்டத்தில், ஈழ விடுதலைப் போராட்டத்தின் மானுடக்குரலை ஓங்கி ஒலிப்பதாக மானுடத்தின் தமிழ்க்கூடல் ஆரம்பிக்கப்பட்டது.1995ஆம் ஆண்டு 'ரிவிரச' ஆக்கிரமிப்புடன் சிறிலங்காப் படைகளின் கையில் சிக்கிக்கொண்ட யாழ்குடா நாட்டில், 2002ஆம் ஆண்டு முதலில் நிகழ்த்தப்பட்ட தமிழ்க்கூடல்,அங்கே சிறந்த அறுவடையைச் செய்திருந்தது. சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள்,எழுத்தாளர்களுடன் இணைந்த முக்கூடலாக அமைந்திருந்த இந்தத் தமிழ்க்கூடல்,இந்தக் குட்டித்தீவின் சமாதானத்தில் தமிழர்கள் கொண்டுள்ள அக்கறையையும் தெளிவாக உரைத்திருந்தது.

இந்த வெற்றியுடன்,மானுடத்தின் தமிழ்க்கூடல் 02 ,ஒரு இசை, நடன,நாடகவிழாவாக திருகோணமலையில்மையங் கொண்டது. வடக்குக் கிழக்கின் பல பகுதிகளிலுமிருந்தும் கூடிய கலைஞர்கள், தமது தலைநகராக தாம் கருதும் திருகோணமலை மண்ணில் ஒரு அதிர்வை ஏற்படுத்தினர். பலவழிகளில் இன்று நிமிர்ந்து நிற்கின்ற தமிழர்கள்,தமது சமூக,கலை,பண்பாட்டு விழுமியங்களை இணைத்து தலைநகரில் தமது நிமிர்வைப் பிரகடனம் செய்வதாக இந்தக் கூடல் அமைந்திருந்தது.இந்த நிமிர்விலும்,பிரகடனத்திலும் தமது மானுட நேயத்தையும் சேர்த்திசைப்பதாக, அவர்கள் தமது சகோதர மொழிக் கலைஞர்களையும் இணைத்துக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.




இசை,நடன,நாடக அரங்காக விரிந்திருந்த இந்தத் தமிழ்க்கூடலில்,கலை நிகழ்வுகளை தமிழர் தாயகத்தின் பல பாகங்களிலுமிருந்தும் வந்த பல மூத்த,இளைய கலைஞர்கள் நிகழ்த்தியிருந்தனர்.மூத்த சங்கீத வித்துவான்களான,யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த, சாஹித்ய இசைப்பேரரசு எம்.வி. நவரத்தினம், சங்கீத பூஷணம் பொன் குமாரசாமி,சங்கீதரத்னம் ஞானகுமாரி சிவனேசன்,வயலின் இசைக்கலைஞர் இசைஞான திலகம் உ.இராதாகிருஷணன் ஆகியோருடன், இளையதலைமுறையைச் சேர்ந்த இசைக்கலைமணி பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன்,இசைமாணி தவநாதன் ரொபேர்ட், ஹம்சத்வனி பாஸ்கரன் ஆகியோரும் இசையரங்கை அலங்கரித்தனர். ஒரு பாடசாலை மாணவியான இளம் பாடகி ஹம்சத்வனி பாஸ்கரன் மூன்றாம் நாள் விழாவில் வழங்கிய கச்சேரி, பார்வையாளர்களை வியப்பிலாழ்த்தியது.

இந்தப் பாடல் இசை நிகழ்வுகளில் அணிசெய் கலைஞர்களாக இணைந்துகொண்ட மூத்த மிருதங்க வித்துவான் சிதம்பரநாதன், வயலின் கலைஞர் சரஸ்வதி,மிருதங்கக் கலைஞர்களான துரைராசா,றமணன், வேர்ட்ஸ் வேர்த் மற்றும் வயலின் கலைஞரான இளைஞன் றதீசன், முகர்சிங் இசைத்த நந்தன் என நீண்டுசென்ற இவர்களின் பட்டியல் தமிழர்களின் கலைகள் போருள்ளும் உயிர்ப்புடன் இயங்கிவந்தமையை பறைசாற்றுவதாக அமைந்திருந்தது. மூத்த கலைஞர்களின் வரிசையில் ஒரு புதிய இளந்தலைமுறை எதிர்காலக் கலைவளர்ச்சிக்கு கட்டியங்கூறி உருவாகிவந்துள்ளதை இந்தக் கூடல் பிரகடனம் செய்வதாகவும் அமைந்திருந்தது.

மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக்கல்லூரி மாணவர்கள் வழங்கிய 'வாத்தியப் பிருந்தா' நிகழ்வு பல புதிய இளங்கலைஞர்களின் சங்கமமாக அமைந்து செவிக்கு இனிமை சேர்த்தது. உ.இராதாகிருஷ்ணனின் வயலின் சோலோ,ஒரு மூத்த வயலின் கலைஞருடன்,இளங்கலைஞர் றதீசனும் இணைந்து வழங்கிய ஒரு புதிய அனுபவமாக அமைந்திருந்தது.

ஈழத்தமிர்களின் பாரம்பரிய இசைமரபை பதிவுசெய்கின்ற ஒரு முயற்சியாக கிராமிய இசைத் தென்றல் நிகழ்வு அமைந்திருந்தது. எஸ்.டொமினிக் குழுவினர் வழங்கிய இந்நிகழ்வில் பல அண்ணாவிமார்கள் பாடலிசைத்து எமது பாரம்பரியக் கலை மரபை அரங்கேற்றினர்.தமிழ்க்கூடலில் பிரதான குறையாகத் தென்பட்ட, எமது பாரம்பரியக் கூத்துக்கள் இல்லாத குறையை ஓரளவுக்கேனும் இந்நிகழ்வுநிறைவு செய்தது.

நடனக் கலைநிகழ்ச்சி வரிசையில், யாழ் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளர் கிருஷாந்தி ரவீந்திராவின் மாணவியர் வழங்கிய நாட்டியாஞ்சலி நிகழ்வு,பரதக்கலையில் ஈழத்தமிர்கள் பெற்றுள்ள வளர்ச்சியைப் பறைசாற்றியது. பரதப்பாரம்பரியத்தின் அடிவிலகாது நிகழ்த்தப்பட்ட இந்த நிகழ்வு ஒருபுறம் சிறக்க, மட்டக்களப்பு இசைநடனக்கல்லூரி மாணவியர் வழங்கிய,ஷர்மிளா கொரேய்ராவின் 'அசோகனின் மாட்சிமை' நாட்டிய நிகழ்வு பரதப் பாரம்பரியத்தினூடாக போரின் கொடுமையை அழகாக எடுத்தியம்பிய ஒரு புதிய முயற்சியாக அமைந்திருந்தது.

"நாம் எமது கலைகளின் பாரம்பரியங்களோடு மட்டும் நின்றுவிடாமல், இன்றைய காலமும், புதிய சூழலும் வேண்டிநிற்கும் புதிய கண்டுபிடிப்புக்களையும் செய்யவேண்டும்" என்று இறுதி நாள் நிகழ்வில், தெரிவித்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியின் கருத்துக்கு வடிவம் கொடுக்கும் ஒரு ஆரம்ப முயற்சிபோல இந் நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த எண்ணத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை வன்னிக் கலைஞரான பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட,'சங்கநாதம்' பாடல் அபிநய நிகழ்வு வெளிக்காட்டியது. இந் நிகழ்வு தாயக விடுதலைப் பாடல்களுக்கான ஆடல் அபிநயக் கோலங்களாக ஒரு புதிய முயற்சியாக அமைந்திருந்தது.

இவை தவிர,திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவியர் வழங்கிய,பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையில் அமைந்த காவடி நடனம் ஒரு விறுவிறுப்பான ஆடல் நிகழ்வாக அமைந்திருந்தது.இதில் பங்கேற்ற மாணவியர் தமது ஆடல் திறமையால் பார்வையாளரை வியப்பிலாழ்த்தினர்.

நாடக நிகழ்வுகளாக் அமைந்தவற்றில் வன்னிக் கலைஞர்களின் படைப்புக்களான புரட்சிப்பறவைகள் வழங்கிய புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்',கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கிய, எஸ்.பாலாவின் 'இரத்த நதியில் பூத்த வெள்ளைரோஜா' என்பன மிக முக்கிய நிகழ்வுகளாக விளங்கின.குறிப்பாக 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் 1995க்கும் பின்னான ஏழாண்டுகாலப் போருக்கு முகம் கொடுத்த வன்னிமண் சந்தித்த துயரங்களை பட்டவர்த்தனமாக உணர்வுபூர்வமாக அரங்கேற்றிப் பார்வையாளர்களின் கண்களைக் குளமாக்கியது. இந்நாடகங்களுடன் 'சங்கநாதம்' நிகழ்வும்,ஏழாண்டுகாலக் கொடிய போருக்கும், எல்லாவகையான முற்றுகைகளுக்கும் முகம்கொடுத்தும், போருடனும், போராட்டத்துடனும் இணைந்தபடி முன்னெடுக்கப்பட்ட வன்னியின் கலை முயற்சிகளைப் பறைசாற்றுவனவாக அமைந்திருந்தன.

இவை தவிர,யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் வழங்கிய, தேவானந்தின் 'அக்கினிப் பெருமூச்சு',யாழ் மண்ணில் காணாமல் போன இளைஞர்களின் உறவுகள் விடுக்கும் துயரப் பெருமூச்சை வெகு உணர்ச்சிபூர்வமாகச் சித்திரித்தது.மட்டக்களப்பு மண்ணின் போருக்குள்ளான கொடிய சித்திரவதை வாழ்வை கல்வியியல் கல்லூரி மாணவர்கள் வழங்கிய ரவீந்திராவின் 'நெருப்புக்குள் வாழ்வு' சித்திரித்தது.

திருமலை மாவட்ட திருமறைக் கலாமன்ற மாணவர்கள் வழங்கிய ஜோன்சனின் 'கூடித் துயர்வெல்' சிறுவர் அரங்கப்பாரம்பரியத்துடன்,எமது கூத்துப்பாரம்பரியத்தையும் இணைத்து,சிறுவர் கதையொன்றூடாக தமிழர் வாழ்வை சித்திரித்தது.

சிங்கள அரங்கப் பாரம்பரியத்தின் இரண்டு எல்லைகளைத் தொட்டுக்காட்டுவனவாக இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இன்றும் தென்னிலங்கை அரங்கில் பிரகாசித்துவரும்,மறைந்த பேராசிரியர் சரத்சந்திர 1956ஆம் ஆண்டு தயாரித்தளித்த சிங்களப் பாரம்பரிய நாடகமான 'மனமே', தமிழ்க்கூடலின் முதல்நாள் நிகழ்விலே மேடையேற்றப்பட்டது. அதேபோல்,போரின் கொடுமையை விளக்கும் கிரேக்க நாடகமான 'ட்ரோஜனத்துப் பெண்கள்', சிங்களத்தில்,பிரபல நெறியாளர் தர்மசிறி பண்டாரநாயக்கவினால் வழங்கப்பட்டது.

சமாதானத்துக்கான போர் என்ற பெயரில் போரை முன்னெடுத்த கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முதன்முதலில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம்,தமிழ்க்கூடலிலும் போரை விரும்பாத சிங்கள மக்களின் மனங்களின் சாட்சியாக அரங்கேறியது.

இவை தவிர திருமலைக்குப் பெருமை சேர்த்த மூத்த கலைஞர்கள் அறுவருக்கு நான்காம் நாள் விழாவில் வழங்கப்பட்ட கௌரவிப்பு,கூடலின் மற்றோர் சிறப்பம்சமாக அமைந்திருந்தது.மூத்த கலைஞர்களான பத்ம நாதன்,சித்தி அமரசிங்கம், சாரதா ஸ்ரீஸ்கந்த ராஜா, இராஜேஸ்வரி தட்சணா மூர்த்தி, சங்கரலிங்கம்,இராசையா தங்கராசா ஆகிய ஆறு திருமலையின் மூத்த கலைஞர்கள் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களால் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக இந்த நிகழ்வுக்காக தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்திருந்து பிரபல தமிழக பின்னணிப் பாடகியும், தமிழிசைப் பாடகியுமான ரி.கே.கலா அவர்கள் இறுதிநாள் நிகழ்வில் நிகழ்த்திய தமிழிசைப் பாடல் நிகழ்வும் பார்வையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது.முற்றிலும் தமிழிசைப் பாடல்களாலேயே நிறைந்திருந்த இந்த அரங்கு, கர்னாடக இசைமரபில் தமிழிசை வளர்ச்சிக்கான ஒரு வழிகாட்டி போலவும் அமைந்திருந்தது.


இவைதவிரவும் வவுனியா விடியல் இசைக்குழுவினரின் தாயக இராகங்கள் நிகழ்வு கடைசிநாள் இறுதிநிகழ்வாக, விடிகாலைவரையில் நிகழ்த்தப்பட்டது.

ஆக மொத்தத்தில் .இந்த நிகழ்வின் முன்னேற்பாடாக, கலைபண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்துனதுரை அவர்கள் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தபடி,இந்தத் தமிழ்க்கூடல் நிகழ்வு,ஈழத் தமிழரின் வலியுணர்த்துவதாகவும்,,அவர்களின் வலிமையுணர்த்துவதாகவும் இருந்ததுடன்,எல்லா இனங்களிடையேயான இணைப்பையும் அது பேணிப் போஷித்தது.

முதலாம் நாள் நிகழ்வில் தலைமை யுரையாற்றிய எழுத்தாளர் ஜபார் கூறியது போல,இந்தத் தமிழ்க்கூடல் நிகழ்வுக்கூடாக விடுதலைப் புலிகள் சொல்லமுற்படும் சேதியை அனைவரும் புரிந்துகொள்வது அவசியமானது.

**ருஷாங்கன்**

**கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் வார இதழுக்கு அமெரிக்காவின் சிறிலங்காவுக்கான தூதுவர் திரு. ஆஷ்லிவில்ஸ் அவர்கள் 24-11-02 அன்று அளித்த செவ்வி தொடர்பாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



# அமெரிக்கத் தூதரின் செவ்வியும் அது தொடர்பாக சில விளக்கங்களும்

அந்தச் செவ்வியின் இறுதியில், இலங்கை அரசின் இறைமையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், தேசத்தின் அரசியலமைப்பையும் அதற்கமையச்சட்ட ஒழுங்கை அமுலாக்குவதையும் தீவு முழுவதற்குமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அந்த வரிகளை அப்படியே அடுத்த பந்தியில் பார்க்கலாம்

**The Tigers purport to represent the interests of the tamil people.Taking them at their word, we also call on the LTTE to respect human rights and democratic norms, and accept srilanka government's sovereignty fully, including the islandwide application of the nation's contitution and its law enforcement sys tems" he added.**

**இலங்கையின்** அரசியல் அமைப்பு யாக்க வரலாற்றையோ, சட்ட ஒழுங்கு அமுலாக்க வரலாற்றையோ, நன்றாகத் தெரிந்த ஒருவர், இத்தகைய கருத்தைக் கூறியிருப்பாரா என்ற ஐயப்பாடு எனக்கு எழுந்தது.

அவருக்காக அந்த வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறேன்.

திரு.டி.எஸ் சேனநாயக்க என்ற சிங்களவர் தலைமையிலான இலங்கையரும் பிரித்தானிய அரசும் 1947 நவம்பர் 19 இல் கையெழுத்திட்ட ஒப்பந்தமே இலங்கைத் தீவிலிருந்து பிரித்தானியர் வெளியேற வழிவகுத்தது. 1947 டிசம்பர் 10 ஆம் நாள் இலங்கை சுதந்திர சட்டத்திற்கு பிரித்தானிய அரசின் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

இலங்கையின் ஆட்சி உரிமையும் இறைமையும் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் ஊடாகப்பிரித்தானிய மன்னரிடமே தொடர்ந்து இருக்கும் வகையில் இலங்கை அரசிடம் ஆட்சிப் பொறுப்பை 1948 பெப்ரவரி 4 ஆம் நாள் பிரித்தானிய அரசு வழங்கியது.

அந்த அரசியலமைப்பின் முற் பகுதியில் உள்ள முதல் இரண்டு விதிகளில் இந்த ஏற்பாடு உள்ளது. இறைமையும் தன்னாட்சியும் முழுமையாகப் பெற்று விடுதலை பெற்ற நாடாக அப்பொழுது இலங்கை மாறவில்லை. இந்த அடிப்படையை 1964 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசவையில், இலஞ்ச ஆணையாளர்-ரணசிங்கா வழக்கில் பியேர்சுப் பிரபு கூறிய தீர்ப்பில் உள்ள வாசகத்தில், இலங்கை அரசியலமைப்பின் 29 ஆம் பகுதி உபவிதிகள் சிலவற்றை மாற்றும் அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு இல்லை என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

இதனால் சிங்கள அரசியல்வாதிகள் கொதிப்படைந்தனர். அரசிலமைப்பை முழுமையாகத் திருத்த விரும்பினர்.

அரசியலமைப்பு யாக்க அவையாகப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் கூட்டம் செயற்பட்டு இலங்கைக்குப் புதிய அரசியலமைப்பை யாக்கும் ஆற்றலுரிமையை 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்காளர்களான சிங்கள மக்களிடம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டணியினர் கேட்டனர். அத்தேர்தலில் அவர்களே சிங்களப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் வெற்றி பெற்றனர். தமிழர் தாயகத்தில் அக்கொள்கைக்கு எந்த ஆதரவும் கிடைக்கவில்லை. தமிழரசுக்கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுமே வெற்றி பெற்றன. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார்.

சிங்கள மக்களிடமிருந்து ஆற்றலுரிமையைப் பெற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அரசியலமைப்பு யாக்க அவையைப் பாராளுமன்றத்துக்கு வெளியேயுள்ள நவரங்கலா மண்டபத்தில் 1970 ஜூன் 19 ஆம் நாள் கூட்டினார். பிரித்தானிய அரசிடமிருந்த இலங்கையின் இறைமையைச் சட்டத் தொடர் பின்றி இலங்கை மக்களுக்குப் பெற்றுத்தர இந்த அவையைப் பாராளும்ன்ற வளாகத்துக்கு வெளியே கூட்டினார்.

சிங்கள-தமிழ்-முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த அவைக்குச் சென்றனர்.1970 ஜூன் 19 தொடக்கம் 1970 ஜுன் 26 ஆம் நாள் வரை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் பங்குபெற்றனர். தமிழரின் உரிமைகள் தொடர்பான தங்களது குரலுக்குச் சிங்களத் தலைவர்கள் செவிசாய்க்கவில்லை என்ற காரணத்தினால் அதற்குப் பின்பு அந்த அவைக்கு அவர்கள் செல்லவில்லை. அந்த அவையைப் புறக்கணிப்பதாகக் கூறிவிட்டு வெளியேறினர்.

அதற்குப் பின்னர், சிங்கள மக்களின் பிரதிநிதிகள் மட்டுமே அங்கு கூடித் தமக்கென ஓர் அரசியலமைப்பினைஉருவாக்கி 1972 மே 22ம் நாள் அந்த அரசியலமைப்பினை நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்.

ஒரு புதுமையான நிகழ்ச்சி நடந்தது.

பிரித்தானிய அரசிடமிருந்த இறைமையைச் சட்டத் தொடர்பு இல்லாமல் 1972 மே 22 ஆம் நாள் சிங்களவர் தமதாக்கிக் கொண்டார்கள்.

தமிழரின் பிரதிநிதிகள் அரசியலமைப்பு யாக்க அவையைப் புறக்கணித்ததால் தமிழரின் இறைமை சிங்களவரிடம் சென்றடையவில்லை. இலங்கைத் தீவில் வாழும் மக்களின் இறைமை பிரித்தானியரிடம் இருந்து இலங்கைமக்களுக்கு மீண்டதால், தமிழரின் இறைமை தமிழரிடமே வந்து சேர்ந்தது.

தமிழரின் இறைமையை ஆட்சிப்படுத்தத் தமிழர் தாயகத்தில் தமிழீழ அரசு அமைப்பதென 1976 மே 14 ஆம் நாள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வட்டுக்கோட்டையில் கூடித் தீர்மானம் இயற்றினர்.

1976 மே 14 ஆம் நாள் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக் கோட்டையில் இயற்றிய தீர்மானத்தை ஒட்டி, 1976 மே 31 ஆம் நாள் கொழும்பில் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் வழக்கொன்று வந்தது. அரசியலமைப்புச் செல்லுபடியற்றது என்ற வாதத்தைத் திரு.மு. திருச்செல்வம் எடுத்து வாதாடினார். ஈழத்தமிழர் இறைமை சிங்களவரிடம் போய்ச் சேரவில்லை என்ற வாதத்தை திரு.மு. திருச்செல்வம் உலக அரசியல் நிகழ்வுகள் பலவற்றை எடுத்துக் கூறி ஆதாரங்களுடன் நீதிபதிகள் முன்வைத்தார். அந்த வழக்குரை வாதங்களின் கருத்துக்களைக் கொண்ட அவர் எழுதிய 'ஈழத் தமிழர் இறைமை' என்ற நூலின் படி ஒன்றையும் இத்துடன் இணைத்துள்ளேன். குற்றம் சாட்டப்பெற்றோர் விடுதலையாயினர் என்பதையும் இங்கு கூறவேண்டும்.

1976 இன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் ஆணையை, தமிழர் இறைமையைப் பயன்படுத்தத் தமிழர் தாயகத்தில் தமிழீழ அரசும் நாடும் அமைக்கும் ஆணையை, 1977 இன் தேர்தலில் தமிழர் தாயகத்தில் வாக்களித்த தமிழர், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கினர்.

1972 இன் அரசியலமைப்போ அதைத் தொடர்ந்த 1978 இன் திருத்தமோ தமிழர்களைக் கட்டுப்படுத்தாது என்பதை அறவழிப் போராட்டம் மூலமும் வன்முறைப் போராட்டம் மூலமும் தமிழர் 1971 இல் இருந்து தெளிவாகக் கூறிவருகின்றனர். அந்த அரசியலமைப்பை தமிழர் மீது திணிக்க முயலும் சிங்கள மேலாட்சியை எதிர்த்துத் தமிழர் போராடி வருகின்றனர்.

இவை அடிப்படை விசயங்கள். இந்த அடிப்படை விசயங்களைச் சிங்களவரும் தமிழரும் பேசித் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நோர்வே நாட்டின் உதவியுடன் சிங்கள மக்களின் பிரதிநிதியாகக் கொழும்பு அரசும், தமிழ் மக்களின் பிரதிநிதியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளும் 2002 மாசி முதலாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.இதில் முஸ்லிம் மக்களின் நன்மைகளையும் பேண இரு சாராரும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

இலங்கைத்தீவில் வாழும் இனங்கள், தங்கள் அரசியல் எதிர்காலத்தைப் பேசித் தீர்க்கலாம் என்ற சூழ்நிலையில், மற்ற நாடுகள் அதற்கு ஒத்தாசையாக இருக்க வேண்டிய கடப்பாடு உண்டு. பேச்சுவார்த்தைக்கு உட்பட்ட விசயங்களை, அடிப்படை விசயங்களை, பேச்சுவார்த்தை இல்லாமலேயே தமிழர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் கூறியிருப்பது சிங்களவர் மேலாட்சியைத் தமிழர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கூறுவதாகும். அவரின் கருத்து ஒரு தலைப்பட்சமானது, சிங்களவர் சார்பானது, அமைதிக்கு எதிரானது, வன்முறையையும், போரையும் தூண்டுவது ஆகும்.

1971 க்கு பின்பு தமிழரின் பிரதிநிதிகளான தமிழரின் விடுதலைக் கூட்டணியினர் ஒத்துக் கொள்ள மறுத்ததை, 2001 க்குப் பின்பு தமிழரின் ஒரே பிரதிநிதிகளாகத் தமிழர் அனுப்பி உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று அவர் கேட்பதில் நியாயமில்லை.


தமிழர் இறைமையைச் சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்றம் ஆட்சிப்படுத்தவோ, அப்பாராளுமன்றம் தமிழர் ஒப்புதலின்றியும் சட்டத் தொடர்பின்றியும் ஏற்று நடைமுறைப் படுத்தும் அரசியலமைப்பைத் தமிழர் தாயகத்தில் நிலைப்படுத்திச் சிங்கள மேலாட்சியைத் தமிழர் மீது திணிப்பதையோ, அதன் மூலம் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதையோ, தமிழர் ஒருபொழுதும் ஏற்கார்.

இதனை அவருக்கு தெரியப்படுத்துவதும், அவர் இதனைப் புரிந்து கொள்ள வேண்டியதும் இன்றைய சூழலில் மிக அவசியமான தொன்றாகும்.

மறவன்புலவு —— க.சச்சிதானந்தன்

# ஊக்கமாத்திரை

## மனிதநேயம்



**உன்னதமான** மனிதகுலத்தை ஆக்குவோம். உலகெங்கும் மனிதநேயத்தை வளர்ப்போம் இதுவே உலகை முன்னேற்றுவதற்கு ஒரேவழி. எவ்வளவுதான் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ந்த போதும் மனிதநேயம் இல்லையெனில் இவையெல்லாம் மனிதகுலத்தின் அழிவிற்கே பயன்படுத்தப்படும். எனவே நாம் முதலில் கட்டியெழுப்ப வேண்டியது ஒரு பண்பாடான மனித உறவுகளையும், ஒழுங்கான பழக்க வழக்கங்களையுமே. இதுவே மனிதகுலம் சந்தோஷமாக ஒற்றுமையாக வாழ செயற்பட வேண்டியதாகும். எனவே ஒவ்வொரு மனிதனும் மனிதனின் அடிப்படை உரிமைகளை மதித்து நடக்கத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். மனித உரிமைகளும் ஒழுங்குகளும் சட்டப் புத்தகங்களில் மட்டுமிருந்தால் போதாது. ஒவ்வொரு மனிதனின் மனங்களிலும் (வளர வேண்டும்) பதியப்பட வேண்டும். இதை மதித்து நடக்கப் பழக்கப்படுத்த வேண்டும்.

இதுவரை உலகம் எப்படியெப்படியோ வளர்க்கப்பட்டு அதே பழக்கப்பட்டு அழிவுப்பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறது. இதை உடனடியாக மாற்றியமைக்காவிட்டால் மனிதகுலம் தன்னைத் தானே அழித்துக் கொண்டு அழிந்து போவது நிச்சயம். ஒரு மனிதன் மற்ற மனிதனுடைய உரிமைகளை மதிக்காத தன்மை வளர்த்து ஒரு நாடு இன்னொரு நாட்டின் உரிமைகளை மதிக்காத அளவிற்கு மனித மனங்கள் வக்கிரம் பெற்றுள்ளன. இதுவே நாடுகளிடையேயான யுத்தத்திற்கும் அழிவுகளுக்கும் காரணமாகின்றன. இதனால் பாதிக்கப்படுவது முழு உலகமுமே. உலகத்திற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டிய அதி முன்னேற்றமடைந்த நாடு எனத் தன்னை உலகத்திற்கு காட்டிக் கொள்ளும் அமெரிக்காவே சட்டம் ஒழுங்கு, விதி, எல்லாவற்றையும் மீறி ஒரு அநியாயமான அகோரமான போரை ஈராக்குக்கெதிராக தொடங்கி அப்பாவி உயிர்களையும் அவர்களின் உடமைகளையும் அழித்தொழித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு மிக நாகரீகமான தொன்மைவாய்ந்த அரசு எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் பிரித்தானியாவும் துணை போவதென்பது மனித நாகரீகம் எவ்வளவு பின்னோக்கி தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணமாகும்.

இதனை ஒரு அச்சுறுத்தலாக கண்டுகொண்டு உலகம் உடனடியாக இவ்வறியாமையினின்றும் விழித்துக் கொண்டு மிக விரைவாக மனிதநேயத்தைக் கட்டியெழுப்ப முழு ஒத்துழைப்பையும் முழு நேரத்தையும் செலவிடுவது இன்றியமையாத கடமையாகும். இந்தத் தருணத்தை விட்டால் இந்நோய் எல்லா நாடுகளுக்கும் தொற்றிக் கொள்வது நிச்சயம். எனவே உடனடியாகச் செயற்பட்டு எமதும் எமது நாட்டின் பாதுகாப்பிற்குமாக நாம் ஒன்று சேர்ந்து மனிதமனங்களில் மனித நேயத்தையும் மனிதாபிமானத்தையும் வளர்ப்போமாக.

இராஜசாந்தி

மனிதர் தற் செயல் என்று அழைப்பது, இறைவனின் அருட் செயலே. - கெமேலியல் பெய்லி

## மக்கள் மத்தியில்



# தூசி

## வெறும் தூசாகக் கருதக்கூடிய விடயமல்ல!

**சமாதானம்** வன்னிக்குத்தந்த ஆகப்பெரிய பரிசு தூசிதான். அது இப்போது மரங்களை நிறம்மாற்றுகிறது. மனிதர்களை அடையாளம் தெரியாமலாக்குகிறது. பயணத்திலிருக்கும் சுவாரஷ்யத்தை உறுஞ்சிவிடுகிறது. வீதியிலிறங்கவே விரும்பமில்லாத மனதைப் பெருக்குகிறது.

வன்னியின் வீதிகள் திருத்தப்படாமல் கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. திருத்தப்படாத பெரிய வீதிகளின் சிதைவுகளிலிருந்துமுதலில் கல்லுப் பெயர்ந்தது. கொஞ்சக்காலம் பெயர்ந்திருந்த கல்லுத்தந்த கஸ்ரங்கள் கொஞ்சமல்ல. பிறகு தூசி கிளம்பத்தொடங்கியது. இப்போது தூசிப்படலமே தொடர்கிறது பெரிய ஆய்க்கினையாக.

குண்டும் குழியுமான வீதிகளை 'சமாதானத்தின் கிறவல்' நிரப்பியது. நிரப்பிய கிறவலிலிருந்து இப்போது தூசி பெரும்படையாகக் கிளம்பியலைகிறது. இதுவும் பெருவீதிகளில்தான். வன்னியின் ஏனைய சிறுவீதிகளும் உள்ளூர்த் தெருக்களும் திருத்தப்படாமல் அறுத்தோடிகளாகவும் புழுதிக்குவியல்களாகவும் வாய்க்கால்களாகவுமே இருக்கின்றன என்பது தனிக்கதை.

சமாதானம் வன்னியில் கிறவலை அள்ளிக் கொட்டிக் கொண்டு கண்டி வீதிக்குத்தார் பூசியது. சமாதானத்தின் பெயரால் முதலில் நிகழ்ந்த காரியமும் அதுதான். அதைத் திறந்ததும் தார்பூசியதும் தான்.

பலரும் சொல்வது போல திரும்பத்திரும்ப கண்டி வீதிதான் திருத்தப்படுகிறது அதற்குத்தான் பூச்சும் மினுக்கும். ஒருவேளை அது இரண்டு பழைய இராசதானிகளுக் கிடையிலான வீதியாக இருப்பதால்தான் இந்த முக்கியத்துவமா என்றொரு எண்ணம் ஏற்படுகிறது சிலவேளைகளில்.

இல்லை இப்பொழுது அது இரண்டு வணிக நகர்களுக் கிடையிலான வீதியாக இருப்பதால்தான் இந்த அக்கறை என்றுபடுகிறது. இது தான் உண்மையும். கண்டி வீதி என்று இதைச் சொன்னாலும் உண்மையான அர்த்தத்தில் இது கொழும்பு-யாழ்ப்பாணம் வீதிதான்.

ஒவ்வொருநாளும் இந்த வீதியால் போய்வரும் வாகனங்களை அவதானித்தால் பயணிகள் வாகனத்தைவிட பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் தான் கூடுதல் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். போய்வரும் பயணிகள் வாகனங்களிலும் பெரும்பாலானவை வியாபாரத்தைப்பற்றிப் பேசவும் 'பிஸினஸ்சை முடிக்கவும்தான்' ஓடிக் கொண்டிருக்கின்றன. கண்டி வீதி ஒரு வணிக வீதியென்பதை வீதி நெடுகிலும் அங்கங்கே நிறுத்தப் பட்டுள்ள 'மெகா விளம்பரப் பலகைகளிலிருந்து' புரியலாம்.

பலருடைய அவதானிப்பின்படி பெரும்பாலும் சமாதானத்தின் இது வரையான பெறுபேறுகளும் வியாபார நலன்களைப் பாதுகாப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும்தான் இருக்கின்றன என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இதிலும் அதிக நன்மையடைபவை பன்னாட்டு நிறுவனங்களும் சிங்களத் தரப்பின் பெரிய வணிகர்களுந்தான். இதனால் தான் கண்டிவீதியைப்பற்றி இவ்வளவு கரிசனைப்படுகிறார்கள் அவர்கள்.

வன்னியின் ஏனைய வீதிகளுக்கு இந்தளவுக்கு அவசியமென்னும் ஏற்பட்டுவிடவில்லை. கிடைத்துள்ள தகவல்களின்படி மாங்குளம் முல்லைத் தீவுவீதிதான்அடுத்தாகத் திருத்தப்படுவதற்கான கூடுதல் சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது. எந்த வீதி திருத்தப்பட்டாலும் அது வரவேற்கப்படவேண்டியதுதான். ஆனால் உண்மையான அர்த்தத்தில் அந்த வீதியை விடவும் கூடுதலான தேவையுடையது முல்லைத்தீவு-பரந்தன் வீதிதான். இப்போது கூட முல்லைத்தீவு- மாங்குளம் வீதியூடான போக்குவரத்துப் பயணிகள் தொகையும் மக்கள் செறிவும் அங்கே குறைவுதான். இதனால் தான் புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவிக்குச் செல்லும் பஸ் விசுவமடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி, முறிகண்டி, மாங்குளம் என்று பெரிதாக உலாத்திகொண்டு போகிறது.

புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவிக்குப் போகுமொருவர் ஒட்டுசுட்டானுக்கூடாகப் போகும் நேரத்தையும், ஆகும் செலவையும் விட மேலொரு மடங்கு செலவழித்துக் களைத்துப் போகிறார். ஆனால் திருத்தப் படவுள்ளது பயணிகள் குறைந்த வீதி. மக்கள் குறைந்த சாலை. நோக்கத்தைப் பார்த்தீர்களா?

முல்லைத்தீவு மாங்குளம் வீதி திருத்தப்படுவதன் பிரதான நோக்கம் அது முல்லைத்தீவில் பிடிபடும் மீன், இறால், கணவாயை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்குத்தான். இதிலும் அதிகலாபம் பெற முயல்வது கொழும்புதான்.

எனவே இவ்வாறான அவசியங்களில்லாத வீதிகளும் தெருக்களும் தொடர்ந்து கிறவல் மேடுகளாகத்தானிருக்கப் போகின்றன போலுள்ளது. சிலர் சொல்கிறார்கள் 'முன்பிருந்ததைவிட இப்போது இது பரவாயில்லை. குண்டும் குழியுமாக இல்லாமலிருக்கிறது' என்று.

ஆனால் அவர்களாலும் கிளம்பி வரும் தூசியை திட்டாமலிருக்க முடியவில்லை.

கிறவலை அள்ளிக் கொட்டக் கொட்ட அளவு கணக்கில்லாமல் தூசியே கிளம்புகிறது. முன்பிருந்ததைவிட சமாதானம் கொண்டுவந்த அதிகளவு வாகனங்களின் பெருக்கம் இன்னும் இந்த தூசியை வீதிநெடுகத் தொடர்ந்து கிளப்பிக் கொண்டேயிருக்கிறது. அதிலும் இந்த வாகனங்களில் பல புதியவை. அவற்றின் வேகமோ மிக அதிகம். அவற்றை ஓட்டுகிறவர்கள் என்ன

வெளிவாசல் பாலன்

நினைக்கிறார்களோ தெரியாது. வீதியில் வரும் பாதசாரிகள், சைக்கிளோட்டிகள் ஏன் மோட்டபைக்கிள் வருபவர்கள் என்ன பாடுபடுகிறார்கள் என்பதைக் கொஞ்சமேனும் உணருகிறவர்களாகத் தெரியவில்லை.

ஒரு வாகனம் போனால் அதன் பின்னால் கிளம்பிப் பெரும்படையெனத்திரளும் தூசி வீதியில் போவோரின் மேலேயே படிகிறது. அவர்களையே அந்தப் படை தாக்குகிறது.

போரின் போது குண்டுகளோடும் வெடியோசைகளோடும் படை எங்களைத் தாக்கியது. சமாதானத்தின்போது தூசிப் படைதாக்குகிறது என்றார் நண்பரொருவர் கவலையோடு.

இந்த வீதிகளில் ஆகக் கூடிய மூன்று கிலோமீற்றர் பயணம் செய்தாலே போதும். ஆளே அடையாளம் தெரியாதளவுக்குச் சில வேளைகளில் தூசி படிந்து எல்லாவற்றையும் மாற்றிவிடுகிறது. அதிலும் இந்த வெக்கை காலத்தில் தூசியும் படியும்போது ஏற்படும் மனநிலையைச் சொல்லிவிட முடியாது. வன்னிப் பயணங்கள் எப்போதும் தொலை தூரத்தைக் கொண்டவை என்பதால் இந்த அவலம் இன்னும் பெரிதாகவேயிருக்கிறது.

எதிரே வரும் வாகனத்தின் பின்னால் திரளும் தூசி கண்ணையும் நாசியையும் நிறைத்துவிடுகிறது. வன்னியில் இந்த நிலைமையில் தொடர்ந்தொருவர் இருந்தால் வெகு வேகமாகவே அவருடைய சுவாசப் பையில் தூசி நிறைந்துவிடும். கண்கள் பழுதடைந்துவிடும் என்கிறஅச்சம் பரவலாக எல்லோருக்குமுண்டு.

அண்மைக்கால வன்னிப் பகுதி மருத்துவத் தகவல்களின்படி பலருக்கு 'ஆஸ்த்துமா' வியாதி ஏற்பட்டதற்கு காரணம் இந்த தூசி என்றுதான் தெரிகிறது. தூசியால் பலருடைய கண்களில் ஒருவித பங்கசு போன்ற பீடை தோன்றியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இது மட்டு மல்ல ஒரு இடத்துக்கு நல்ல உடையுடன் போகமுடியாது. நல்ல மனநிலையுடன் பயணிக்க வியலாது.

குழந்தைகளை தூசியிலிருந்து காப்பாற்றிப் பக்குவமாகக் கொண்டு செல்வதற்குத் தாய்மார் படும்பாடுகள் கொஞ்சமல்ல. தூசியால் குழந்தைகள் படும் அவதி எவருடைய இதயத்தையும் கரைத்துவிடக்கூடியது.

ஆனால், கல்லாலான இதயங்களைக் காவிக்கொண்டுதான் பலரும் திரிகின்றனர் போலத் தெரிகிறது. ஓடும் பல புதிய வாகனங்களின் ஜன்னல்கள் இறுகச் சாத்தப் பட்டிருக்கின்றன. உள்ளே தூசி நுழையாது. வெளியே தூசியை வாரியிறைத்தபடி விரைந்தோடுகின்றன வண்டிகள். பெரும் படையாகக் கிளம்பிவரும் தூசியால் துன்பப்படுவோர் சொல்கிறார்கள்.

"அவை ஏசியுடன் போகின்றன-நாங்கள் தூசியுடன் சாகின்றோம்" என்று.

வன்னியில் இப்பொழுது பெருகியிருக்கும் தொண்டர் நிறுவனங்களின் வாகனப் பெருக்கத்தையும் இங்கே சேர்த்துப் பார்க்கவேண்டும். மனிதாபிமானப் பணிகளிலும் புனர்நிர்மாணப் பங்களிப்புகளிலும் ஈடுபடுவதாகக் கூறும் இந்த நிறுவனங்கள் அவற்றின் பணியைவிடப் புழுதியையும் தூசியையும்தான் வாரியிறைக்கின்றன என்று பலரும் சொல்கிறார்கள்.

சுற்றுச் சூழல் பாதுகாப்புப்பற்றிப் பேசுவோர் கூட இந்தத் தூசித்துயர்பற்றியோ இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியோ பேசாதிருப்பது பெரும் கவலையே தருகிறது. ஏன் இதுகுறித்து ஒருவரும் யோசிக்கிறார்களில்லை என்று எல்லோரும் கேட்கிறார்கள்.

விரைந்தோடும் வாகனங்களின் இலக்கத் தகடுகளையோ நிறத்தையோ அடையாளத்தையோ காண முடியாதவாறு தூசியைக் கிளப்பிவிட்டு மறைந்தோடிவிடுகின்றன அவை. வீதியில் போவோரை மனிதர்களாக கருதுகிறார்களில் லையே இவற்றிலுள்ளவர்கள் என்றுதான் பலசந்தர்ப்பங்களிலும் கேட்கத் தோன்றுகிறது. ஏசியோ டும் பிற வசதிகளோடும் அதிலுள்ளவர்கள் சுலபவமாக சொகுசாக, வசதியாகப் போய் விடுகிறார்கள். சாதாரண மனிதர்களோ தூசியோடு கிடந்து மாய வேண்டியதுதான். அதிலும் இன்னும் குறைந்த கட்டணத்தில், சீரான போக்குவரத்து ஏற்பாடுகளுக்குரிய நிலைமைகள் தோன்றி விடாதநிலையில் சைக்கிள் பயணங்களே அதிகமாக இருக்கையில் தூசியின் பிரச்சினை எப்படியிருக்குமென்று கொஞ்சம் யோசித்துப் பாருங் கள். நீண்ட தூரம் பெரும் பாரப்பொதிகளுடன் பயணிக்கும் சைக்கிள் பயணிகள் நாளும்படும் சிரமத்தையும் சேர்த்துப் பாருங்கள்.

இவைதவிர, கிறவலைக் கொட்டி நிரப்பும் வாகனங்களின் தொகையும் அவற்றின் வேகமும் அந்த வாகனங்களின் பருமனும் இன்னொரு பிரச்சினையாக இருக்கிறது. அத்துடன் வீதிகளில் கிறவல் கொட்டுவதென்பது வீதிகளுக்கான ஒரு நிரந்தரத் தீர்வுமல்ல. கிறவலைக் கொட்டக் கொட்ட தூசிதான் பெருகுகிறதேயொழிய வீதிகள் செம்மைப் படுவதாக இல்லை. பதிலாக் காற்றில் நிறமேறுகிறது, மரங்களின் மேலும் மனிதர்களின் மேலும் மண்படிகிறது.

இதேவேளை கிறவலுக்கான மண்ணை வன்னியின் பல இடங்களிலும் அகழ்ந்தெடுக்கிறார்கள். இப்படி மண் அகழப் படும்போது நில அமைப்புக் கெடுவதுடன் காடுகளில் சிதைவும் நிகழ்கிறது.

இப்படியே தூசி துயரம் பெருகி வன்னியை ஆட்டிப் படைக்கிறது.


இதற்கு மாற்றுவழி இப்போதைக்கும் கிடையாதா என்று பலரும் கேட்கிறார்கள். வீதிகளுக்குத் தார் பூசுவதற்குரிய தொகைப்பணம் இல்லாததால் கிறவலைத்தான் போடவேண்டியிருக்கிறது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவிக்கின்றனர்.

அப்படியென்றால் தொடர்ந்தும் இதுதான் கதையா? சமாதானம் வன்னிக்குக் கொண்டுவந்தது என்ன என்ற கேள்வியும் பெரிதாகி வருகிறது.

நிலாந்தன் முன்னர் ஒருதடவை எழுதியிருந்தது போல இலங்கையின் அரசியல் தீர்மானங்களை எடுக்கும் நகல்கள் இரண்டில் ஒன்று வன்னியிலுண்டென்றார். ஆனால் அதுவும் கண்டி வீதியை மையங் கொண்டேயிருக்கிறது. வன்னியின் மற்றெந்தச் சிறு பட்டினங்களும் எந்த முக்கியத்துவமுமில்லாமலாகிவிட்டன.

அப்படியென்றால் அவை கிறவல் பட்டனங்களாகத் தான் இருக்கவேண்டும் போலுள்ளது.

தற் செருக்கு, தன்னழிவிற்கு வழிகாட்டும். – ஈஸாப்.



# பிரமுகர்களிற்கு மட்டும் பிரமாண்டமான இழப்பீடு

16-09-2000ம்அன்று கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கி ஒரு ஹெலிகொப்ரர் பயணம் செய்தது. அதில் அப்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் வான் கலத்தின் விமானிகள், வான்படைவீரர்கள் உள்ளிட்ட 15 பேரும் பயணம் செய்தனர். இடையில் வான்கலம் விழுந்து நொருங்கிவிட இவர்கள் கொல்லப்பட்டனர்.

அஷ்ரப் மரணம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு விபத்தில் இறந்தவர்களது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்து பரிந்துரை செய்யும் ஆணைவழங்கப்பட்டது. அஷ்ரப்புடன் கொல்லப்பட்டவர்களில் சிறிலங்கா வான்படையைச் சேர்ந்த

வான் கலத்தின் கப்டனான பிளைற் லெப்ரினன் s.v. பெரேரா
பிளையிங் ஒப்பிசர் R.P.S அந்திராதி
கோப்ரல் G.R வீரக்கோன்
லீடிங் எயா கிராப்ற்மான் W.A.J.S ஆரியசேன
கண்ணர் (Gunner)W. M. ரூபசிங்க

மெய்ப் பாதுகாவலர் அஜித், வித்தான கமகே
சுருக்கெழுத்தாளர் பெரியதம்பி
பாதுகாப்பு சேவையின் சந்தன சாதிக்
அஷ்ரப்பின் தீவிர ஆதரவாளர்களான
கட்டற்ற இதழியலாளர் நிஹாமதுல்லா
திரு.ராபுதீன்
திரு. கதிர்காமத்தம்பி
திரு.மௌலானா (காலி)
திரு. அஸீஸ்

திரு. கதிர்காமத்தம்பியின் நண்பர் என்று மட்டும் குறிப்பிடப்பட்டவர் .(இன்று வரை இவர் யார் என்பது மர்மமாகவே இருக்கின்றது) ஆகியோர் அடங்குகின்றனர்.

ஆணைக்குழுவின் தலைவராக நீதிபதி L .H .G .வீரசேகரா இருந்தார். மரணமடைந்தவர்களின் நலன்களைக் கவனிக்கவென S.L.M.C சார்பில் சட்டத்தரணி N. M. சாஹிட் முற்பட்டிருந்தார்.

இந்த ஆணைக்குழு, விசாரணையின் பின் அஷ்ரப்பின் மனைவியான பேரியல் அஷ்ரப்புக்கு 5மில்லியன் ரூபாய்களும் அஷ்ரப்பின் மகனான அமான் அஷ்ரப் (இவருக்கு 18 வயதுக்கு மேலாகிறது, தொழில் செய்கிறார்) இற்கு 2 மில்லியன் ரூபாய்களும் நட்ட ஈடாக வழங்க பரிந்துரை செய்தது. S.L.M.C சார்பில் முற்பட்ட திரு. சாஹிட், அஷ்ரப்பின் தாயாரான மதீனா உம்மாவுக்கு 1 மில்லியன் நட்ட ஈடு வழங்க வேண்டும் என்று வாதிட்டிருக்கிறாரே யொழிய விபத்தில் (?) கொல்லப்பட்ட ஏனையவர்களின் குடும்பங்களைப் பற்றி அக்கறை யெடுக்க வில்லை.

இவர்களில் பிளைற் லெப்.S. V. பெரேரா , பிளையிங் ஒப்பிசர் R.P.S அந்திராதி ஆகியோருக்கு தலா 1 மில்லியன் ரூபாய்களும் கோப்பிரல் G .R. வீரக்கோன் லீடிங் ஏயா கிராப்ற்மான் W. A. J.S. ஆரியசேன, கண்ணர் W.M. ரூபசிங்க ஆகியோருக்கு தலா 500,000 ரூபாய்களும்காப்புறுதிக் கொடுப்பனவுகளாக கிடைத்தன. ஆணைக்குழுவால் நட்டஈடு ஏதும் வழங்கப்படவில்லை. அஷ்ரப்பின் ஏனைய பணியாளர்களுக்கும் தீவிர ஆதரவாளர்களுக்கும் ஏதுமே கிடைக்கவில்லை.

ஆணைக்குழுவானது அஷ்ரப்பின் குடும்பத்தின் மீது மட்டுமே கவனம் செலுத்தியதாக ஹக்கீமின் செயலாளர் ஹஸன் அலி கூறினார். இந்த விபத்தில் கொல்லப்பட்ட சிவிலியன் களை ஆணைக்குழு கவனிக்காமல் விட்டு விட்டது என்று ஹக்கீம் ஒப்புக்கொண்டார். ஆணைக் குழுமட்டுமல்ல, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசோ அல்லதுஅப்போது அதன் கேள்விக்கிடமில்லாத தலைவராக இருந்த ஹக்கீமோ அவர்களது நலன்களைப்பற்றி அக்கறைப்படவில்லை என்பதே உண்மையாகும். இவர்களது குடும்பங்கள் இப்போது எங்கே இருக்கின்றன என்று ஹக்கீமுக்கோ அல்லது (உடைவுக்கு முந்திய) முஸ்லிம் காங்கிரசுக்கோ சொல்லமுடியவில்லை. எந்த அடிப்படையில் இந்த பிரமாண்டமான இழப்பீடு பரிந்துரை செய்யப்பட்டது என்று கூறுவதற்கு ஆணைக்குழுத்தலைவர் மறுத்துவிட்டார். இந்த நட்டஈடுகள் எவ்வளவு பிரமாண்டமானவை என்று உணர்வதற்கு



அஷ்ரப்பை விட முக்கியமானவர்கள் கொல்லப்பட்டபோது வழங்கப்பட்ட இழப்பீடுகளை ஒரு ஒப்பீட்டுக்காவது பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும்.

01. சிறிமானி அத்துலத்முதலி (1993)- 600.000
02. ஹேமா பிரேமதாச (1993)-600.000
03. சிறிமா திஸா நாயக்கா-600,000
04. லலி கொப்பேக்கடுவ -75,000
05. மானெல் விமலரத்தின -75,000

இதில் மேஜர். ஜெனரல் கொப்பேக்கடுவ, பிரிகேடியர் விமலரத்தின ஆகியோரின் பிள்ளைகள் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப் படவில்லை.

பலவருடகால இடைவெளிகளில் வழங்கப்பட்ட இந்த இழப்பீடுகளின் பணவீக்கத்துக்கான சரி செய்தல்களை கருத்திலெடுத்தாலும் அஷ்ரப் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட இழப்பீடு பிரமாண்டமானதாகத்தான் இருக்கும்.

இவ்வாறான பரிந்துரையை செய்யும் படி அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதா என்று ஆணைக் குழுத்தலைவரிடம் கேட்ட பொழுது, அவர் எரிந்து விழுந்திருக்கிறார். இப்படி ஒரு கேள்வி தன்னிடம் ஒரு போதும் கேட்கப்படவில்லை என்றும் தனது நேர்மை சந்தேகிக்கப்படவில்லை என்றும் எந்த அழுத்தத்துக்கும் தான் பணியவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே மேல்தட்டு வர்க்கத்தினரான

**அனபாயன்**

அஷ்ரப்பின் குடும்பத்துக்கு இவ்வளவு பிரமாண்டமான இழப்பீடு வழங்கப்பட ஒத்தாசையாக இருந்த SLMC யும் அதன் தலைவர் ரவூக் ஹக்கீமும் அதே விபத்தில் கொல்லப்பட்ட சாமானியர்களின் நலன் பற்றியோ (இதில் அரைவாசிக்கு மேற்பட்டோர் முஸ்லிம்கள்) அல்லது அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள் என்றோ அக்கறைப்படாத SLMC யும் ரவூக் ஹக்கீமும் இப்போது முஸ்லிம் மக்களுக்கு தலைமை தாங்க முயற்சி செய்வது ஒரு முரண் நகைச்சுவையாக இருக்கிறது அல்லவா?

அதையும் விட யுத்தத்தின் போது அரச படைகளால் அக்கிரமமாகக் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு என்ன கிடைத்தது என்று எண்ணும் போது வயிற்றைப் பற்றிஎரிகிறதல்வா? கிடைக்கின்ற உதவிகளுக்கும் மக்களுக்கும் இடையே நந்திகளாய் குந்திக் கொண்டிருக்கும் அரசு அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

●●

# பெரு வெற்றி விழா



கண்டிவீதியால் யாழ் நோக்கிய திசை முழுவதுமாக வாகனங்களால் அடைத்து நிற்க,பளை நகரம் பிதுங்கி வழிந்தது.


எங்கு பார்த்தாலும் மனித தலைகள். வானம் ஓயாத தூறலிலும் கலையாத கூட்டம். ஒரு பெரிய சன சமுத்திரத்தின் மத்தியில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் நிகழ்வுகளின் அரங்கேற்றம்.

அமைதியாக காலை பத்துமணிக்கு ஆரம்பித்த நிகழ்வுக்கு மதியங்கடந்து மாலை நிகழ்வுக்காக மக்கள் பெருகத் தொடங்கிய போது பளைநகரம் விம்பியழுதது போல மழைத் துளிகள் சொட்டத் தொடங்கின.


*28.04.2003* அன்று திங்கட்கிழமை ஆனையிறவு படைத்தள மீட்பின் மூன்றாண்டையும் தீச்சுவாலை முறியடிப்பு வெற்றியின் இரண்டாண்டையும்கொண்டாடி மகிழ்ந்தனர் தமிழ் மக்கள்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் பளைநகரில் அரணமைத்து கனரக பீரங்கிகளை நிறுத்தி வைத்திருந்த சிறிலங்கா இராணுவத் தளமொன்றை மூன்றாண்டு களின் பின்னர் தமிழர்கள் வெற்றி விழாவைக் கொண்டாடினர். அதிலும் சிறப்பாக அந்தத் தளத்தைத் தாக்கியழித்து கரும்புலியாகிக் கொண்டவர்களின் நினைவுக்கற்கள் அவர்கள் காவியமான காவலரண் முன்னாலேயே அமைக்கப்பட்டிருந்தது. நான்கைந்து எரிந்த பனை மரத் துண்டுகளும் முட்கம்பிச் சுருள்களும் அதை அடையாளப்படுத்தி நிற்கின்றன.

## சில தரிசிப்புக்கள்



ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆயுதக்கண்காட்சியைக் கண்டு உணர்ந்தபோது ஒரு உண்மையை உணரக்கூடியதாக இருந்தது. ஆரம்பத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கைத்துப் பாக்கிகள் எங்கள் போராட்ட ஆரம்பத்தை எடுத்துக்காட்டியது. இறுதியாக நின்று கொண்டிருந்த ஆட்லறிகளின் குழல்கள் எமது போராட்டத்தின் உச்சத்தைச் சுட்டி நிற்பதாகவேபட்டது. அன்று சொந்த உழைப்பையும் பொருள் விற்றுப் பெற்றபணத்துடனும் வாங்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த விடுதலைப் போரை காலத்திற்கு காலம் எதிரியே ஆயுதங்களைத் தந்து வளர்த்துவிட்டது போல அனைத்தும் கைப்பற்றப்பட்ட இடங்களை அங்கு நின்ற போராளிகள் கூறினர். உண்மையிலேயே இந்நிலை தொடர்ந்தால் ஆட்லறிகளுக்கு அடுத்ததாக எதிரி எமக்குத் தரப்போவது எது என்ற கேள்வி மனதில் எழுந்தது.



காலை நிகழ்வில் இடம் பெற்ற சிறப்பான இன்னொரு நிகழ்வு, அனைத்து படைகளினது கொடிகள் அந்தந்த தளபதி களினால் ஏற்றிவைக்கப்பட்டது.

ஆரம்பந்தொட்டு சிறு குழுக்களாகத் தாக்க ஆரம்பித்து வெல்லப்பட முடியாது போன ஆனையிறவை எங்கள் சேனை வென்றெடுத்த நிறைவு நாளைக் கொண்டாடியபோது, ஒரு மரபு இராணுவமாகவே அதை கொண்டாடியது. தமிழர் படையின் ஒரு ஒட்டுமொத்த பலத்தை வெளிக்காட்டிய ஒரு சமர் போலவே இந்நிகழ்வு சமாதான காலத்தில் அமைந்திருந்தது.

யுத்தநிறுத்த காலத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து பெருந்தொகையாக மக்கள் கலந்து கொண்டமை மற்றொரு பேருண்மையை பறைசாற்றியது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னான காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர் புலிகள். இவர்களுக்கு எதிராக எதிரியும் மாற்றுக் குழுக்களும் பல வழிகளிலும் செயற்பட்டு வந்திருந்தனர். அதில் அவர்கள் வென்று விட்டதாகவும் நினைத்துக் கொண்டனர். ஆனால் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களின் இந்தப் பெருவிழாவுக்கான வருகை அவர்களின் எண்ணத்தில் மண்ணை வாரி இறைத்திருக்கும். போரில் வெற்றி வாகை சூடித் தந்த தேசியத்தலை வருக்கு விருது வழங்க மக்கள் முண்டியடித்த காட்சி ஒன்றே போதும் பெருவிழாவின் எழுச்சிக்கும், தமிழர் சேனையின் வெற்றிக்கும்.

**விஜி**

# நேர்நோக்கு

## சமாதானத்தில் உள்ள அக்கறையினால் அல்ல

பொ.ஐ.மு.வில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் ஜே.வி.பி உட்பட சில சிங்கள எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி பேச்சு வார்த்தைகள் தொடர வேண்டும் என முடிவெடுத்திருக்கின்றனவாம். விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதை இடைநிறுத்தி யதையடுத்து இந்த எதிர்க்கட்சிகள் கூடி இவ்வாறான தொரு முடிவை அறிவித்திருப் பதாக செய்திகள் தெரிவித்தன.

சனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலத்தின் ஆரம்பத்தில் நோர்வேயின் அனுசர ணையுடனான பேச்சு வார்த்தைக்கு முன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டன அவ்வேளையில் பேச்சு வார்த்தை நடை பெறுவதற்கான சூழலை ஏற்படுத்துமாறு விடுத லைப்புலிகள் கோரிக்கை விடுத் திருந்தனர்.

அதற்கு அனுசரணை யாக ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத் தத்தை 24-12-2001 அன்று விடு தலைப்புலிகள் அறி வித்த போது, அதனை அவர்களின் பலவீனமாக சந்திரிகா அரசு எடுத்துக் கொண்டது. யாழ்ப் பாணத்தில் புலிகள் மீட்டிருந்த சில பகுதிகளை புலிகள் கடைப்பிடித்த யுத்த நிறுத்தத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி மீண்டும் ஆக்கிரமித் துக் கொண்டது. பின்னரும் ஆனையிறவை ஆக்கிரமித்துக் கொள்வதற்கான பெரும் படைத் தயாரிப்பிலும் ஈடுபட்டு அம்முயற்சி யில் படு தோல்வியையும் சந்தித்தது.

பின்னர் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு வந்து பேச்சு வார்த்தைகளைத் தொடங்கிய போது அவற்றை எவ்வாறேனும் குழப்பிவிடும் பலசதி முயற்சிகளில் ஈடுபட்டது / ஈடுபட்டும் வருகிறது.

முதலாவதாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ஏற்பட்டு விடா திருக்க பல தடைகளை ஏற்படுத் தியதென்றால், முப்படைகளினதும் தளபதி என்ற ரீதியில் கடற்படைத் தளபதியையும் இராணுவத் திலிருக்கும் மேல் நிலைத்தளபதி கள் சிலரையும் பயன்படுத்தி புலிகளைச் சீண்டி யுத்தமொன்றை மீண்டும் ஆரம்பித்துவிட பல சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. புலிகள் பொறுமைகாப் பதன் காரணமாகவே யுத்தம் தவிர்க்கப்பட்டு வருகிறது என்பதை மறுக்கமுடியாது.

இப்பொழுது பேச்சு வார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை யாகவிருக்கும் மீள்குடியேற்றம் சாத்தியமாகாது இருப்பதற்கும் கடும்போக்குக்கொண்ட சந்திரி காவின் தலைமையின் கீழுள்ள சிறிலங்கா படை அதிகாரிகளே காரணமாக இருந்து வருகின்றனர்.

மக்களின் பாதுகாப்புப் படை என தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளும் இவர்கள் தமது பாதுகாப்புக்காக ஏற்படுத் தியிருக்கின்ற பாதுகாப்பு வலயங் கள் வடக்குக்கிழக்கு முழுவதும் குறிப்பாக யாழ்குடாநாட்டிலும் மக்கள் இயல்புவாழ்க்கைக்குத் திரும்புவதற்கு இடையூறாக உள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்தநிலங்களில் குடியிருப் பதற்கான அடிப்படை உரிமையை மறுக்கிறது.

தமிழனத்தின் ஏகபிரதி நிதிகளாகப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைக்காக-புனர்வாழ்வுக்காக முன்வைத்து வரும் மிகமுக்கி யமான திட்டங்கள் எவையும் செயற்படுத்தப் படாதிருப்பதற்கு இவர்களின் இந்த வாதங்களும் முக்கிய காரணமாக இருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தேவையற்ற ஒன்று. நோர்வேயின் அனுசரணை ஆக்கிரமிப்பு, யுத்தம் மூலமே தீர்வு என்று ஜே.வி.பி இடைவிடாது கோஷமெழுப்பி வருகின்றது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த காலம் முதல் அது இதன் அடிப்படையில் போராட்டங் களை ஏற்பாடு செய்துவருகிறது.

பொ.ஐ.மு வினுடனான கூட்டுக்கு கூட இன்றைய பேச்சு வார்த்தையை சனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரத்தின் உதவியுடன் குழப்பிவிடுவதை நோக்கமாகக் கொண்டதாகும். அதாவது இக் கூட்டானது ஐ.தே.மு. ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சியைத் தமதாக்கிக் கொள்வதற்கானதாக இருப்பினும் இது இன்று நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகளை குழப்புவதன் மூலமே சாத்தியமாகும் என்பதை இவ்விரு கட்சிகளும் நன்கு உணர்ந்து கொண்டிருக்கின்றன.

எனவே இவ்வாறான தொரு நிலையில் பேச்சு வார்த்தை தொடரவேண்டுமென இவை ஒன்று சேர்ந்து அறிவிப்பதென்பது சதித்தனமான ஓர் உள் நோக்கம் கொண்டதாகும்.

அதாவது எதிர்க்கட்சிகள் கூட பேச்சு வார்த்தைகளுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் சாதகமாக உள்ளபோதும் விடுதலைப்புலிகளே பேச்சு வார்த்தைகளையும் சமாதான முயற்சிகளையும் முறித்தனர் என்ற பழிச்சொல்லை சொல்வதற்கான முன்னோடி நடவடிக்கையே இதுவாகும்.


சமாதானப்பேச்சு வார்த் தைகள் சுமுகமான நிலையில் செல்கையில் அதற்கு எதிராகப் போராடிய இவர்கள் இன்றைய இறுக்கமான நிலையில் பேச்சு வார்த்தை தொடரவேண்டு மென அறிவிப்பதன் நோக்கம் இதுவேயாகும்.

புலிகள் தமது நிலைப் பாட்டை தெளிவாக விளக்கி யுள்ளனர். அதாவது பேச்சு வார்த் தைகளில் மனப்பூர்வமாக ஈடுபடும் அதே வேளையில் இப்பேச்சுக் களில் எடுக்கப்படும் முடிவுகள் நேர்மையான முறையில் செயற் படுத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் தெளிவு படுத்தியுள்ளனர். அதற்கான அவகாசத்தையும் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் பேச்சுக் களைத் தொடரவேண்டும். முன்ன ரைவிடத் தீவிரமாகத் தொடர வேண்டும் என்றெல்லாம் பொ.ஐ.மு வும், ஜே.வி.பி.யும் கூறுவ தெல்லாம் சமாதானத் தீர்விலும் சிறிலங்காவின் எதிர்காலத்திலும் கொண்ட அக்கறையினால் அல்ல என்பது மட்டும் உறுதி.

**வேலவன்**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –16



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –16

.......................................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 15



**பூ. சுபானந்த்,**
**1ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள

**சாதனை வீரனோ - அன்றி**
**சரித்திர நாயகனோ - அன்று**
**சாய்ந்ததுவோ சாயம் உனக்கு இன்று - இதை**
**தாங்கிடுமோ நெஞ்சம் எமக்கு....**

### பாராட்டுக்குரிய வரிகள்

கருமேகங்கள் சூழ்ந்தபோது கழுகுகள் கவ்வியது
உன் தலையை, காகங்கள் கத்தியது ஆனால்
காக்க முடியவில்லையே - இவன் தாய் நாட்டிற்கு
தர்மம் செய்தவனோ. பொறு தலை நிமிர்ந்தால்
தருவான் தலையீடு உனக்கு.

ம. கலாநிதி,
நெற்றோ,
மந்துவில், புதுக்குடியிருப்பு.

மகான்களுக்கு மட்டுமல்ல
மண்ணில் - சிலை - இன்று
தலைசிறந்த பேரினவாதிக்கும்
உண்டு தலைல்யில்லாச் சிலை.

ரவிசோசினி,
அம்மன் வீதி,
வற்றாப்பளை

மானிட சிரசுக்கே ஆபத்தான இக் காலத்தில்
சிலைக்கு சிரசு உடைக்கப்பட்டது
மானிட பிறவிகளுக்கு பெரிதாக இருக்குமா?
அன்னியன் எம் தமிழ்மண்ணை ஆழும்வரை.

த.நிசாந்,
இல :- 189,
கந்தபுரம்,கிளிநொச்சி.

உயிருடன் தான் எம் இனத்தின் தலையை
கொடிய சிங்களவன் வெட்டினான்.
ஆ!உயிரற்ற உன்தலையையும் வெறியன்
வெட்டி விட்டான் இதுவும் உன் விதியா?

யசோதா.
இல.79 கட்சன்வீதி,
வட்டக்கச்சி.

தலைக்காயிரம் தருவோமென்று
விரோதிகட்கு விலையேறிப் போனதால்
நாட்டில் பெரியோர்கள் சிலைக்கும்
தலையின்றிப் போனதுவோ.

கனகாம்பிகை கலைரவி
இல :- 67,
இரணைமடுச்சந்தி

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
12.02.1934

ஆண்டவன் அடியில்
02.04.2003



**அமரர் திரு. முருகேசு பரமானந்தம் (பழனி)**
(யாழ்மாநகரசபை முன்னாள் நடுக்கட்டு உத்தியோகத்தர்)

*அன்பான எங்கள் தந்தையே...*
*எங்கே உமை நாம் தேடுவோம்*
*வசந்தத்தை தொலைத்து விட்டு - நாம்*
*வாடிப்போய் நிற்கிறோம்.*

02.05.2003 இன்று எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் - மதிய போசனத்திலும் கலந்து கொண்டு எமது குடும்பத் தலைவரான அமரரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்க உற்றார்;உறவினர்; நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நிரந்தர முகவரி:**
**கலைவாணி மில் ஒழுங்கை**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்,**

**தகவல் : குடும்பத்தினர்**
**சூசையப்பர் 3ம் ஒழுங்கை**
**10ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு ~ முல்லைத்தீவு**

(சி -7861)



## ஆசிரியர்தேவை

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் கல்விகற் பிப்பதற்கு (ஆங்கிலம்,கணனி) தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

ஆங்கிலப் பாடத் திற்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் களும் விண்ணப்பிக்கலாம். சேவைக்கான கொடுப்பனவு பற்றி நேரில் பேசிக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:-**

**15.05.2003.**

**விண்ணப்பிக்கும் முகவரி :-**

அதிபர்,
புது/மகாவித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு.

**செயலாளர்:-**

பழையமாணவர் சங்கம்,
புது/மகாவித்தியாலயம்.

(சி -7862)

# MAY-01



சிட்னியில்

உலகத் தொழிலாளர் தினம் தொழிலாளர்களுக்கு உரிமை கேட்டுப்போராட ஒரு நாளை வழங்குகின்றது என்பது 2002ம் உலகின் பல பாகங்களில் இடம்பெற்ற மேதின நிகழ்வுகளைப் பார்க்கும் போது தெளிவாகிறது. மக்கள் சீனாவில் 2002 மேதினக்கொண்டாட்டம் தியன்மென் சதுக்கத்தில் நடைபெறுகிறது.





பாரிஸில்



பிலிப்பைன்ஸில்



யப்பானில்

படங்கள் 2002

## இது எப்படி இருக்கு !



உல்லாசமாக தனது காரை ஓட்டிக்கொண்டிருந்தவர் தனது காரின் பக்கக்கண்ணாடியைத் திடீரெனப்பார்த்த போது அவர் கண்ட காட்சி இரத்தத்தை உறைய வைத்தது. ஆப்பானிஸ்தானில்அமெரிக்கப்படைகள் தாக்குதலில் ஈடுபட்டபோது காபூல் பகுதியில் கைப்பற்ற படம் மேலே.

விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் பேர்ளினில் உள்ள உலகப்பிரசித்தமான பிரான்டென்பேர்ஜ் நுழைவாயில் முன்பு.




பயோட்டினெக்ஸ் - E

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது

அழகிய கூந்தலின் ரகசியம்

எது உங்கள் பிரச்சினை ?



இயற்கையான பயோட்டினெக்ஸ் –E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பயோட்டினுடன் விட்டமின் – E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்




பாவனை முறை
தினம் 2கப்சியூல்ஸ் 3மாத காலத்திற்கு பாவிக்கவும்

பக்கவிளைவு அற்றது

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மசி;
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

யாழ் முகவர்:
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎021 2223191

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By: Arkem Colombo
Tel:470290, 075-344436 Email : arkem@sltnet.lk

BIOTINEX-E



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.